426

தகர்த்தா
ரகர்த்தா } வை. மு. கோதை நாயகி அம்மாள்.

# JEGAN MOHINI

# ஜெகன்மோகினி

THE REGISTRAR OF BOOKS
15 MAR 1927
MADRAS

மலர் III 1926 இதழ் 12



JL
ஊ211,N22JM
N26'3'12
182829

கன்மோகினி ஆபீஸ்,
26 கோடித் தெரு,
திருவல்லிக்கேணி, மதருஸ்.

குறிப்பு:—ஒவ்வொரு மாதமும் கடைசித்தேதிக்குள் சஞ்சிகை வெளியாகும்.

# இனாம்! இனாம்!

# முற்றிலும் இனாம்!

‘C’ ரிஜிஸ்டர்! ‘C’ ரிஜிஸ்டர்!

டைம்பீஸ் டைம்பீஸ்




இனாம். இனாம்.

எங்களின் “தாரா” லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் கடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை, வாங்குகிறவர்களுக்கு ‘C” டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக் கடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்

## பாதி விலை! ஒரு மாதம் வரையிலும் பாதி விலை!

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7.




22 காரட் ரோல்ட்டு கோல்டுகைக் கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் நெ. **508**, பி. டி. மதராஸ்

# வைதேகி

## ஓர் அபூர்வத் தமிழ் நாவல்

(இரண்டாம் பாகம்)

OFFICE OF THE REGISTRAR
15 MAR 1927

வை. மு. கோதைநாயகி அம்மாள்

நூலாசிரியை

பிரசுரிப்பவர்கள்

"ஜெகன்மோகினி ஆபீஸ்"

திருவல்லிக்கேணி, சென்னை.

1926

காபிரைட்] [விலை. ரூ. 1-4-0.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182824
சென்னை 600 008

எனதன்புமிக்க சகோதர சகோதரிகாள்!

உங்களுக்கு மிகுந்த விநயத்துடன் தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பம்.

இந்த 12.வது சஞ்சிகையைத் தங்களுக்கு நான் சென்ற மாதக் கடைசியிலே அனுப்பவேண்டிய கடமையிருந்தும் எதிர்பாராத இடையூறுகளினால் தாமதமாய் விட்டதைப்பற்றி மிகவும் வருந்துகின்றேன். எனக்கு 2-மாத காலமாக கண்ணில் உபத்திரவம் ஏற்பட்டு அர்த்தப்பாதையால் வைத்தியரிடத்தில் மருந்து போட்டுக்கொள்வதுபற்றி, 1.மாத காலம் எழுதப் படிக்க ஒன்றும் செய்யலாகாதென்று வைத்தியர் கூறியிருந்தபடியாலும் மெய் வருத்தம், மன வருத்தம் ஆகிய இவ்விரு வருத்தமும் தோன்றி வேலையை துரிதமாக வோடவிடாமல் தடை ஏற்பட்டு குறித்த நேரத்தில் சஞ்சிகையை அனுப்பஇயலாவண்ணமாய் விட்டது. 1.மாதகாலம் மருந்து போட்டுக்கொண்டதில் கண் முக்கால்பாகமும் குணமாகிவிட்டது. உடனே எழுதத்தொடங்கி என்னாலானமட்டும் வேலையைத் துரிதமாகவே நடத்திவந்தேன். அப்படியிருந்தும் அச்சாபீஸில் வேலை நச்சாய் நடந்ததனால் தங்களிச்சைப்படி முன்னதாக அனுப்ப இயலாது மாதம் பிறந்தும் சில தேதிகளாய்விட்டன. இந்த எதிர்பாராத இடையூறுகளைப்பற்றி அறிவிற் சிறந்த தாங்கள் எல்லோரும் அடியாளை மன்னிக்க வேண்டுமென்று வெகுவாய் மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றேன். மேற்குறித்த காரணங்களினாலேயே சஞ்சிகை தடைபட்டு வெளிவந்தது என்பது இங்கு அருகிலுள்ளவர்கள் அறிந்த விஷயம். வெளியூரிலுள்ள சகோதர சகோதரிகளுக்கு இவ்விஷயம் எவ்வாறு தெரியவரும்? ஏதோ அனுவசிய கால தாமதமாவதாகவே அவர்கள் நினைக்கக்கூடுமாகையால் நான் உள்ள காரணத்தை எடுத்துரைத்தேன். இன்னமும் மருந்து போட்டுக்கொண்டே வருகின்றதால் கூடிய சீக்கிரத்தில் கண் முற்றிலும் குணமாய்விடும் என்று நினைக்கின்றேன். கடவுளின் திருவருளையும், பெரியோரின் ஆசீர்வாதத்தையும் முன்னிட்டு சஞ்சிகையை காலக்கிரமத்தில் வெளியிடவேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டுளேன். ஆயினும் மானிடப் பிறவியன்றோ? அப்படி தப்பித் தவறி சிலதினங்கள் எதிர்பாராமல் நேரிடும் தாமதத்திற்கு மன்னித்து உங்கள் ஆதரவினால் நிகழ்கிற ஜகன்மோகினியை என்றும் ஆதரிப்பீர்களென்று நம்புகின்றேன்.

நிற்க, யான் கல்வியில் பயின்றவளன்று என்பதை முதல் விக்ஞாபனத்திலேயே வெளியிட்டிருக்கின்றேன். யானோ வடகலையின் வாசனையை சிறிது மறிகிலேன். தென்கலையின் தேர்ச்சியைப்பெற்றிலேன். மேற்கலையின் (இங்கிலீஷின்) மேன்மையை சிறிதும் தெரிந்திலேன். இத்திருப்பணியை யான் என்பொழுது போக்கிற்காகச் செய்து

வருவதேயன்றி சகல பாஷைகளிலும் வல்லவள் என்று சொல்லிக் கொண்டு ஆரம்பித்தவளல்லேன். நான் கேவலம் அறிவிலி. அதிலும் பேதை. யான் இயற்றியுள்ள இப்புத்தகத்தில் சொல்குற்றம், பொருள் குற்றம், வாக்கியப்பிழைகள், அச்சுப்பிழைகள் ஆகிய இன்னும் எத்தனையோ பிழைகள் தெரிந்தும் தெரியாமலும் நிறைந்துகிடக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கல்வியில் தேர்ச்சியடைந்த புலவர்கள் யாதையுமறியாப் பேதைஇயற்றியுள்ள காதையிடத்தில் குற்றம் கண்டு பிடிக்கவேண்டுமென்று முன்வந்தால் இந்தப்புத்தகத்தின் நாமாவாகிய வைதேகி என்ற பெயரைத் தவிர மற்ற எல்லாவற்றையும் குற்றமாகவே கண்டுபிடிக்கலாம். அவ்வளவு குற்றங்கள் இதிலிருக்குமேயன்றிகுற்றமற்றதாக இருக்குமென்று நான் ஒருபோதுங் கூறியதில்லை. எப்பேர்பட்ட மேதாவிகளியற்றும் நூல்களிலும் தம்மை யறியாமல் எவ்வளவோ குற்றங்கள் விழுந்துவிடுகின்றனவென்றால், கேவலம் பேதையாகிய நான் எழுதியுள்ள நூலில் பிழைகள் இருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? மேலும் இந்த நாவலையானியற்றும் பிரதம நூலாகையாலும், அனுபவக் குறைவினாலும், ப்ரூப் முதலியவை பார்ப்பதில் இன்னும் நன்றாய் பழக்க மின்மையினாலும் இப்புத்தகத்தில் அநேக பிழைகள் காணப்படலாம். அடுத்த ஆண்டில் வெளியாகும் புத்தகத்தை என்னாலானமட்டும் அச்சுப்பிழையின்றி வெளியிட முயற்சி செய்கின்றேன். அறிவிற் சிறந்தவர்கள் இத்தகைய நூலிலிருக்கும் பெரும்பான்மையுள்ள குற்றங்களை விலக்கி ஏதேனும் சிறுபான்மையுள்ள குணங்களைக் கொண்டு இதனை மேன்மேலும் ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கின்றேன்.

“ குற்றங்களைந்து குறைபெய்து வாசித்தல்
கற்றறிந்த மாந்தர் கடன்.”

என்பதனாலும் அன்னபக்ஷியானது பாலில் கலந்துள்ள நீரை விலக்கி விட்டுப் பாலை மாத்திரம்பருகுவது போலவும், அறிவிற்சிறந்தவர்கள்

தாங்கள் எத்தனையோ புலவர்களியற்றியுள்ள நாவல்களை எல்லாம் படித்து அவற்றின் சுவையை மென்று தின்றிருக்கலாம். அத்தகைய இனிப்புவாய்ந்த புத்தகங்களைப் படித்த தங்களுக்கு இதுபோன்ற எனது நூலைப் படித்ததனாலன்றோ. அவற்றிற்கு உயர்வும் நன்கு மதிப்பும், புசிக்கும் பக்ஷணத்தைப் போன்ற ருசியும் மிகும்? நிழலின் அருமை வெயிலில் உழன்றவன் அறிவதுபோல நான் இயற்றியுள்ள நூலைப் படித்தவர்களுக்கு பிறரியற்றும் எந்த நூல்களும் மிக இனிப்பையுண்டாக்குமென்றே நான் நினைக்கின்றேன்.

நிற்க, குலசேகராழ்வார் ஒரு சுலோகத்தில் ஈச்வரனைத் தியானித்து “ஏ! பரம்பொருளே! என்னை உன்னடியார்களுக் கெல்லாம் அடிமை செய்யும் கடையனாகவாவது பாவித்து உன்னடிக்குப் பாத்திரமாக்கிக் கொள்ளவேண்டும்” என்று

பிரார்த்திக்கிறார். அதுபோல யான் கூறுவதாவது:— தாங்கள் படித்துள்ள புலவர்களின் சகலமான நூல்களுக்கு முன் யானியற்றும் நூல் ஒரு பொருட்டாயிராதென்பது நிச்சயமாயினும் தாங்கள் படித்துள்ள, படிக்கப்போகும் நூல்களுக்கெல்லாம் கடையதாக இந்நூலை எண்ணி அதை பொறுமையோடு இதுகாறும் படித்துவந்த மாதிரி இனிமேலும் படித்து, இக்கடைய நூலில் கிடக்கும் குற்றம் குறைகளைக் களைவதோடு அடியாள் இனிமேலியற்றும் நூல்களைச் சிறப்பிக்கச் செய்வீர்களென்று நம்பியே நமது ஜெகன்மோகினியின் நான்காவதாண்டில் சாக்ஷாத் ஸ்ரீ மகாலக்ஷ்மி அவதாரமாகிய தாமரையின் திருநாமத்தை முதலில் பதித்து, பிறகு ஓர் ஆண்பாலின் நாமத்தையும் சேர்த்து, அந்நூலிற்கு "பத்மசுந்திரன்" என்ற மகுடத்தைச் சூட்டி வெளியிடத் துணிந்துள்ளேன். தம்மின் குழந்தைகள் செய்யும் தவறுதலைத் தாம் கண்டித்து, சீர்திருத்தி, மேன்மேலும் விருத்தியடையச் செய்வது தம்முடைய கடமையைப்போல தங்களின் சேயாகிய நமது "ஜெகன் மோகினிக்கும்" அடியாளுக்கும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் விளைவித்து, குற்றம் பொறுத்து, குணம் மேற்கொண்டு என்றும் கைவிடாமல் எங்களை ஆதரிப்பீர்களென்று நம்புகின்றேன்.

அடுத்த ஆண்டின் முதல் சஞ்சிகையை அடுத்த மாதக் கடைசிக்குள் வெளியிடுகின்றேன். இச்சஞ்சிகை தாமதமாய் விட்டபடியால் அந்த சஞ்சிகையும் தாமதமாய்விட நேர்ந்ததைப்பற்றி மன்னிக்க வேண்டும். 2-வது சஞ்சிகையை முன் கூறியதுபோல 15 தேதிக்குக் கட்டாயம் வெளியிட்டு விடுகின்றேன். சிறிது எதிர்பாராத தாமதமேற்பட்டு விட்டதைப்பற்றி எல்லோரும் அடியாளை க்ஷமித்து தமது சந்தா பணத்தை, ரூ. (1-8-0) அனுப்பி உதவிபுரியவேண்டுமாய்க் கோருகின்றேன். வி. பி. யில் அனுப்பினால் தங்களுக்கு அதிகமாக 3 அணா செலவாவதுபற்றி மணியார்டர் செய்து பெற்றுக்கொள்வதே நலமென்று நினைக்கின்றேன்.

நிற்க, நமது சந்தா நேயர்களில் பலர் நமது சஞ்சிகையை அடுத்த ஆண்டிலும் கைவிடாது நடத்த வேண்டுமென்று எமக்கு ஊக்கத்தை விளைவிக்கக்கூடிய அநேக கடிதங்களை எழுதிவிடுத்தும், சிலர் முன் பணம் அனுப்பியும், உறுதி மொழிகளைக் கொடுத்து தைரியப்படுத்தியதற்காக எனது மனமார்ந்த வந்தனத்தை அவர்களுக்கு இதன் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் அக்கடிதங்களை இச்சஞ்சிகையில் பிரசுரிக்க வேண்டுமென்று அன்புடன் தெரிவித்தும் இம்மாத சஞ்சிகையே சுமார் 11 பாரங்களுக்கு மேல் ஆய்விட்டபடியாலும், அந்தக் கடிதங்களெல்லாம் குறைந்தது 7, 8 பாரங்களுக்கு ஆகுமாதலால், அவற்றை இந்த சஞ்சிகையில் பிரசுரிக்க இயலாமல் போனதுபற்றி மிகவும் வருந்துகின்றேன். ஆதலால் கடிதம் அனுப்பிய நண்பர்களெல்லோரும் அவற்றைப் பிர

சுரிக்கவில்லையே என்று வருத்தப்படாதிருக்கும்படி அடியாள் மிக விநயத்துடன் கேட்டுக்கொள்கிறேன். எம்பெருமானின் திருவருளினுலும், ஆன்ரோரின் அநுக்கிரகத்தினுலும் நமது வைதேகியின் ஈராறு திங்களும் சீராய் முடிவுபெற்றன. அவற்றிலுள்ள குற்றமோ குறையோ எல்லாவற்றையும் பொறுமையோடு படித்து ஆதரித்து வந்த நமது நேயர்கள் "பத்மசுந்திரனை"யும் ஆதரிப்பார்களென்று நம்புகின்றேன்.

நிற்க, பிழைகளே நிறைந்து கிடக்கின்ற வைதேகியில் "மணற்சோற்றில் கல்லாராய்வது" போல் நமது சந்தா நேயருள் ஒருவர் பல குற்றங்கள் கண்டுபிடித்திருப்பதாயும் அவற்றை வெளியிடப் போவதாகவும் கேள்வியுற்றேன். இத்தகைய பிழைகளுள்ள புத்தகத்தைத் தமது வேலையையும், கஷ்டத்தையும் பொருட்படுத்தாது ஆதியோடந்தமாய்ப் படித்துத்தானே குற்றம் கண்டுபிடித்திருக்க வேண்டும்? அத்தகைய புலவர் இதையொரு பொருட்டாய் எண்ணி முழுதும் படித்ததற்காகவும், குற்றங்களை விளக்கிக்காட்டுவதற்காகவும் நான் அன்னவருக்கு மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். ஏனெனில், இந்த புத்தகத்தையே அடுத்த பதிப்பில் அப்புலவர் காட்டப்போகும் குற்றங்களின்றி சுத்தமாய் வெளியிடலாம். இனிமேல் எழுதப் போகும் புத்தகங்களில் அத்தகைய பிழைகள் விழாமல் எழுதுவதற்கு அநுகூலமாயிருக்கும். ஆதலால் இத்தகைய பரோபகாரம் செய்யும் நண்பர் இன்னாரென விளங்காமலிருந்தாலும் அவருக்கு என் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்வது கடமையாதலால் இதன் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏதோ என் சிற்றறிவிற்கு எட்டியவாறு யான் இக்கதையை என்னால் கூடியமட்டில் நினைவு படுத்தி எல்லா விஷயங்களையும் சரிவர முடித்திருப்பதாகவே நினைக்கின்றேன். ஆயினும் "தன் முதுகு தனக்குத் தெரியாது" என்பதுபோல எனக்கு நினைவு மறதியால் ஏதேனும் விஷயங்கள் விட்டுப்போயிருந்தால் அதற்கு என்னை மன்னித்து அவைகளை அடியாளுக்குஎடுத்துரைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த ஆண்டிற்கு 5-சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுக்கும் நண்பர்களுக்கு ஒரு வருஷத்து சஞ்சிகை இனமாகக் கொடுப்பதோடு வைதேகியின் 2-பாகங்களும் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும். 15-பேர்களை சேர்த்துத் தரும் நேயர்களுக்கு ஒரு வருஷ சஞ்சிகையும், வைதேகி இரண்டுபாகங்களும் இனமாகக்கொடுக்கப்படும். அடுத்த மாதம் 30-தேதிக்குள் சேருகிற சந்தாதாரருக்கு வைதேகியை குறைந்தவிலைக்குக் கொடுக்கப்படும். ஏதோ பேதை செய்துகொண்ட விண்ணப்பத்திற்கு செவிசாய்த்து ஆதரிப்பீர்கள் என்று நம்பும்,

தங்கள் சகோதரி

வை. மு. கோதைநாயகி.

# மதிப்புரை.

## NEW INDIA

This is an interesting Tamil Novel dealing with some aspects of the social evil. There is a graphic description of the woes of a trafficker in the white slave trade caught by the police in the act. The reader's interest is sustained throughout, and coming as it does from the pen of a lady, it is particularly creditable to her.

## கிருஷிகன்

"ஜெகன் மோஹினி" என்னும் மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை வந்தனத்துடன் வரப்பெற்றோம். எமது பார்வைக்கு அனுப்பப்பட்ட ஜெகன் மோஹினியில் இதன் கிரந்தகர்த்தாவும் ஆசிரிய கர்த்தாவுமாகிய ஸ்ரீமதி. வை. மு. கோதை நாயகி அம்மாளவர்களால் எழுதப்பட்ட "வைதேகி" என்னும் நாவல் வரையப்பட்டு வெளிவருகிறது. இந்நாவல் இன்னும் முடிவாகாததால் இதைப் பற்றி விவரித்து எழுதுவதற்கு அசக்தராயிருக்கிறோம். ஆயினும் நாம் வாசித்த வரையில் நமது நாட்டுப் பெண்மணிகள் அறிந்துகொள்ள வேண்டிய பல உலக அநுபவங்களும், படிப்பினைகளும் நிறைந்திருக்கின்றதென்று சந்தேகமில்லாமற் சொல்லலாம். "வைதேகி" என்னும் நாவலானது சுலபமான நடையில் அற்ப வாசிப்புள்ள பெண்மணிகளும் அறிந்துகொள்ளக்கூடிய விதமாய் எழுதப்பட்டு வருகிறது; கதைப்போக்கும் வாசிப்போரின் மனதைக் கவர்ந்து செல்லுகின்றது. மாதம் டெம்மி 5 பாரங்கொண்ட சஞ்சிகையாக வெளியாவதால் வருஷத்திற்கு 60 பாரம் அல்லது 480 பக்கம் கொண்ட நாவலாகிறது. இதன் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. 1-8-0 தான். ஆகவே அணுவுக்கு டெம்மி 20 பக்கம் விஷயம் நயமென்றே சொல்ல வேண்டும். ஒரு கதையை மூன்று நான்கு பாகங்களாக எழுதி ஒவ்வொரு பாகத்திற்கும் ரூ. 1-8-0 முதல் ரூ. 2 வரை விலை வைத்து அக்கதைக்கு ரூ. 7 அல்லது 8 வசூலிக்கும் சில சுயநல கிரந்த கர்த்தாக்களைப் போலல்லாது பொது ஜன உபகாரத்தைக் கருதி தனது கஷ்ட நஷ்டங்களைக் கருதாது வெளிப்படுத்தும் ஸ்ரீமதி. வை. மு. கோதை நாயகி அம்மாளுக்கு நீண்ட ஆயுளையும், நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும் கொடுத்தருளும்படி சர்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் எழுத வாசிக்கத் தெரிந்த ஆண், பெண் ஆகிய இருபாலாரும் இம்மாதாந்திரப் பத்திரிகைக்குச் சந்தாதாரராய்ச் சேர்ந்து இந்த அம்மையாருக்கு மேன்மேலும் உற்சாகத்தை உண்டாக்கி "வைதேகி" போன்ற பல கதைகள் எழுதும்படி தூண்டுவார்களென்று நம்புகிறோம்.

குறைந்த விலை ! அபூர்வ விஷயம். சுத்தப் பதிப்பு !!

ENGLISH SELF INSTRUCTOR Rs. 1-8-0.




## இங்கிலீஷ் உபாத்தியாயர்

அல்லது

இங்கிலீஷ் கற்கும் வழி

நாவல் உலகத்தில் பிரசித்தி பெற்ற

வடுவூர் - கே. துரைசாமி ஐயங்கார் அவர்களின்

முகவுரையுடன் கூடியது

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்களின் உச்சரிப்பு நன்றாக விளங்கும்படி வெளியிடப்பட்டிருக்கின்றது. உபாத்தியாயர் இல்லாமலே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். பெண்பாலர்களும் சுலபமாய்க் கற்றுக்கொள்ளலாம்.

தி. மதராஸ் நாவல் டிபோ,

3, இருசப்பன் சந்து, மின்ட் பில்டிங்ஸ் மதராஸ்.

வெளிவந்துவிட்டது ! இரண்டாம்பதிப்பு ! ! வெளிவந்துவிட்டது ! ! !

# எனது அரிய நன்மொழி.

கடலாடை யுடுத்த பூமகள் வாணுதற்றிலகம்போல் விளங்கும் இச்சென்னை ராஜதானியில் "நாவல்" என்றும் ஆங்கிலப்பெயரோடு பல நவீனங்களும், துப்பறியும் நாவல் என்னும் அபிதானத்தோடு சில நவீனங்களும் ஆயிரக்கணக்காய் பிரசுரமாகி, நாடு காடெல்லாம் மூலை முடுக்கெல்லாம் இறைந்து குழமியிருக்கும் இந்நவீன நாகரீக காலத்தில், திருவல்லிக்கேணியிலுள்ள சகோதரி, ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாளால், இயற்றப்பட்ட "வைதேகி" என்ற நூலின் 11 சஞ்சிகைகள் எம் பார்வைக்கு கிடைக்கப்பெற்று அவற்றை யாமாராயப்புகும் ஒரு பெருந்தருணம் வாய்த்தமை பற்றிக் களிப் பெய்தினேம்.

ஆங்காங்கெடுத்தாளப்பெற்ற ஆதியமைப்பு ஒரு சிறிதேனும் மூரண்படாது, இசை நுணுக்கச்சந்தச்சுவை பொருந்துமாறு அமைந் திருக்கிற ஒரு சிறிய நூலாயும் பலவாற்றானும் புராதன சுதந்த ரங்களை இழந்துநின்ற இந்திய மக்களாகியநாம் ஒற்றுமை யுணர்ச்சி பெற்று, நமக்கு ஏற்பட்ட கற்பை விற்பனை செய்யாவண்ணம், கங்க ணம் கட்டி உண்மையாய் பாடுபட்டுவருகிற பல பக்தர்களையும் அவர்களது அற்புதச் செய்கைகளையும்பற்றி நினைக்குந்தோறும் பக் திச்சுவை பெருகித் தேச உணர்ச்சியும் மன ஊக்கமும் எழுப்பவல்ல ஒரு பெரிய நூலாயுமிருக்கிறது.

கல்வி யறிவை யடையாத மன்மதைகள், ஆணோ பெண்ணோ, எண்ணவும் எழுதவும் முடியாத கேவலம் இழிஜனர்களாகவே கருதப் படுவார்கள், என்றிருக்கையில் சில மந்த மதியினர் "அடுப்பூதிப்பெண் களுக்குப் படிப்பென்னத்திற்கு" என்று தங்கள் ஊத்த வாயைத் திறந்து உளரிக் கொட்டுகிறார்கள். அந்தோ! இவர்கள் மதியிருந்தவா றென்னே! சிறு குழந்தைகள் தங்கள் அறியாமையாகிய பாலப் பரு வத்தில், தந்தை யிடத்திலோ தாயிடத்திலோ பற்றுடையோராயிருக் கின்றனர். தாயிடத்திற்றான் அதிக பற்றுடையோராயிருக்கின்றன ரென்பது எவரு மொப்ப முடிந்ததொன்றாம். தாய் கல்வியறிவில் லாத மூடமாயிருந்தால் இளங் குழந்தைகள் தினே தினே, நல்லொ ழுக்கததிற் பழக என்ன உதவி செய்யக்கூடும்? கல்வியறிவில்லாத ஒரு ஸ்திரீ தனது மகன் மகா சிரத்தையாய்க் கணக்கு பார்த்துக் கொண்டிருந்தபோது அப்பையனுடைய மூடத்தாய் ஏதோ வேலை செய்யக் கூவியபோது பையன் கணக்கை கவனித்துக்கொண்டு ஒரு நிமிஷம் தாமதப்படவே அம்மாது ஓடிவந்து அக்கணக்கை துண்டு துண்டாய்க் கிழித்து எறிந்து விளக்குமாற்றால் கூட்டிப் பெருக்கிக்

கழித்து வகுத்து ஒரு நிமிடத்தில் கூட்டல், பெருக்கல், கழித்தல், வகுத்தல் என்னும் நான்கு வகைக் கணக்கையு முடித்துக் குப்பையிற் கொட்டிவிட்டாள் என்றால் பிள்ளைகளுக்கு மூடத்தாய்மாரால் உண்டாகும் நன்மையைக் கேட்கவும் வேண்டுமோ? ஏதோ நூற்றிலொன்று பிறப்பினால் தந்தை யறிவு சிறிது பொருந்தியிருப்பினும் அக்கூர்மையை மழுக்கி நிர்மூலஞ் செய்வதற்கே மூடத் தாய்மார் பெருந்துணையாக விருப்பார்களென்பதற்குச் சொல்லவும் வேண்டுமோ?

பெண்கள் எழுத வாசிக்கத் தெரிந்திருந்தால் ஆசை நாயகர்கட்குக் காகிதமெழுதி மோசத்துட்படுவார்களென்று முற்றும் பொருந்தாதமூட வார்த்தைகளைச் சில முழு மூட சிகாமணிகள் நாணமின்றிப் பேசுகின்றார்கள். அச்சோ! இவர்களது அறிவின் பெருமையை என்னென்போம்? ஏதோ மழையினுமே அசனியுண்டு; மதிக்குமோர் மறுவுண்டு; மலர்க்கு முள்ளாம் கழையினுமேசக்கையுண்டு,கனிக்குந்தோல்கொட்டையுண்டு, என்ற வண்ணம் அதுவும் கூர்ந்து கவனித்தால் ஒரு சிறிது பொருத்தமாயு மிருக்கக் கூடும். ஒருக்கால் ஒருவன் இரண்டுகாகத்தை ஒருமிக்க வாந்தி எடுத்தானென்ற முழுப் பொய்க் கதையாய் முடியினு முடியும். எழுதத் தெரிந்தால் நிருபம் வரைந்துவிடுவார்களென்ற அச்சமுடையோர் இச்சைக்குத் தலை காரணமாகிய கண்ணை குத்தி கபோதிகளாகச் செய்து விடலாமே; சீன தேசத்தில் பெண்கள் காதலரை நாடி ஓடிவிடுவார்களென்று பயந்து குழந்தைகள் காலில் இரும்பினால் செய்த பூட்ஸ் மாட்டி இருக்கி காலை வளரவொட்டாமற்செய்து முடமாக்கி விடுகிறார்களென்று கேட்டிருக்கிறோமே? அந்தோ! கொடிது! கொடிது!! அறக் கொடிது!!! இத்யாதி காரணங்களால் நம் தமிழ் நாடு பாழடைந்து கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டின் எல்லை தொட்டு இற்றை நாள்வரை, இந்நிலவுலகு செய்த நெடுந் தவத்தினால் இக்காலத்து இது எடுப்பார் கைப்பிள்ளையைப்போல் ஒவ்வொரு பாமரர் வாய்ப்பட்டும் பற்பல இழிவடையா நின்றது.

இதுகாறும் யான் 320 நாவல்கள் வாசித்திருக்கிறேன். துப்பறியும் நாவல்கள் என்பதில் 280 வரையிற் பார்த்திருக்கிறேன். அந்தோ! அம்மம்ம!! அவற்றின் ஆபாசங்களை என்னென்பேன்! துப்பறிதல் என்ற பதத்தின் சாரமென்னஎன்பதை ஒரு சிறிதும் தெரியாமலே அநேகபுத்தகங்களைஎழுதி வெள்ளைக்காகிதத்தில் கறுமையிட்டு வீணே கெடுத்து சிங்காரமான அபிதானங்களைக்கொடுத்து ஜனங்களை மயக்கி பொருளீட்டுகின்றார்கள். முன்னுக்குப்பின் யாதொரு சம்மந்தமுமில்லாமல் அநேக துப்பறியும் நாவல்கள் பிரசுரம் பண்ணிக் கிடக்கின்றன. "ரேனால்ட்ஸ்" என்னும் ஆங்கிலேயப் புலவரெழுதிய புத்தகங்களை மொழிப்பெயர்த்துஅநேக நாவல்கள் வெளியிட்டிருக்கின்றனர்.அந்தோ! பிரணதார்த்திஹர சிவனார் எழுதிய "அனுமான் சிங்" "தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்" என்ற இரண்டு புத்தகங்களும் ஒருவாறு சிறிது யுக்தியாகத்தானிருக்

கின்றன "லண்டன் சாமர்த்தியத் திருடர்கள்" என்ற புத்தகம் "அநுமான் சிங்" என்ற புத்தகமாகவே யிருக்கிறது. எது எதற்குத் தாயென்பது சுவல்ப கல்வியை யுடைய எனது சிற்றறிவிற்குப் புலப்படவில்லை. மற்று, இதுகாறும் வெளிப்பட்டிருக்கும் நாவல்களெல்லாம் "மலடிமகனொருவன் முயற்கொம்பிலேறி கந்தர்வ நகரஞ் சென்று ஆகாயத் தாமரையை வாகாய்ப் பறித்துவந்து விட்டான்" என்பது போன்று ஒரு வீட்டினுள் சந்நியாசி வேஷத்தோடு புகுந்து சில உளவுகளையறிந்து வாசலுக்கு வந்து 15 நிமிடத்தில், கந்தர்வ ஸ்திரீபோல சகலாபரண பூஷிதையாய் மீண்டும் உட்சென்று ஸ்திரீகளோடு கலந்து வேண்டினவற்றை அறிந்து வந்தானென்று கூறுவது சிறிதும் ஒவ்வாத தன்றோ? துப்பறியும் நிபுணர்கள் ஒப்புக்கொள்ளத் தக்க முறையில் இக்கதா நாயகியை பலவகையிலும் மானபங்கம் செய்ய ஒரு திரண்ட ஐஸ்வரிய செல்வந்தனொருவன் ஏராளமான திரவியச் செலவிட்டும் அவனுடைய மனதுக்கிசைந்த நண்பர்கள் பலருடைய ஒத்தாசையைக் கொண்டும் பிறர் அறிவதற்கியலாத வகையில் செய்த அந்தரங்க சூக்ஷமங்களை எல்லாம் யாதொரு ஐயப்பாடும் கொள்ளாமல் எல்லோரும் அங்கீகரிக்கத்தக்க பான்மையாய் துப்பறியும் நிபுணரான "ராஜா ராம்நாயுடு" என்பவர் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் விதத்தைச் சிந்தித்து இசைத்துக் கலந்து எழுதியிருப்பது புகழுதற் பாலது. முந்தைக்காலத்து, முதல், இடை கடை என்ற முச்சங்கமீரிஇய இறையனார், அகத்தியனார், தொல்காப்பியனார், முதலாக நக்கீரனார், இடைக்காடனார், அவ்வை பிராட்டியார், திருவள்ளுவனார், ஈறாக உள சங்கப் புலவர்கள் பல்லாயிரத்துப் பன்னூற்றுப் பல்பத் தென்மர்களைப் பற்றியும் அவர்களியற்றியருளிய, அகத்தியம், தொல்காப்பியம், முதலாக திருக்குறள், நாலடியார் ஈறாக உள்ள பல இலக்கண விலக்கிய நூல்களைப் பற்றியும் சிறிதளவேனுந் தெரிந்துகொள்ளக் கற்றோர்க்கே அரிய தன்மையனவாயிருக்க அவர்களுள் ஒருவராய் அவ்வைப்பிராட்டியாரை மட்டும் நந் தமிழ்நாடு முழுதும் பிறநாடு ஐந்து வயது குழந்தை முதல் நன்குணர்ந் திருப்பதுபோல இக்காலத்தும் தமது வாக்குச் சாதுரியத்தினால் சொற்சுவை பொருட் சுவையோடு உலக மனத்தினும் இன்ப உணர்ச்சியுண்டுபடுத்தவல்ல பல்லாயிர இலக்கிய இலக்கண வித்வ சிரோண்மணிகளுக்கிடையில் இந்நூலாசிரியையான திருவல்லிக்கேணி சகோதரி வை. மு. கோதை நாயகி அம்மாளைமட்டும் நந்தமிழ் நாடு முழுதும் யாழ்ப்பாணம், கொழும்பு, ரங்கூன், சிங்கப்பூர் முதலிய பிறநாடுகளிலுமுள்ள ஏனைய சகோதர சகோதரிகளனைவரும் நன்குணர்ந் திருக்கிறார்கள் என்பதை இல்லை என மறுக்கவர மனந்துணிபவர் யாவர்? "கடவுள் இல்லை" என்று சாதிக்கவல்ல நாஸ்தீகப்பூடுகள் அதிகரித்து வந்த அக்காலத்தில் சமய குரவர்களும் ஆழ்வாராதிகளும் அவதரித்து தேவாரம், திருவாசகம், பிரபந்தம் முதலிய தமிழ்வேத பாசுரங்

களினுல் "கடவுள் உண்டு" என்று அவர்கள் ஒப்புக்கொள்ளத் தக்க வண்ணம் அநேக அற்புதச் செய்கைகளைக் காட்டி உலகத்தை .உய்ப்பித்தவாறு "நங்கையர்களாகிய நாம் கற்புடனில்லை" என்று சாதிக்க வல்ல தேச விரோதிகள் அதிகரித்துக்கொண்டு வருகிற இக்காலத்தில் "வைதேஹி" என்னும் நூலின் மூலமாக சகோதரி, வை. மு. கோதைநாயகி அம்மாள் கேவலம் நடனமாதர்களும் கூட கற்பையே ஆபரணமாகக் கொண்டுளார் என்பதை பிரத்தியக்ஷமாக நிரூபித்து வரைந்திருப்பது சாலவும் நன்றே! இத்தகைய நூலை இயற்றியுள்ள எனதரிய சகோதரி. கோதைநாயகி யம்மாளுக்கு இறைவன் அருள் பாலிப்பாராக.

இங்ஙனம்,

நாகபட்டணம்: ஆநந்த தமயந்திபாய்.

## 16—வது அதிகாரம்.

### தாமரையிலைத் தண்ணீர்.

வைதேகியைவிட்டு வருவதற்கு மனமில்லாமல் துடிதுடித்த வண்ணம் வருத்தத்தோடு அவளைவிட்டுத் திரும்பிய ராமாம்ருதம் நேராக வீதியையடைந்ததும், தான் ஏறிவந்த மோட்டாரில் செல்ல வேண்டும் என்ற நினைவைக்கூட அச்சமய மன நிலைமையில் அறவே மறந்து, தாம் இன்ன இடத்திற்குச் செல்கின்றோம், இன்னது செய்கின்றோம் என்றதையும் மறந்து, பித்தம் பிடித்தவர்போலச் சித்தம் கலங்கி, மெத்த துரிதமாகக் கால்நடையாக நடக்க வாரம்பித்தார். அப்போது அவருடைய மனமுற்றும் நமது எழில் மடந்தையான வைதேகியின் மீதே சென்று லயித்துப் போயிருந்தபடியால் அவரை அவ்வமயம் ஓர் பித்துப்பிடித்த பயித்தியக்காரரென்றே சொல்லலாம். அவரையுமறியாமல் அவர் கண்ணில் நீர் தாரை தாரையாகப் பெருகிக்கொண்டே இருந்தது. அவருடைய வண்டியோட்டி, இவர் உள்ளே இருந்து வருவதற்கு இன்னும் நேரமாகும் என்று எண்ணிப் பக்கத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடைக்குப் போய்விட்டபடியால், அவன் இவர் சென்றதைப் பார்க்க இயலாமல் போய்விட்டது. அவர் தன்னிலைமையில் எதையும் உணராமல் போய்க்கொண்டே இருந்தார். இன்ன இடம் போகிறோம் என்பதையும் அறியாமல் நடந்து இரண்டு மூன்று தெருக்களைத் தாண்டிக்கொண்டு போய்விட்டார். அவர் மனமாகிய மேகம், வைதேகியாகிய மதிமுகத்தினள்மேல் பாய்ந்து பாய்ந்து விலகிக்கொண்டே இருந்தது. ஆஹா! என்ன கொடுமை! என்ன கொடுமை! சீச்சீ! அத்தகைய வனிதாரத்தினத்தையா கேவலமான தாசி வகுப்பில் கொண்டுபோய்ப் பிறப்பித்தாய்! ஐயோ! அவள் குணத்தழகையும், புத்தியின் பிரகாசத்தையும், மாதர்கட்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்னும் லக்ஷணங்களையும் ஒருங்கே ஆபரணமாகப் பூண்டுள்ள எழிலைக் கண்டதும் என்னுவியெல்லாம் அவள் பாற்சென்று, மறுபடியும் நான் பலனை யனுபவியாத பாவியாகி ஏமாற்றமடைந்து விட்டேனே! ஏ! மாதர்க்கரசியே! ஐயோ! உன் அழகிய மதிமுகத்தை மறுமுறை காணக் கிடைக்காமல் போய்விட்டதே. உன்னை நான் கனவில்கூட இவ்வித ஹீனஜாதியில் பிறந்தவள் என்று எண்ணவில்லையே! என்னுடைய பாவத்தின் பயனாலேயே நீ தாசி வகுப்பில் பிறந்தவளானாயோ! ஹா! உன்னைக் கண்டு நான் கொண்ட மோகத்திற்கும் ஓர் அளவென்பதுண்டோ! கடலுக்கும் ஓர் கரையுண்டு என்று சொல்லலாம். நான் உன்மேல் கொண்ட காதலுக்கு ஓர் கரையுமில்லாமல் வரம்புகடந்து போய்விட்

டதே! என் இன்பநிலயமே! உன்னிடமிருந்து கடிதம் வந்ததைக் கண்டதும் என் மனமடைந்த சந்தோஷமானது கானல் நீரைக்கண்டு ஓடிய மானின் கதியாகவல்லவா ஆய்விட்டது? ஐயோ! நான் இவ்விதம் ஏமாறுவேன் என்று கனவிலும் எண்ணவே இல்லையே! ஹா! நான் உனது பிரிவாற்றுமையை எவ்வாறு சகிப்பேன்? என்னுயிர் நிலையாக எண்ணிய உன்னை இழந்து நான் எவ்விதம் உயிர் வாழ்வேன்! ஏ! மனமோகன சிங்காரியே! உன்னைப் பிரிந்த வருத்தம் அதிகரிக்க அதிகரிக்க எனக்கு நீ மோட்டார் விபத்தில் உதவி புரிந்ததுமுதல் ஒவ்வொரு விஷயமும் நினைவிற்கு வந்து என் மனதைத் துளைக்கின்றதே! அன்று நீ "ஐயா! ஐயா!" என்று அழைத்த ஒலி என்காதில் இப்போதும் ஒலித்துக்கொண்டே இருக்கின்றதே! அதோடு சற்றுமுன் தட்டித்திணரி கண்ணீர் பெருக நாத்தடுமாறக் கூறிய வார்த்தை என்னுயிரையே சித்திரவதை செய்கின்றதே ! ஏ கண்ணிரு மணியே; நீ வேசியர் குலத்துதித்த வனிதையாயினும் பாதகமில்லை. உன்னையே மணந்துவிடலாமென்று என் மனதைத் தானே தேற்றிக்கொண்டாலும் பல நீதிகளையும், சன்மார்க்க நூல்களையும், ராமாயண பாரத பாகவத பகவத்கீதை முதலியவைகளையும் படித்தும், தாயுமானவர், பட்டினத்தார் முதலிய பெரியோர்களின் நூல்களைப் படித்தும் சாரமருந்திய என்மனதிற்கு அந்தக் காரியம் சம்மதமாகவே இல்லையே! என்ன செய்வேன்! ஏ பாழும் மனமே! நீ ஒருவகையிலும் தெளிவடையாமல் குழம்பிக்கொண்டிருந்தால் என்ன செய்வேன்? உனக்கு எத்தனையோசிறந்த நூல்களின் சுவையை உணவாக ஊட்டியிருக்கும்போது நீ இவ்விதம் பறப்பது தகுதியோ? சீச்சீ! வேண்டாம், வேண்டாம்; அந்த ஆசையை அறவே ஒழித்துவிடு. கிட்டாத பொருளை எட்டிப் பிடிக்கவேண்டும் என்ற மட்டித்தன புத்தியைக் கட்டோடு விட்டுவிடு. உன் திட்டத்தை மீறுமல் கட்டுக்கடங்கி இட்ட தெய்வத்தின் கழலடியை எட்டிப் பிடிக்கும் மார்க்கத்தில் ஏ துட்ட நெஞ்சே! நீ இறங்கு. இனி இவ்விதமான குழப்பத்தை மனத்தில் வையாதே" என்று பலவாறுய் எண்ணமிட்டவண்ணம் சித்தப்பிரமைகொண்டவர் போல நாலைந்து தெருக்களைச் சுற்றி நடந்து போய்க்கொண்டிருந்தார். அவருடைய காலில் மோட்டாரினுல்பட்ட ரணம் இன்னம் நன்றுகக் குணமாகவில்லை. அதன் வலியைக்கூட அவர் மறந்து வெகுதூரம் போய்விட்டார். வண்டியோட்டி வெற்றிலை, பாக்கு வாங்கிக்கொண்டு திரும்பிவந்து வண்டியில் உட்கார்ந்தான்; மணி 10...11...12 ஆயிற்று; ஜெமீந்தார் வரவில்லை; அவர் இன்னம் அந்த வீட்டிலேயே இருப்பதாகவே எண்ணி இருந்தான். அந்த வீட்டிற்கு எதிரே ஓரமாக வண்டி விடப்பட்டிருந்தபடியால் அவன் அந்த வண்டியிலிருந்து இந்த வீட்டிற்கு வீரபத்திரன் சின்னிபொம்மைக்காரி மாதிரிவேஷம் போட்டுக்கொண்டு வந்ததையும் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டே இருந்தான். ஜெமீந்தாரென்னவோ வரக் காணவில்லை. அவனுக்குப் பசி

மேலிட்டுத் தூக்கம் வந்துவிட்டது. அவன் பயந்தபடியே அந்த வண்டியிலேயே படுத்து உறங்கிவிட்டான். பிறகு அவன் கண்விழித்துப் பார்த்தபோது சுமார் 3-மணி ஆய்விட்டது. அவன் பாடு கிடுகிடுத்துப் போயிற்று. "ஐயோ! இத்தனை நேரம் தூங்கிவிட்டோமே! எஜமானன் இன்னும் வரவில்லையே! ஒருவேளை நாம் தூங்கிவிடவே நம்மீது கோபம் கொண்டு நம்மை எழுப்பாமல் போய்விட்டாரோ அல்லது இன்னும் இந்த வீட்டைவிட்டு வரவில்லையோ ஒன்றும் தெரியவில்லையே! என்ன செய்வேன்! இறங்கிப்போய் அங்கு விசாரித்துப் பார்ப்போம்" என்று எண்ணமிட்டவண்ணம் காமாக்ஷி வீட்டையடைந்து வீதியிலிருந்த காமாக்ஷியின் சிறிய புதல்வியைக் கண்டு, "அம்மா! இங்கு காலையில் என் எஜமானர் வந்தாரே அவர் உள்ளே இருக்கின்றாரா?" என்று வெகு பணிவாய்க் கேட்டான். அதற்கு அந்தப் பெண், "ஆ! அவர் காலையிலேயே போய்விட்டாரே. அவர் சென்று வெகு நேரமாய்விட்டதே" என்றாள். இதைக் கேட்ட வண்டியோட்டி திடுக்கிட்டான். ஐயோ! நாம் தூங்கிவிட்டோமென்ற கோபத்தால் அவர் நடந்தோ அல்லது வேறு வண்டியோ அமர்த்திக்கொண்டு போய்விட்டார்" என்று எண்ணினவனாய், வண்டியை நேராக வீட்டை நோக்கி ஓட்டவாரம்பித்தான். அவனுக்குப் பயமும் திகிலும் பிடித்துக்கொண்டுவிட்டன. எஜமானர் என்ன செய்வாரோ என்று கலங்கியவண்ணம் வீட்டையடைந்தான். அப்போது வீட்டில் பெரிய கூட்டமும், கலவரமும், கோஷ்டமுமாகவிருக்கக் கண்ட வண்டியோட்டி, திடுக்கிட்டு உள்ளே சென்று பார்க்கையில் ராமாம்ருதம் படுத்திருக்கிறார். அவர் பக்கத்தில் அவரது அன்னையார், பரமசிவம் முதலிய எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். இன்னும் இதர ஜனங்களில் சிலர் "பேசுகின்றாரா? ப்ரக்ஞை வந்துவிட்டதா?" என்று அவனுடன் கேட்டுக்கொண்டே இருந்தார்கள். இதை எல்லாம் கண்ட வண்டியோட்டி செய்தி இன்னதென்பதை யறியாமல் விழித்து, அதை எவ்விதமாவது யாரையாகிலும் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று எண்ணி அந்த வீட்டு வேலையாளை நோக்கி, "என்ன செய்தி?" என்று ஆத்திரத்தோடு வினவினான். இதைக் கேட்ட வேலைக்காரன், "ஐயோ! அதை ஏன் கேட்கிறீர்கள்? இன்று ஐயா பிழைத்தது புனர்ஜென்மமாய்விட்டது. இன்று மத்தியானம் வரையில் ஐயா வராமையால், பரமசிவம் நம்முடைய குதிரை வண்டியைப் போட்டுக்கொண்டு தெருத் தெருவாய்த் தேடிக்கொண்டும், அவர் போகக்கூடிய இடத்திற்கெல்லாம் போய்ப் பார்த்துக்கொண்டும் வருகையில், ஒரு தெருநடுவில் ஒருவர் கீழே விழுந்துகிடந்தாராம்; அவரைச் சுற்றிலும் நிறைய கும்பல் கூடி இருந்ததாம். நம் பரமசிவம் அந்தக் கும்பல் எதற்காக நிற்கின்றதென்று விசாரித்துக்கொண்டுபோய்ப் பார்க்கையில் கிடந்தவர் நம் எஜமானனாக இருக்கக் கண்டு, உடனே கோவென்று கூவிக் கதறியவண்ணம்

அவரை வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அம்மா நெருப்பின்மீது விழுந்த புழுப்போலத் துடிதுடித்துக்கொண்டே இருந்தார்கள். அவரை வண்டியிலிருந்து இறக்கி உள்ளே கொண்டுவிட்டோம். என்ன காரணத்தினால் வீதியில் விழுந்தார் என்று தெரியவில்லை. இன்னும் ஐயாவுக்கு நன்றாய்த் தெளியவில்லை. சற்று முன்புதான் கண்ணைத் திறந்து பார்த்தார். அப்போது அவரைக் கேட்டதற்கு எதுவும் பதில் சொல்லாமல் "ஆ! என் கண்மணி! வைதேகி! ஐயோ! உன்னையா அந்த......" என்று கூறி மறுபடி மயக்கத்திலாழ்ந்துவிட்டார். இன்னும் தெளியவில்லை. எல்லோரும் கவலைப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள். லாயத்தில் போய்ப் பார்த்தால் உன்னைக் காணவில்லை. மோட்டாரும் காணவில்லை. உன்மேலும் அம்மா கோபித்துக்கொண்டார்கள். இத்தனை நேரம் நீ எங்கேபோயிருந்தாய்? வண்டியை யாருக்கு ஓட்டினாய்?" என்றுகேட்டான். இவன்கூறிய வரலாற்றைக்கேட்ட வண்டியோட்டி அப்படியே இடிந்துபோய் "ஐயோ! நாம் என்ன செய்யப்போகிறோம்? ஒருநாளும் தாயாருக்குத் தெரியாமல் ஒருவேலையும் செய்தறியாத எஜமானர் இன்றுயாருக்கும் சொல்லாதே என்று என்னையும் எச்சரித்துத் தானும் யாருக்கும் தெரியாமல் லாயத்திலேயே வந்து வண்டியேறிச் சென்ற காரணம் என்னவோ தெரியவில்லையே! இப்போது எஜமானியம்மாள் என்மேல் கோபித்துக்கொண்டிருப்பதாகத் தெரிகின்றதே! இந்த சங்கடத்திற்கு என்ன செய்வேன்!" என்று கலங்கிய வண்ணம் பேசாது வாளாவிருந்தான்.

இதற்குள் பக்கத்தில் உட்கார்ந்திருந்த டாக்டர் பார்வதியம்மாளைப் பார்த்து, "அம்மணீ! பயப்படவேண்டாம்! சீக்கிரம் தெளிந்துவிடும். நான் போய்வருகின்றேன். மறுபடி சாயந்திரம் வந்து பார்க்கின்றேன்" என்று கூறி வெளியில் சென்றுவிட்டார். உடனே சற்று நேரத்திற்கெல்லாம் ராமாம்ருதம் கண்ணைத் திறந்துகொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார். பக்கத்தில் நிறைய கும்பல் கூடியிருப்பதைக் கண்டு, தன் தாயாரை நோக்கி, "அம்மா! ஏன் இங்கு இத்தனைக் கூட்டம் நிறைந்திருக்கின்றது? அவர்களை எல்லாம் வெளிக்கிளப்பி விட்டு என்னை என் படுக்கையறையில் கொண்டுவிட்டு விடுங்கள்" என்றார். இந்த வார்த்தையைக் கேட்ட பார்வதியம்மாள் பெரிதும் மகிழ்ந்து, தன் குமாரர் வாய்திறந்து பேசும் நேரம் எப்போது வாய்க்குமோ என்று ஏங்கிக்கொண்டிருந்தகாலத்தில் அவர் பேசியது தேவாம்ருதம் பருகுவதுபோலிருந்தது. அந்தம்மை உடனேபரமசிவத்தின் உதவியைக் கொண்டு ஜமீன்தாரை அவரது அறையில் கொண்டு விட்டுவிட்டார்கள். பிறகுகூட்டமும் கலைந்துவிட்டது. பார்வதியம்மாள் தன் குமாரன், 'எவ்விதம் நடுவீதியில் விழுந்துவிட்டான்?' 'காலை முதல் எங்கே சென்றான்?' என்ற விவரத்தைக் கேட்டறிய ஆவலாயிருந்தபடியால் மெல்ல தன் மகனருகில் உட்கார்ந்துகொண்டு

"தம்பி! காலைமுதல் நீ எங்குசென்றாய்? நீ என்னகாரணத்தினால் நடு ரோட்டில் விழுந்துவிட்டாய்? அதையறிய என்மனம் ஆவல்படுவதால் கேட்கிறேன். மேலும் நீ கண்ணைத் திறந்தபோது 'என் கண்மணி! வைதேகி! உன்னையா...'என்று ஏதோ சொல்ல வாயெடுத்தாய், மறு படியும் மயங்கிவிட்டாய். என்ன சங்கதியப்பா! அதை என்னிடம் சொல்லலாமா! நான் கேட்கலாகுமானால் அதைச் சொல்ல வேண்டுகி றேன்" என்று வெகு வாஞ்சையோடும், கனிந்த பார்வையோடும் மரியாதையாகக் கேட்க ஜமீந்தார் மனம்கலங்கிற்று. கண்ணீர் வழிய வாரம்பித்தது. தன் தாயார் தன்னை இறைஞ்சிக்கேட்டதும் தன் மன தில் பொதிந்துகிடந்த துக்கமும் ஒன்றுகூடி வருத்த வாரம்பித்து விட்டபடியால் அவர் வாய்திறந்து பேசுவதற்குச் சக்தியற்றவராய் விட்டார். அவர் நடந்த வரலாற்றைத் தன் தாயிடம் தெரிவிக்க வேண்டுமென்று பிரியப்பட்டார் என்றாலும் அதனால் பின்னிட் டுத் தன் தாயும் வருந்த நேரிடுமே என்று சற்று யோசித்தார். மறுபடியும் எப்படி இருந்தாலும் 'இந்தச் செய்தி தெரியாமலிருக்கப் போவதில்லை; ஆகையால் இப்போதே தெரிவித்து விடுவோம்' என்று எண்ணியவராய்த் தன் சட்டைப்பையில் வைத்திருந்த வைதேகி யின் கடிதத்தை எடுத்துத் தனது அன்னையாரிடம் கொடுத்தார். அவ் வம்மை அதை ஆவலுடன் வாங்கிப் பிரித்துப் பின்வருமாறு தனக் குள் படிக்கலானாள் :

மகா-ா-ா-ஸ்ரீ ஐயா அவர்கட்குப் பேதையாகிய யான் பணி வுடன் திக்குநோக்கி அநந்த கோடி தண்டம் சமர்ப்பிக்கின்றேன். க்ஷேமம். தங்களுடைய திருமேனியின் க்ஷேமத்தை யறிய ஆசைப்படுகின்றேன். ஏதோ காலவித்தியாசத்தின் கொடுமையால் தங்களுடைய பாதார விந்தத்தில் மோட்டாரினால் விபத்துநேர்ந்து என்வீட்டு வாசலில் தாங்கள் விழுந்துவிட்டது நினைவிருக்கலாம். அப் போது யான் ஏதோ சொல்ப சிகிச்சை செய்ததும், பிறகு நடந்த செய்தியைத் தெரிவித்ததும் தங்கள் சித்தத்தில் பதிந்திருக்கலாம். பிறகு யான் டாக்டரை யழைத்துக்கொண்டு வந்து பார்க்கையில் தங்களைக் காணாமல் வெறுந் திண்ணையாயிருந்ததைக் கண்டு நான் பிரமித்துவிட்டேன். அதற்குமேல் என் தலையில் பெரிய இடியே விழுந்து அதனால் பட்ட துன்பங்களை நேரில்தான் கூறவேண்டும். இப்போது நான் தங்களுடைய காலின் ரணம் எவ்விதமிருக்கிற தென்று அறியாமையால் அன்றுமுதல் இன்று வரையில் அதே கவ லையாக விருக்கிறேன். அன்று தாங்கள், இருப்பிடம் சிந்தாதிரிப் பேட்டை என்று கூறிப்பேசாது இருந்துவிட்டபடியால் தங்களுடைய விலாசம் அடியாளுக்குத் தெரியாதாகையால் நான், என்னைக் காப் பாற்றிய இந்தம்மாளின் உதவியால் தங்கள் இல்லத்தைக் கண்டு பிடித்து இந்தக் கடிதத்தைக் கொண்டு கொடுக்கும்படி வேண்டியதில் அதை எடுத்துக்கொண்டு இந்தம்மாள் வருகின்றாள். அன்பார்ந்த

ஐயா! அடியாள் பேதை ஜென்மமாகையாலும், பிணியோடிருப்பதாலும் மேலும் இன்னும் சில இடைஞ்சலாலும் நான் அங்குவந்து தேவரீரைத் தரிசித்துத் திருமேனியின் க்ஷேமலாபத்தை யறிய அசக்தமாயுள்ளபடியால் ஆண் சிங்கமாகிய தாங்கள் இந்தக் கடிதம் கொண்டுவரும் பெண்பிள்ளையோடு இங்குவருவதற்கு முடியுமானால்வரவேண்டுமென்று கேட்கின்றேன். கேவலம் பேதையாகிய நான் இவ்விதம் துணிந்து எழுதுவதை வித்தியாசமாய் எண்ணக்கூடாது. இதற்குக் காரணம் நேரில்கூறுவதே நலமாகையால் இதோடு நிறுத்தித் தாங்கள் இங்குவரும் வழியை நோக்கிக் காத்துக் கொண்டிருக்கிறேன். தயவுசெய்து வரவேண்டுமாய்க் கோரும்,

அபலையான வைதேகி.

என்ற கடிதத்தைப் படித்ததும் அந்தம்மாளுக்கு இன்னதென்று சொல்லற்கியலாத விதமாக மனதில் மகிழ்ச்சி ஏற்பட்டு அதை ஆநந்தக் கண்ணீராகப் பெருகவிட்டவண்ணம் "ஆ! என்னருமைத் தம்பீ! உன்னைக் காப்பாற்றிய காருண்ய மங்கையின் கடிதமல்லவா இது? ஆஹா! என்ன அழகாய் எழுதியிருக்கின்றாள்! அவளுடைய மேன்மைக் குணம், ஜீவகாருண்யம், நல்லொழுக்கம் முதலிய எல்லாம் இந்தக் கடிதத்தின் விமரிசையிலிருந்தே விளங்குகின்றனவே. ஆ! தம்பீ! அந்த மடவன்னம் ஆபத்திலிருந்து தப்பிவந்து விட்டாள் போலிருக்கின்றதே. இனி உன் கஷ்டம் நீங்கிற்று. நீ அங்கு சென்றாயா என்னசெய்தி? அவள் எவ்விதம் தப்பினாள்? என்று பல கேள்விகளை ஏககாலத்தில் ஒன்றன்பின்னொன்றாய்க் கேட்டு ஆவலே வடிவாய் அவன் வாய்மொழிக்கு எதிர்பார்த்தாள்.

அதைக் கேட்ட ராமாம்ருதத்திற்குப் பதில் சொல்வதற்கு, நாவெழாமல் துக்கம் தொண்டையை யடைக்கின்றது. தான் பேசாதுவாளாவிருந்தால் தனது அன்னைக்கு மனம் தவிக்கும்; ஆகையால் சுருக்கமாகக் கூறுவதே நலம் என்று எண்ணியவராய் தன் தாயை நோக்கி, "அம்மா! நான் என்னவென்று கூறுவேன்? என்னால் பேசவே முடியவில்லை. நான் ஒரே வார்த்தையில் முடித்துச் சொல்லிவிடுகின்றேன். மனிதனுடைய நிழல் எப்படிக்கூடவே பின்தொடர்ந்து வருகின்றதோ, அதுபோல என்னுடைய பாபமும் என்னைப் பின்தொடர்ந்து வருகின்றது. நான் என் ஆருயிர் அம்ருதவல்லியை விஷம் வைத்துக்கொன்ற பாவியல்லவா? அத்தகைய சண்டாளனான கொலைபாதகனுக்கு அந்த மாற்றிலா மரகதமணி கிடைக்குமா? சேச்சே! ஒருநாளும் கிடைக்காது. என் துரதிருஷ்டத்தைப்போலவே எல்லாம் முடிந்தது. வெண்ணெய் திரளும் சமயம் தாழி யுடைந்தது போலவும், பால் நிறையும் சமயம் பல்லா யுடைந்ததுபோலவும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போய்விட்டது. அந்த அணங்கை அடையும்படியான பாக்கியம் நான் பெறவில்லை." என்று முடிக்கு முன் அவரால் பேசமுடியவில்லை. இதைக் கண்ட பார்வதி

யம்மாளுக்குக் குதூகலமாயிருந்ததெல்லாம் பறந்துபோய், குடல் கடுக்கமெடுத்துக்கொண்டது. தன்கஷ்டம் விடிந்ததென்று சந்தோஷமாக வெண்ணி இருந்ததெல்லாம் மாறி அதற்கு நேர்விரோதமாக அவர் கூறியதைக் கேட்டதும், அவ்வம்மையின் நிலைமை விவரிக்க இயலாத விதமாய்விட்டது. அவள் மனதில் கலக்கமே குடிகொண்டுவிட்டது. செய்தியும் முழுதும் தெரியவில்லை. அவர் சொல்வதிலிருந்து காரியம் கெட்டுவிட்டதாக மாத்திரம் தெரிகின்றது. அதைமுற்றுமறிய ஆவல்கொண்ட பார்வதியம்மாள் மெல்ல பேசத்தொடங்கி, கலக்கத்தோடு "அப்பா தம்பி! அருமைத் தம்பி! ? என்ன செய்தி? அதை முற்றும் நானறியலாகாதா? எனக்கு நீ சொல்லியது ஒன்றும் விளங்கவில்லையே! இதோ இந்தக் கடிதத்தைப் பார்த்தால் அவளே நேரில் எழுதியிருப்பதுபோல இருக்கின்றதே! இதென்ன அவளுடைய கடிதம்தானு! அல்லது அவள் கடிதம்போல யாராவது மோசக்கருத்தோடு எழுதியிருக்கின்றார்களா? என்ன செய்தி சொல்லப்பா என் கண்ணே! அவள் உண்மையில் தப்பி வந்துவிட்டாளா? நீ பார்த்தாயா? அவளை என் நீ அடையமுடியவில்லை? அவள் விவாகமான பெண்ணு? அல்லது அவள் உன்னை விரும்பவில்லையா? என்ன செய்தியப்பா? என் மனம் தபிக்கின்றது. சற்று விவரித்துக் கூறுவாயா ?" என்று இறைஞ்சிப் பரிதாபகரமாய்க் கேட்டாள்.

அதைக்கேட்ட ராமாம்ருதம் "அம்மா! நான்தான் கிட்டாப்பொருளாய்விட்டது என்று கூறிவிட்டேனே. அவளுடைய நினைவை இனி அறவே மறந்துவிடவேண்டும். அவள் விருத்தாந்தத்தைக் கூறி விடுகின்றேன்" என்று வைதேகி தெரிவித்தபடி அன்று போலீசாரிடம் அகப்பட்டுக்கொண்டு மறுபடி தன்னைக் கண்டு கூறியவரையில் எல்லா விவரத்தையும் கூறி, அவள் தேவதாசிப் பாவை என்று முடித்தான். அதைக் கேட்ட பார்வதியம்மாளின் வயிற்றில் பெரிய இடி இடித்துவிட்டது போலாய்விட்டது. தான் சற்றும் கனவிலுங் கருதாத விதமாய் அந்த மடந்தை வேசிக்குலத்து மாது என்று கூறியதைக் கேட்க, அவளுக்குண்டான வியப்பிற்கும் திகைப்பிற்கும் ஓரளவே சொல்லமுடியவில்லை. "ஆ! அந்த ஜாதியிலுதித்த மாதா இவ்விதம் பரோபகார சிந்தையோடும், கற்பைக் காக்கும் காரிகையாகவும் விளங்குகின்றாள்? அடடா! என்ன அருமை! என்ன ஆச்சரியம்! அந்த ஜாதியில் பிறந்தவர்கள் கூட பிறருக்கு ஒத்தாசை செய்ய முன் வருவதுண்டோ? அவர்கள் சுயநலம் கருதுகின்றவர்கள் தானே. காசைக் கொடுக்கின்றவரையில் தானே அவர்களுடைய உறவு. முன்பின் அறியாத என் மகனின் ஆபத்திற்கு அந்த மடந்தை உதவிசெய்ய முன்வந்து அதனால் அத்தனை துன்பங்களையு மனுபவித்துக்கடைசியில் இவ்வளவு ஆபத்தில் சிக்கித் தன் கற்பைக் காப்பாற்றிக்கொண்டு அவள் தப்பியதும், அவளுக்கு நேர்விரோதமான கிழவியின் கெடுமதியும் அடடா! என்ன ஆச்சரியமா யிருக்கின்றது! அப்பா!

தம்பி! நீ சொல்வதெல்லாம் உண்மையா? அவள் அந்த குலத்தில் உதித்தவள்தானா? அது உனக்கு நன்றாய்த் தெரியுமா? ஆ! அதைக் கேட்ட என்மனம் பதறுகின்றதே! எனக்கு நம்பிக்கையே கொடுக்க வில்லையே. அவளே தன் வாயினாலா இவ்வித செய்திகளை எல்லாம் தெரிவித்தாள்? ஐயோ! இது நம்முடைய துரதிர்ஷ்டமேயன்றி வேறல்ல. நான் என்னென்னவோ எண்ணி இருந்ததெல்லாம் வீணாய்விட்டது. என் எண்ணம் எல்லாம் இவ்விதம் தான் மண்ணாய்ப் போய்விட வேண்டுமென்று என் தலையில் விதித்திருக்கின்றானே! ஹா! சர்வேச்வரா! இதுதான் உன் திருவுள்ளமோ! என் குழந்தையின் மனம் பதறுவதும் அதைக்கண்டு நான் துயருறுவதும் உனக்கழகோ? ஒரு காலத்திலில்லாவிட்டால், ஒரு காலத்திலாவது என் கஷ்டம் விடியும் என்று ஏங்கி இருந்தேனே! இது தீராத கஷ்டமாகவல்லவா முடிந்துவிட்டது? ஐயோ! என் மகனின் விரக்தியும் நீங்கி அவனுக்கும் உலகப்பற்று ஏற்படுமா என்று நான் எதிர் பார்த்திருந்ததற்கு அதைக் காட்டுவதுபோலக் காட்டி மறுபடியும் நடுக்காட்டில் கொண்டு விடுவதுபோல விட்டுவிட்டாயே! என் கர்மத்தின் கொடுமையா இவ்வண்ணம் நடப்பது!" என்று மனம் வருந்தியபடி மறுபடிமகனை நோக்கி "அப்பா! நீ வீதியில் விழுந்தகாரணம் என்ன?" என்று கேட்டாள்.

அதற்கு ராமாம்ருதம் "அம்மா! அதை நான் சொல்லவும் வேண்டுமோ? அந்தச்செய்தியைக் கேட்டபிறகு நான்என்னையே மறந்து நடைச்சவம் போலாகி வண்டியிலேறி வரவேண்டுமென்பதைக் கூட மறந்து பித்தன்போல வீதியில்நடக்கலானேன்.என் மனமுற்றும்அந்த சுந்தராங்கியின்மீதே சென்று லயித்துப்போய் என்னை வெற்றுடலாக்கி விட்டபடியால் நான் என்னமறக்க முயன்றாலும் என் மனத்தைவிட்டு அரை நிமிஷமேனும் அகலாமல் அந்த சுந்தர ரூபலாவண்ய சிங்காரி குடிகொண்டுவிட்டாள். அந்தக் கலக்கத்தோடு நான் வீதியில் வரும் போது என் மனப் பிராந்தியால் என் கண்ணிற்கு அந்த மடமயிலாள் எதிரே வந்து நிற்பதுபோலவும், என்னை மண்டியிட்டு வணங்குவதுபோலவும் உருவெளித் தோற்றம் தோன்றியதைக்கண்டு உண்மை என்றெண்ணி அவளைத் தூக்கிப் பிடிக்கப்போகையில் அங்கு ஒரு கல் தடுக்கி விழுந்துவிட்டேன். எனக்கு உடனே மயக்கம் வந்துவிட்டது. பிறகு இங்கு கண்ணைத் திறந்து பார்த்தபோது நீங்கள் பக்கத்திலிருக்கக் கண்டதுதான் எனக்குத் தெரியும். செய்தி இது தான்." என்றார். இதைக்கேட்ட பார்வதியம்மாள் முற்றிலும் குழம்பிப்போய் இன்னசொல்வதென்பதறியாது விழித்து மறுபடியும் அன்பாகப் பேசத்தொடங்கி தம்பியைநோக்கி அப்பா! தம்பி! அந்த அருமைக்கிளியைத்தான் நாமடைய பாக்கியம் செய்யவில்லை. அவளுக்கு உன் பொருட்டாகப்பட்ட சிரமத்திற்கு நாம் பரிசு ஏதாவது கொடுக்க வேண்டாமா? அதைக் கொடுத்துவிட்டு நானும் அவளைப் பார்த்து

விட்டு வருகின்றேன். அவளுக்கு ஒரு லக்ஷ ரூபாய்க்கு ரொக்கமும், ஒரு செட்டு வைர ஆபரணங்களும், பனாரீஸ்பட்டு ஜரிகைப்புடவைகளில் 12-ம், பாக்கு, மஞ்சள், குங்குமம், வெற்றிலை மற்றும் சிலதின்பண்டங்கள், பழவர்க்கங்கள் முதலிய எல்லாம்கொண்டு கொடுத்துவிட்டு வரவேண்டாமா?" என்று நயமாகக் கேட்டாள். அதைக்கேட்ட மகன் "அம்மா ! அவளுடைய குணம் உனக்கு இன்னம் தெரியவில்லையா? அவளா இவைகளை எல்லாம் பெற்றுக்கொள்பவள்? அவள் தன் பாட்டியோடுகூடவே வீணைப்பெட்டியில் ஆயிரரூபாய் நோட்டையும் வைத்து அனுப்பிய மடந்தையல்லவா? அவள் காலில் ஒட்டிய தூசிகூட இவைகளை எல்லாம் லக்ஷியம்செய்யாது தெரியுமா? அப்படி தாங்கள் கொண்டுபோனாலும் மஞ்சள், குங்குமம், பாக்கு, வெற்றிலை இவைகளில் சிறிது எடுத்துக்கொள்வளே யன்றி அவள் அதற்குமேல் எதையும் தொடமாட்டாள். நீங்கள் அவ்விடம்சென்று அவள் அழகையும் குணத்தழகையும் பார்த்துப் பின்கலங்கி வரவே மனமற்றுவிடுவீர்கள். ஆகையால் தாங்கள் சற்றும் அதைப்பற்றி யோசிக்கவேண்டாம்" என்று கூறிவிட்டார். அதற்கு மேலும் பார்வதியம்மாள் எவ்வித பதிலும் சொல்லமுடியாமல் போயிற்று. அவள் தன் மகனது பரிதாபத்தைக் கண்டு சகிக்கமாட்டாமல் சற்று நேரம் கண் கலங்கியபின், "அப்பா ! தம்பி ! நீ காலைமுதல் ஆகாரமே கொள்ளவில்லையே; ஏதாவது பிடித்தவரையில் சிறிதளவு சாப்பிடப்பா. என்ன கொண்டுவருவது? சொல்; நான் இங்கேயே கொண்டுவருகின்றேன்" என்று வெகு பக்ஷத்தோடு கேட்டாள்.

அதைக் கேட்ட ராமாம்ருதம் "அம்மா! நான் சாப்பிடாமல் செத்துவிடுவேனா என்ன? அதெல்லாம் ஒன்றுமில்லை. எனக்குப் பசியே இல்லை. பசி எடுத்தவுடன் புசிக்கின்றேன். என்னைத் தாங்கள் அந்த விஷயத்தில் தொந்தரவு செய்யவேண்டாம். உங்களை வேண்டிக்கொள்கின்றேன். என்னை விட்டுவிடுங்கள்" என்று கூறி கண்களை மூடிக்கொண்டு படுத்துக்கொண்டார். அதைக் கேட்ட தாயார் எவ்விதமும் பேச சக்தியற்றவளாய், இப்போதிருக்கின்ற நிலைமையில் அவர் உயிரோடிருந்தால் போதும் என்கின்ற பயத்தினால் தானும் பட்டினியாகப் பேசாது இருந்துவிட்டாள். ராமாம்ருதம் வைதேகியின்மீதே சென்று லயித்திருந்த மனத்தைத் திருப்பச் சக்தியற்றவராய் அவ்விதமே செல்லவிட்டு இன்பக்கனவு கண்டுகொண்டு எழுந்திருக்காமல் படுத்திருந்தார்.

ராமாம்ருதம், படுத்தவர் எழுந்திருக்கவே இல்லை. அவரது அன்னையாரின் பலவந்தத்தின் மீது ஒரேவேளை ஆகாரம் பார்த்துக்கொண்டு வந்தார். அதிக விரக்திகொண்டு தன் தாயிடம் அடிக்கடி, "அம்மா! நான் சந்யாசம் எடுத்துக் கொள்ளப் போகின்றேன். நீங்கள் இந்தப் பணத்தை எல்லாம் தான தருமம் செய்துவிட்டுப் பிற்

கதிக்கு வேண்டிய புண்யத்தைத் தேடிக்கொள்ளுங்கள். அம்ருதவல்லியின் ஜமீன்வார்சு அற்றுப் போய்விட்டது போல நம்முடைய ஜமீனும் போய்விடட்டும். நமக்கு இனி இவைகளெல்லாம் எதற்கு? அனுவசியமான பாரத்தைச் சுமந்து சாவானேன்? இதை இன்றே எடுத்துத் தானம் செய்துவிடுங்கள்'' என்று இவ்விதமே கூறிக் கொண்டிருந்தார். அதைக்கேட்டு மனந் தாங்காமல் அவ்வம்மை கண்ணீர் வடித்துக் கொண்டே இருந்தாள். அவள் எத்தனையோ பெருமாள்களுக்கு வேண்டிக்கொண்டும் எத்தனையோ பிரார்த்தனைகள் செய்துகொண்டிருந்ததெல்லாம் வீணுகிக் கடைசியில் ''நம் தலை விதி இத்தகையது போலும்,'' என்று அந்தம்மாள் முற்றிலும் சோர்ந்துபோய்த் தன்னை வெறுத்துக்கொள்ளும் மகனின் கொடுமைகளைக் கண்டு சகியாமல் தான் இனி உயிரோடு இருந்து என்ன பலன்? எவ்விதமாயினும் நாம் பிராணனைவிட்டு விடவேண்டியது தான் பாக்கி. இத்துணை காலமும் இந்த மகனுக்காகவே உயிர் தரித்துவாழ்ந்து வந்தேன். அதுவும் இனி வீணுய்விட்டது. இவனுக்கு இருக்கும் விரக்தியில் இவன் சொல்கின்றபடி செய்தாலும் செய்துவிடுவான். ஆகையால் நாம் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும்'' என்று கலங்கிய வண்ணம் ஒரு மூலையில் போய்ப் படுத்துக்கொண்டாள்.

---

## 17-வது அதிகாரம்.

### அமிருதபானம் ஆனந்த வெள்ளம்

ராமாம்ருதம் வந்து படுத்து நான்கு நாட்களாயின. இன்னும் அவர் எழுந்திருக்கவில்லை. ஓரே படுக்கையாய் நோய் கண்டவர்போல வைதேகி என்று சதா மனத்தில் ஸ்மரித்துக்கொண்டு ''ஹா! வைதேகி! ஐயோ! உன்நாமாவின் எழில் ஒன்றே போதுமே! உனக்கு ஏற்றபடி வைதேகி என்ற நாமம் சூட்டியதற்கு உன் பாட்டியை மெச்சித்தான் கூறவேண்டும். அடடா! என்னதான் என் மனத்தைத் தேற்றிக்கொண்டாலும் நீ ஒரே பிடியாக என்மனத்தைக் கொள்ளைகொண்டுவிட்டதால் என் மனமே என்னிடமில்லாமலிருக்குந் தருணம்,நான் எவ்விதம் தேறுவது? ஏ! மதிமுகத்து மங்காய்! என் சங்கையைத் தீர்க்க உன்னாலன்றி வேறு யாராலுமாகாதென்று நான் எண்ணி இருந்ததெல்லாம் வெறும் உருவெளித் தோற்றமாயிற்றே! ஐயோ! உன்னை மறக்கவேண்டும், மறக்கவேண்டும் என்று நான் என்ன பிரயாசைப் பட்டாலும் அது என்னால் சாத்யமில்லாமல், உன்னையே எண்ணி உள்ளம் ஏங்குகின்றதே! ஏ கற்பின் திறத்தைப்பூண்ட கண்மணியே! நான் இவ்விதமே உன்னை எண்ணி எண்ணி ஏங்கித் தவிக்கவோ பிறந்தேன்? என் அகக்கண்ணில் இப்போதும் நீ அழகிய

மருண்ட பார்வையோடு நிற்பதுபோலத் தோன்றுகின்றதே! உன் வடிவழகையாகிலும் அடிக்கடி கண்டு களிக்கக் கொடுத்து வைக்காத பாவியாகி இந்த சிந்தாதிரிப்பேட்டையில் நானும், வேறொரு பேட்டையில் நீயுமாக விருக்கின்றோமே! என்செய்வேன் மாதரசி! ஏ அம்ருதவல்லி! உன்னிடம் என்னைச் சேர்த்துக்கொள்ள நீயும் மறுத்துத் தள்ளுகின்றாயோ? வேண்டாம்; நான் உன்னிருப்பிடத்திற்கு வருவதற்குத் தயாராகவிருக்கின்றேன். என்னைக் கைவிடாதே. என்னையுமழைத்துக் கொள். நான் உன்னைப் பாஷாணத்தைக் கொடுத்துக் கொன்றதற்காக அனுபவித்த தெல்லாம் போதும். நீ இனியும் என்னைச் சோதனை போடாதே விட்டுவிடு. உன் கரமதைத் தந்து என்னைக் கரை சேர்த்துவிடு" என்று பலவாறாய் எண்ணிப்படுத்திருந்தார். அவ்வமயம் வேலைக்காரன் அவ்விடம் தோன்றி, 'இந்தக் கவரைத் தங்களிடம் கொடுக்கும்படியாக யாரோ ஒருவர் கொடுத்துவிட்டுப்போனார்.' என்று கூறி அதை அவரிடம் கொடுத்துச் சென்றான். கடிதத்தை வாங்கிய ராமாம்ருதம், "ஆ! உள்ளூரில் நமக்கு இவ்வளவு பெரிய கவர் யாரனுப்பியிருப்பார்கள்? இதை உடனே பிரித்துப் படிப்போம்" என்று எண்ணிய வண்ணம் கவரைப் பிரித்து அதில் மடித்து வைத்திருந்த ஒரு கத்தைக் கடிதத்தை எடுத்து, இதென்ன ராமாயணம் போலவிருக்கும்போலிருக்கின்றதே என்று எண்ணிக் கடிதத்தைப் பிரித்தார். அதனுள்ளிருந்து ஒரு அட்டை திடீரென்று விழக்கண்டு அதை உற்றுப் பார்த்த ராமாம்ருதம், அப்படியே ஸ்தம்பித்துப்போய், 'இதென்ன! கனவு காண்கிறோமா? நிஜமான காக்ஷியா?' என்று பிரமிக்கின்றார். 'ஆஹா! இது என் அன்பிற்கு ஆலயமாகிய ஆரணங்கான வைதேகியின் புகைப்படமல்லவா? இது நமக்கு யாரனுப்பி இருப்பார்கள்? அடடா! அவள் அன்று நின்று பேசியமாதிரியே இந்தப் படமும் எடுக்கப்பட்டிருக்கின்றதே! ஆ! நம்முடைய மனம் தவிப்பதை யறிந்து ஈசனே இந்தப் படத்தையாவது கண்டுகளியுறும் பொருட்டு அனுப்பியிருக்கிறாரோ? இதனடியில் வைதேகி என்றும் எழுதியிருக்கின்றதே! இது எந்தப் புண்ணியாத்மா செய்த வேலையோ தெரியவில்லையே! இதோடு கூடவிருக்கும் கடிதத்தைப் படிப்போம். அதில் என்ன விருக்கின்றதென்பதைப் பார்ப்போம்' என்று எண்ணி அந்தப் போட்டோவை மாறி மாறி 10 நிமிஷநேரம் இமைகொட்டாமல் பார்த்துவிட்டு மனதில் சற்று மகிழ்ச்சி ஏற்பட்டவராய், அந்தப் படத்தைத் தன் பக்கத்தில் வைத்துவிட்டு, கடிதத்தைப் பிரித்தார். அதன் தலைமேல் 'இது பரமரகஸியம். தங்களைத்தவிர எவரும் படிக்கலாகாது' என்று எழுதியிருந்தது. அதைக் கண்டதும் ஜெமீன்தார் 'இதென்ன விந்தையாக விருக்கின்றதே! இதில் ரகஸிய செய்தி நமக்கென்ன, யார் எழுதியிருப்பார்கள்? ஆனாலும் நாம் ரகஸியமாகவே படிப்போம்' என்று மெல்ல எழுந்து அந்த அறையின் கதவைத் தாளிட்டுவிட்டு மறுபடியும் வந்து கடிதத்தைப்

பார்த்தார். அதில் எழுதியிருக்கும் எழுத்து இதற்குமுன் தான் கண்ட எழுத்துப்போலவே இருப்பதைக்கண்டு சற்று யோசித்து, ஆ! இது அன்று வந்த கடிதத்தின் எழுத்தைப்போலவே இருக்கின்றதே! இதுவும் என் பிரமையா அல்லது அந்தக் கையெழுத்தே தானு? எனக்குத் தெரியவில்லையே! எல்லாம் என் கண்ணிற்குத்தான் அவ்விதம் தெரிகின்றதா? என் கண்மணியின் படத்தை முன்னுல் கண்டேன். அன்னவளின் அழகிய கரத்தின் முத்துப்போன்ற எழுத்தைப் பின்னுல் கண்டேன். இதிலுள்ள செய்திதான் என்னவென்று படிப்போம். என் மனத்தைக் கவர்ந்த மங்கையின் படத்தைக் கண்டதைவிட இந்த நேர் கையெழுத்தைக் கண்டதும் என் மனத்தில் சொல்லற்கரிய ஒருவிதமான எண்ணம் உண்டாகின்றது. இதுவும் என்ன காரணமோ தெரியவில்லையே! எதற்கும் கடிதத்தைப் படிப்போம் என்று எண்ணிய வண்ணம் மனதில் அலைபாய கடிதத்தை படிக்க வாரம்பித்தார். அது அடியில் வருமாறு இருந்தது.

மகிழ்ச்சியாய்ப் பூத்த மலர்

எனது உயிரினுமினியஉள்ளன்புள்ள அம்ருதம்போன்ற ஆருயிர் பிராணபதியின் சரணுரவிந்தங்களைத் திக்கு நோக்கி,அபலையான வைதேகி அனந்தகோடி தண்டனிட்டுப் பணிவுடன் செய்யும் விக்ஞாபனம்.—

என்று எழுதப்பட்டிருந்ததைப் படித்தவுடன் ராமாம்ருதத்தின் உடல்பூரித்து ஆநந்தம் மேலிட்டுக் கண்ணுல் வழியவாரம்பித்தது. அதில் எழுதியிருக்கும் முதல் வரிகளைப் படித்ததும் அது உண்மையா அல்லவா என்ற கவலையே அவர் மனதில் போராடியது. அவர் முதலில் போட்டோவைக்கண்டு மகிழ்ந்ததைவிட அதிகமாகக் கையெழுத்தைக்கண்டு களியுற்ருர். அதைவிட அதில் எழுதியிருந்தவாக்கியத்தைக் கண்டதும் அவர் தேகம் பூரித்துப் புளகாங்கிதமடைந்து இன்ப ஊற்றெடுத்து அது சுரந்துகொண்டே வர வாரம்பித்தது. அவர் "அதை எழுதியிருப்பது வைதேகி தானு? அல்லது இன்னும் யாராவது இவ்விதம் ஏமாற்றச் செய்திருப்பார்களா? சேச்சே! இந்த எழுத்து சந்தேகமில்லாமல் அவளுடைய எழுத்தே தான். அவள் அன்று அவ்வளவு மனம் கலங்கி மயங்கிவிட்டவள் இன்று தானே தன் கரத்தினுலே பிராணபதி என்று வரைந்திருப்பது எனக்கு வியப்பிலும் வியப்பாக விருக்கின்றதே! இன்னும் என்ன விருக்கின்றது பார்ப்போம்" என்று எண்ணியவராய், மீண்டும் படிக்கலானுர்.

க்ஷேமம்-தங்களுடைய திருமேனியின் க்ஷேமத்தை சதாஎண்ணி அறிய ஆவலாயிருக்கிறேன். எனதன்பிற் காலயம்போன்ற அருமை நாதரே! தங்களுக்கு மிகவும் முக்கியமான செய்தியொன்று அவசியம் தெரிவிக்க வேண்டியிருப்பதால் அதைத் தெரிவிக்கத் துணிந்து முன்வந்துவிட்டேன்.மேலும் அன்று தாங்கள் என்னைக்கண்டபோது, தாங்

கள் என் மேல்கொண்டுள்ள மெய்க்காதலையும், துப்பறியும் நிபுணரான ராஜாராம் நாயுடுவிற்கு நேர்ந்த விபத்தில் அவர் பிழைக்கவேண்டுமே என்ற கவலையே தங்களுக்கு அதிகமாக இருப்பதாகத் தெரிவித்ததை அடியாள் உணர்ந்துள்ளேனாதலாலும் அது விஷயமான முக்கிய செய்தியைத் தங்களுக்குத் தெரிவித்து அதனல் தங்களைக் களிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னைத் தூண்டியதனல் அடியாள் இதை வரைகின்றேன். எனக்கு இச்செய்தியை வெளியிடலாகாதென்று உத்திர விருந்தபோதிலும் அதன்படி நடக்க என்னல் முடியவில்லை. அன்று நீங்கள் தவித்த தவிப்பைக் கண்டு சகியாத எனக்கு மயக்கம் வந்துவிட்ட பிறகு தாங்கள் அவ்விடத்தைவிட்டுச் சென்றதாகத் தெரிந்தது. அவ்வளவு மனம் தவித்துக்கொண்டு சென்ற தங்களுடைய உள்ளம் இந்த நான்கு நாட்களாய் எவ்விதமிருக்கின்றதோ! என்ன செய்கின்றீர்களோ! என்ற மனவேதனையினுலும் எனக்குத் தெரிந்த வரையில் உள்ள செய்தியைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற அவாவினுல் முன் வந்தேன். ஆஹா! அன்று தங்களை பிராணபதி என்று வாய்விட்டுச் சொல்லக் கூசிய அடியாள் இன்று அதே சொல்லைக் கூசாமல் பாசத்துடன் ஈசனை நம்பி, தங்களைத் தாசமாயடைய, ஆசாரிய ஸ்தானத்தில் வகிக்கும் துப்பறியும் ராஜாராம் நாயுடுவின் கிருபாகடாக்ஷத்தாலும், பெரியோர்களின் ஆசீர்வாதத்தினுலும் தங்களைப் பிராணபதி என்று துணிந்து கூற முன்வந்துவிட்டேன். விவரம் பின்னர் விளங்கும்.

காதலா! நான் இதுவரையில் அந்த ராஜாராம் நாயுடு என்பவரைக் கண்டதில்லை. ஆனல் அவர் பெயரையும் புகழையும் எத்தனையோ பேப்பர்களின் மூலமாய்க் கண்டறிந்துள்ளேன். அதை நான் உண்மையிலேயே இப்போது கையும் மெய்யுமாய் என்னுடைய சொந்த விஷயத்திலிருந்து கண்டு கொண்டேன்.

எனது இன்பக் களஞ்சியமே!

நான் தங்களுக்கு முக்கியமாய் எடுத்து முதன்மையாய்க் கூற வேண்டிய விஷயமாவது: 'அடியாள் தேவதாசியின் வயிற்றில் பிறக்க வில்லை. குலமாதின் வயிற்றிலேயே பிறந்தவள்' என்பதே. இதை எனக்கு அன்னவர் கூறினர். அதன் தகவலைத் தானே நேரில் கூறுவதாகவும் கூறியுள்ளார். இதை முக்கியமாய்த் தங்களுக்குத் தெரிவிக்கும்பொருட்டே இதை முதலில் எழுதலானேன்.

என்றவரையில் படிக்கையில், அவருக்கு அதுவரையில் சுரந்து கொண்டிருந்த ஆநந்த ஊற்று வெள்ளமாக மாறிவிட்டது. ஆஹா! அவருக்கு அப்போது உண்டான நிலைமையில் இங்குதான் இருக்கிறோமா அல்லது ஆகாயத்தில் பறக்கின்றோமா என்ற சந்தேகம் உண்டாகிவிட்டது. அவருடைய மனத்தில் அப்போது உண்டான ஓர் ஆநந்தத்திற்கும் எல்லையுண்டோ? தாம் எதிர்பாராவிதமாய்த்

தனக்கு இத்தகைய நற்செய்தி கிடைத்ததை எண்ண அவர் தேகம் இரட்டிப்பாய்ப் பூரித்தது. நான்கு நாட்களாய் அவர் சோர்ந்து கிடந்த தெல்லாம் அந்த நிமிஷம் பஞ்சாய்ப் பறந்தது. அவர் அப்போது இன்னதுதான் சொல்லுகிறோம்; இன்னதுதான் செய்கின்றோம் என் றதையே மறந்து ஒரே ஆனந்தசித்தனுய் மாறிப்போய்,மகிழ்ச்சியாய்ப் பூத்த மலர்போல முகமலர்ந்து, அகமகிழ்ந்து, நகை நிறைந்து கண் கள் தாமரை இதழ்களைப்போல மலர்ந்த பார்வையோடு, ஆவலே வடிவாய் மறுபடி அந்தப் படத்தைக் கையிலெடுத்து அதை உற்று நோக்கி, ''ஆ! என் கண்ணே! பத்தரைமாற்றுப் பசும்பொன்னே! உன்னை முதன் முதல் கண்டதுமுதல் நான் உன்மேல் கொண்டுள்ள ஒரு மோகத்திற்கு எல்லையில்லாமல் கரைபுரண்டோடி என்னை மிகவும் தொல்லையிலாழ்த்திவிட்டதே! ஆ! மாதர்திலகமே! உன்னை இப் படத்தில் கண்டபோதும் தீண்டலாகாதென எண்ணி உன்னை அன் னிய ஸ்திரீயாகப் பாவித்து மனக்கலக்கத்தோடு தூரவைத்துவிட் டேன். நீ இந்தக் கடிதத்தில் எழுதியுள்ள விஷயத்தைப் படிக்க எனக்கு என்னையறியாது ஆநந்தம் வந்து மோதுகின்றது. ஹா! நான் முன்பு நீ தேவதாசியாக இருப்பாயென்று கனவிலும் கருதவில்லை. அப்போது அதற்கு மாருக தேவதாசி என்று தெரிவித்தாய். அதைக் கேட்டு வாடித் துவண்டு, சோர்ந்து, உயிர் தத்தளித்துக் கொண்டிருக்கும் சமயம் எனக்குப் புத்துயிரளித்து என்னை எழுப்பு வதுபோல, நீ குலஸ்திரீ என்று எழுதியிருப்பது இன்னதென்று எனக்குச் சொல்ல சாத்தியமற்ற அளவு அம்ருத தாரையைப் பருகு வதுபோலான இன்பம் விளைக்கின்றது. என் இன்னமுதமே! உன்னை நான் இனி என் கண்ணிரு கருமணி என்று சொந்தமாகப் பாவிக்கலா மல்லவா! உன்னழகிய மதிமுகத்தை ஆர்வத்தோடு அருகில் வைத் துக் கண்டு களித்து இன்பமனுபவிக்கலாமல்லவா! இனி அதில் யாதொரு விகல்பமுமில்லையல்லவா! என்காதல் கிளியே! தெவிட்டாத தெள்ளமுதே! என்று கூவி அப்படத்தைத் தன் முகத்தோடு முக மாய் வைத்துக்கொண்டு முத்தமிட்டு மீண்டும் அதைக் கீழே வைத்து விட்டுப் பின்னும் படிக்கலானுர்.

என் இன்னுயிர்க் கமுதமே!

நான் மேல்எழுதியுள்ள விஷயத்தினுல் தாங்கள் சிறிது சந்தோஷ மடைவீர்களென்று நம்புகின்றேன். ஆஹா! நான் அந்தக்கீழ் ஜாதியில் பிறந்தவளல்லவென்று கண்டு பிடித்த அந்த உத்தம சிரேஷ்டராகிய ராஜாராம் நாயுடுவின் திறமையை என்னவென்று கூறுவேன்? நாதா! அதையும் எனக்குத் தெரிந்தவரையில் கூறுகின்றேன். அன்னவர் ஓர் அவதார புருஷரென்றே சொல்லவேண்டும். அவர் இம்மண்ணுலகி லுள்ள மனிதரைப்போல உண்டு உறங்கி காலத்தைக் கடத்தாது பிறருக்கு உழைப்பதையே அவருடைய முக்கியமான கொள்கை

என்றுளெண்ணி அவ்விதமே அவர் செய்துவருவது வெகுஆச்சரியமாக விருக்கின்றது. தாங்கள் சில நாளைக்குமுன் என்னைக் கண்டுபிடிக்கும்பொருட்டாக அன்னவரிடம் போய்ச் சொல்லிய அன்றே அவர், உங்களை யனுப்பிவிட்டுத் தனி காரில் சென்றபோது, அவர் அதற்கு முன்னால் நாடகக்கொட்டகையில் கொள்ளை நடந்தவிஷயத்தை அந்தக் கம்பெனியின் சொந்தக்காரர் அவரிடம் கூறி அந்த ராவண வேஷந் தரித்தவனையும், சீதை வேஷம் தரித்தவளையும் தனித்தனி எடுத்த புகைப்படத்தை அவருக்குக் கொடுத்திருந்ததை தன் சட்டைப் பையில் வைத்துக்கொண் டிருந்தாராம். அவர் தனியாகச் செல்லுகையில், அங்கு மவுண்ட்ரோட்டில் ஒரு ஆசாமி டிக்கட்டு வாங்கிக் கொண்டு சென்றானாம். அவனை அவர் அகஸ்மாத்தாகக் கண்டுவிட்டாராம். உடனே தன் சட்டைப்பையிலிருந்த புகைப்படத்தை எடுத்துப் பார்த்தாராம். அந்த ராவணன் வேஷந் தரித்த மனிதனே இப்போது வெள்ளைக்காரன் தொப்பி வைத்துக்கொண்டு போகிறான் என்பதை யவர் ஒரு நொடியில் யூகித்தறிந்துகொண்டு, அவன் பின்னாலேயே தன் காரைவிடச் செய்து அவன் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டுச் சென்றாராம். அவன் நுங்கம்பாக்கத்தில் ஓர் சந்தில் இடிந்துபோன சிறிய வீட்டையடைந்து உள்ளே சென்றானாம். அப்போது அவரும் பின்தொடர்ந்து கூடவே அவனுக்குத் தெரியாமல் சென்றாராம். அப்போது அந்த வீட்டுக் கதவு தாளிடப்பட்டிருந்தபடியால், அவர் தந்திரமாக பக்கத்திலிருந்த சந்தின் வழியாகச் சென்று இடிந்த குட்டிச்சுவரின் மீதேறி அங்கு மேல் கூரையை அடைந்து ஓட்டைப் பிரித்து விலக்கிக்கொண்டு அதன் வழியாகக் கீழே நடந்த எல்லா விஷயத்தையும் கவனித்துக் கொண்டிருந்தாராம். அந்த ராவண வேஷம் தரித்த மனிதன் அந்தப் பெண்ணை எடுத்துக்கொண்டு வெளியூருக்குப் போகத் தயாராக விருந்ததை யறிந்துகொண்டு அங்குள்ள அமைப்பை எல்லாம் கவனித்து, உடனே தானும் அவனோடு கூடச் செல்வதற்குத் தயாராக விருந்த சமயம், அந்தப் பெண்ணை அங்கிருந்த கிழவி ஒரு பெரிய தலைவாழை இலைக்கட்டுக்குள்ளே வைத்து சாமர்த்தியமாய்க் கட்டி வைத்திருந்த சுருளை இருவராகத் தூக்கி எடுத்துக் கொண்டு வந்து மோட்டாரில் ஏற்றிவிட்டுத் தானுமமர்ந்து, ரயிலடிக்கு வண்டியைத் திருப்பினானாம். அதையும் அதற்கு முன்னால் அங்கு நடந்த சம்பாஷணைகளையும் கவனித்துக்கொண்டிருந்த நமது குருநாதர், தானும் உடனே அவர் ஏறிவந்த மோட்டாரில் ஏறிக் கொண்டு பின்தொடர்ந்து சென்று, அந்த ஆசாமி ஏறிய வண்டியிலேயே தானும் ஏறிக்கொண்டு ஓர் நாட்டுப்புறத்து மட்டியைப்போல நாகரிகமில்லாமல் பேசவும், சிரிக்கவும் அந்த மேத்தைகளைக் கண்டு மகிழ்வதுமாய்ச் செய்துகொண்டே சென்று, தக்க சமயத்தில் அவனைப் பிடித்துவிடவேண்டுமென்று எண்ணி அசல் பயித்

தியக்காரன்போல நடந்துகொண்டு உட்கார்ந்திருந்து, மறுபடி படுத்து அயர்ந்து நித்திரை செய்வதுபோலப் பாசாங்கு செய்துகொண்டே இருக்கையில், கூடவிருந்த ராவணன் நமது நிபுணரை அசல் பயித்திய மென்று உணர்ந்து, அவரை லக்ஷியம் செய்யாமல் அவர் நன்ருய்க் குறட்டைவிட்டுத் தூங்குகின்றதாக எண்ணி, அவன் மெல்ல இறங்கி, அந்த வாழை இலேக்கட்டை மெல்ல அவிழ்த்து அதற்குள்ளிருக்கும் பெண்ணுக்குச் சற்று காற்று வீசும்பொருட்டு அதைக் கையில் பிடித் திருந்த சமயம் நமது நிபுணர் தன்னுடைய தந்திரச்செய்கையால் கூச்சலிட்டுக்கொண்டு கீழே உருண்டு விழுந்து அந்த வாழை இலேக் கட்டைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதற்குள் பெண்ணிருப் பதை நன்ருய் உணர்ந்துவிட்ட தக்ஷணமே அந்த இராவணன் இவர் எதிர்பாராவிதமாய் இவ்விதம் செய்ததை எண்ணி நடுங்கி அவரைத் தூக்கி அப்பால் விலக்கிவிட்டுக் கட்டை நன்ருக முன்போலக் கட்டி வைத்துவிட்டான். அதற்குள் ராஜாராம் நாயுடு தன்னிருப்பிடத் தில் உட்கார்ந்து கொண்டு முன்போலவே செய்துகொண்டிருக் கையில் மணி நடுநிசி சுமார் 11 ஆய்விட்டது. இவருடைய கருத் தாவது அந்தத் திருடனைத் தக்க சமயத்தில் பெரிய ஸ்டேஷனில் பிடித்துத் தரவேண்டும் என்பது. இங்கு திடீரென்று பிடித்துவிட் டால், அவன் தப்பித்துக்கொண்டு வெளியில் கட்டைத் தூக்கி எறிந்து விட்டுத் தானும் குதித்தாலும் குதித்துவிடுவான். அவன் எதற் கும் அஞ்சாத நெஞ்சைப் படைத்த ஆசாமி. வீணே இருவருக் கும் உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற நோக் கத்தோடு பேசாமலிருந்த சமயம் அங்கு வண்டி ஒரு ஸ்டேஷனில் நின்றது. அப்போது அவருக்குப் பழக்கமான மனிதர் ஒருவர் அகஸ்மாத்தாக அவரைக் கண்டு வண்டியருகில் வந்து," ஆ! ராஜாராம் நாயுடுகாரு! தாங்களா இந்தக் கோலத்தோடு வருகின்றீர்கள்?" என்று கேட்டதும் நாயுடு சற்றுத் திகைத்து உடனே தந்திரமாக வந்த மனி தருக்கு சமிக்ஞைசெய்து அப்பால் அனுப்பி விட்டாராம். பிறகு நாயுடுகாரு தாம் எதையும் கவனியாமல் வெளிப்புறத்தை உற்றுநோக் கியபடி உட்கார்ந்திருந்த சமயம் அந்த ராவண சந்நியாசி ஓரேபாய்ச் சலாக நாயுடுவின்மீது பாய்ந்து அவன் ஆயத்தமாகக் கையில் வைத் துக்கொண்டிருந்த மயக்க மருந்தை அவர் மூக்கினருகில் காட்டி அவர் கையை கெட்டியாகத் திமிரவொட்டாவண்ணம் பிடித்துக்கொண்டு தள்ளிவிட்டானும். தாம் மூச்சுபிடித்து யோகாப்பியாசம் செய்து பழக்கமானவராகையால் அவன் மூக்கினருகில்வைத்த மருந்தை தாம் முகராமல் மயக்கமாக விழுந்து விட்டவர்போல அபிநயித்து மூச்சு விடாமல் பந்தனம் செய்திருந்தார். காதா! தம்முடைய நல்லகாலத் தின் பயனே அவ்வமயம் வண்டி ஸ்டேஷனுக்கருகே வந்துகொண் டிருந்ததாம். அங்கு இவரைத்தள்ளிய இடத்தில் கீழே மணல் நிறைய விருந்தபடியாலும், இவர் தலையில் பெரிய பலமான முண்டாசு கட்டிக்

கொண்டிருந்தபடியாலும், அவன் வண்டியிலிருந்து உருட்டியதும் அவர் ஒருஅடி தூரத்திலேயே விழுந்துவிட்டபடியாலும், ஈசனருளால் அவருக்குத்தலையிலும் மற்ற இடங்களிலும் பலத்த அடிபடாமல் ஏதோ சிறிது காயம்பட்டதாம். தள்ளிய ஆசாமி மறுபடி உள்ளே உட்கார்ந்து விட்டானும். அவரைத்தள்ளிய சமயம் எதிர் லயனில் வந்துகொண்டிருந்த கூட்ஸ் வண்டியோட்டி இதைக் கண்டு உடனே வண்டியை நிறுத்தி விசிலடித்து எதிர் வண்டியையும் நிறுத்தச்செய்து, அவன் இறங்கி இவர் கீழே விழுந்தவிடத்திற்கு வந்தானும். அப்போது அங்கு அவனைத்தவிர வேறு யாருமில்லாமையால் நாயுடுகாரு, அவன் குனிந்து தன்னை உற்று கவனித்தசமயம், அவனிடத்தில் ரகஸியமாக, “ஐயா! உம்மால் ஒருகாரியம் ஆகவேண்டும். நான் துப்பறியும் ராஜாராம் நாயுடு. எனக்கு அடிபடவில்லை; விவரம் பிறகு சொல்கின்றேன். என்னை நீங்கள் ஸ்டேஷன் விடுதியில் கொண்டுவிடுங்கள். நான் மயக்கமாக விருப்பதாகவே நடிக்கவேண்டும். ரகஸ்யம் ஜாக்கிரதை” என்றுகூறி முடிக்குமுன் இந்த வண்டியும் நின்று விட்டதாம். இந்த வண்டியோட்டியும் இறங்கிவந்து விட்டானும். பிறகு இன்னும் கும்பல்கூடி விளக்குக் கொண்டுவந்து பார்த்ததில் சிலர் “ஆ! இவர் துப்பறியும் ராஜாராம் நாயுடுவல்லவா! அடடா! இவருக்கா இத்தகைய ஆபத்து?” என்று கூறினார்களாம். அதே நிமிஷத்தில் ஸ்டேஷன் மாஸ்டர், கார்டு, ஆட்கள் எல்லோரும் வந்து கூடி விட்டார்களாம். உடனே நாயுடுவை ஸ்டேஷனிலுள்ள முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில்கொண்டு விட்டார்களாம். அப்போது ஸ்டேஷன் மாஸ்டருக்கு நாயுடுகூறிய செய்தியை வண்டியோட்டி உரைத்தானும். பிறகு ஸ்டேஷன் மாஸ்டர், நாயுடு அருகில் வந்து, ரயில்வே போலீஸாருடன் தான் மாத்திரம் அங்கு இருந்து மற்றவர்களை விலக்கிவிட்டு நாயுடுவை நடந்த வரலாற்றைக் கேட்க அவர் எல்லாவற்றையும் சுருக்கமாகக் கூறிவிட்டு, முதல் வகுப்பு வண்டியில் ஒருபெரிய வாழை இலைக்கட்டோடு ஒருவன் உட்கார்ந்திருக்கின்றான். அவனை வெகு ரகஸியமாகவும் ஜாக்கிரதையாகவும் பிடித்து போலீஸில் வைத்துவிடுங்கள். இன்னும் அவன் மூலமாக விஷயங்கள் கண்டுபிடிக்க ஏது விருப்பதால் அவனைப்பிடித்தது வெளியில் தெரியாமலிருக்க வேண்டும். நீங்கள் அவனைப் பிடித்துச் சென்னைக்குக் கொண்டுவந்து போலீஸில் வைத்துவிட்டு வாழையிலைக்குள் இருக்கும் பெண்ணைத் தனியறையில் வைத்துவிடுங்கள். நான்நாளைக்கு வந்து மேலே யாகவேண்டியதைச் செய்கின்றேன். எனக்குப் பலமாக அடிபட்டதாகவே பாவித்து நீங்கள் என்னைத் தனிவண்டியில் சென்னைக்குக் கொண்டுபோய் ஜனரலாஸ்பத்திரியில் விட்டுவிடுங்கள். காரியம் ரகஸியமாக விருக்கட்டும். நாளை நான் கமிஷனரைக்கண்டு மேல் நடப்பதைக் கவனிக்கின்றேன். அவனிடத்தில் எனக்குப் பலசந்தேகங்கள் தோன்றுவதால் அவன் விஷயம் ரகஸியமாகவே இருக்கட்டும்”

என்றார். உடனே போலீஸார் இந்த ஆச்சரியசெய்தியைக்கேட்டு அதே ஸ்டேஷனில் ராவண சந்யாசியைக் கைதுசெய்து வாழை இலைக்கட்டையும் எடுத்துக்கொண்டு வந்து பிரித்து அதனுள்ளிருந்த பெண்ணை வெளியிலெடுத்து விட்டார்கள். இதற்குள் வண்டிசென்று விட்டதாம். கூடூர் ஸ்டேஷனிலிருந்து தனிவண்டி தருவித்து அதில் ராஜாராம் நாயுடுவையும், ராவணனையும், அந்தப் பெண்ணையும் ஏற்றி போலீஸார் சென்னையை யடைந்து நாயுடுவை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டுப் பெண்ணை ஒரு தனி அறையில் வைத்து, ராவணனை போலீஸ் காவலில் வைத்து விட்டார்களாம். ஆஸ்பத்திரியை அடைந்த நாயுடு அங்கு பெரிய வைத்தியரைக் கண்டு, உள் மர்மத்தை எல்லாம் கூறி வெளிக்குத் தனக்குப் பலத்த அடி பட்டுவிட்டதென்றும், மூளையே சிதறிவிட்டதென்றும், பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டு விடவேண்டுமென்றும்—விட்டு விட்டதாயும் நாளை பகலுக்குள் செய்துவிடவேண்டும். நான் மறைவிலிருந்தே சில காரியங்களை நடத்தவேண்டும். நான் நேரில் இருப்பதாகத் தெரிந்தால் என்னையே அமுக்கிவிட வழி தேடுவார்கள். இது விஷயத்தில் தாங்கள் உபகாரம் செய்யவேண்டும் என்று கூறியதை வைத்தியர் ஆமோதித்து, அவ்விதமே மறுநாள் பிற்பகல் தாங்கள் சென்றிருந்ததாகக் கூறிய நிமிஷத்தில் வைத்தியர் மூளை சிதறிவிட்டதென்று கூறி உடனே ஒருவரையும் உள்ளே விடாமல் தடுத்து விட்டாராம். பிறகு இவரைப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கொண்டுவிட்டதாகக் கூறிவிட்டார்களாம். அப்போது இவர் போலீஸார் மாதிரி உடையணிந்து நேரே ராவணனைப் பிடித்துவைத்திருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று ராவணனைக் கண்டு, அவனிடமிருந்த சகல கடிதங்களையும் எடுத்துக்கொண்டு, பெண்ணருகில் வந்தாராம். அப்போது அந்தப் பெண் மயக்கம் தெளிந்து உட்கார்ந்திருந்தாளாம். இவரைக் கண்டதும் எழுந்து நின்ற பெண்ணைக் கண்டு நாயுடுகாரு, "ஏ மாதே! உனக்கு உடம்பு எப்படி இருக்கின்றது? உனக்கு இனி பயம் வேண்டாம். உன்னைப் பிடித்துவந்தவனை நான் கைது செய்துவிட்டேன். ஆகையால் பயமின்றி உன் வரலாற்றைச் சொல்" என்று வினவினாராம். அதைக்கேட்ட அந்தப் பெண், "ஐயா! எனக்குத் தெரிந்ததை நான் சொல்லுகிறேன். எனக்குப் புத்தியறிந்த நாளாய் நான் அந்த நாடகக் கொட்டகையிலே இருக்கின்றேன். அதன் எஜமானரும் அவர் மனைவியுந் தான் எனது தாய் தந்தையரென்று வெகுநாள் வரையில் எண்ணியிருந்தேன். பிறகு எனக்கு வயது முதிர முதிர அவர்கள் என்னைப் பெற்ற தாய் தந்தையரல்லவென்று என்னோடு கூட நடிக்கும் பெண்மணிகளில் சிலர் கூறுகின்றதால் எனக்கு உண்மை எதுவென விளங்கவில்லை. ஆகையால் அதைப்பற்றி எனக்கு அவ்வளவுதான் தெரியும். எனக்கு புத்தியறிந்த நாள் முதல் நான் அந்நாடகத்திலேயே நடித்து வருகின்

றேன். எனக்கு விவாகம் இன்னுமாகவில்லை. என்னை அந்த எஜமானர் அவர் வீட்டிலேயே வைத்து அவர் குழந்தையைப்போலவே பார்த்து வருகின்றார். ஆனல் அது அநேகம் பேருக்கு நான் அவர் வீட்டிலிருப்பதென்பது தெரியாதென்று நினைக்கின்றேன். இப்போதே ஒருமாதகாலமாக இந்த ராவண வேஷம் போட்டபாவி அங்கு வந்து அந்த வேஷத்திற்கு வேண்டிய பாட்டு, நடிப்பு முதலியதெல்லாம் கற்றுக்கொண்டு முதல்நாள் ஒத்திகைவைத்து மறுநாள் பகிரங்க நாடகமாக நடித்தோம். அப்போதே அவன் என்னை எதிர்பாராவிதமாக தூக்கிக்கொண்டு போய்விட்டான். அதற்குமுன் அவன் இவ்வித துன்மார்க்கன் என்பது எனக்குச் சிறிதும்தெரியாது. எவ்வளவோ நன்மையாகவே நடந்து யோக்கியனுகவே காணப்பட்டான். அவன் எதிர்பாராத விதமாக என்னை இவ்விதம் தூக்கிக்கொண்டு நேரே பின்பக்கத்து வழியாய்ச் சென்று அங்கு நின்றிருந்த மோட்டாரில் வைத்து அதிவிரைவில் அந்த வண்டியை விட்டுவிட்டான். பிறகு வண்டி கொஞ்சநேரம் சென்று ஒரு பாழடைந்த வீட்டின்முன் நின்றதும் என்னை 'இறங்கிவருகின்றுயா வெட்டிவிடட்டுமா சந்தடி செய்யப் போகிறுய்? பத்திரம்' என்று கூறி பயமுறுத்தியதன்மேல் அவன் கையிலிருந்த கத்தியைப் பார்த்து பயந்து வண்டியைவிட்டு இறங்கி உள்ளே சென்றேன். என்னை ஓர் அறையில் போட்டு பூட்டிவிட்டான். அங்கு ஓர் தந்திரமுள்ள கிழவி இருக்கிறுள். அவளே எனக்கு வேளைக்கு வேளை ஆகாரம் கொடுப்பதும் உபசாரம் செய்வதும் என்னைத் தான் எவ்விதமாயினும் தப்பவைத்து விடுவதாகவும் கூறி நயமாகவே நடந்துகொண்டே அங்கே வைத்திருந்தாள். அந்தக் கிழவி நேற்று சாயந்திரம் எனக்குக் காப்பி கொடுத்தபோது அது எனக்குக் குமட்டிக்கொண்டு வந்தது;அதை பலவந்தமாகக்குடித்தேன். அவ்வளவு தான் எனக்குத் தெரியும். பிறகு இங்குக் கண்விழித்துப் பார்த்தபோது இப்போது என் பக்கத்திலிருந்தவர்க ளிருந்தார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரிந்த விஷயம். நான் அன்று அணிந்துகொண்டிருந்த ஆடையாபரணங்களெல்லாம் அவனே கழற்றி வாங்கிக்கொண்டான். நான் இப்போதணிந்திருக்கும் நகைகள் நான் எப்போதும் அணிந்துகொள்வதேயாகையால், அவைகள் என்னுடம்பிலிருக்கின்றன. நான் கண் திறந்து பார்த்தபோது என் பக்கத்தில் இவர்களையும், நானிருப்பது அந்த அறையல்ல வேறு அறைபோலிருந்ததையும் கண்டு நான் அவர்கள்தான் என்னை வேறு இடத்திற்குக் கொண்டுவந்துவிட்டதாகப் பயந்து நடுநடுங்கினேன். பிறகு நீங்கள் சொல்லியதுபோலவே இவர்களும் தைரியம் சொல்லியதின்மேல் எனக்குச் சற்று மனதாறுதலடைந்ததென்றுலும் இன்னும் எனக்கு நம்பிக்கை இல்லை. உண்மையில் நீங்கள் போலீஸார்தானு?'' என்று அந்தப் பெண் வெகு பயத்தோடும் வணக்கத்தோடும் கேட்டாளாம். அதைக்கேட்ட நமது நாயுடு அவளுக்குத் தேறுதல் கூறி, அவளை

அவன் கொண்டுவந்த விவரம், இடையில்நடந்த விஷயம், தாம் அதைக் கண்டுபிடித்து அரெஸ்ட்டு செய்த விவரம் முதலிய எல்லாவற்றையும் கூறி இனிமேல் நீ சற்றும் பயப்படவேண்டாம். நீ உடனே என் வீட்டிற்கு வந்துவிடு. உன்னை ஜாக்கிரதையாக உனக்குரியவர்களிடம் சேர்த்து விடுகின்றேன். நான் உன்போன்ற பேதையர்களைக் காப்பாற்றும் பொருட்டே கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவன். நீ இனிமேல் பயமென்பதே கொள்ளவேண்டாமென்று கூறி போலீஸாரிடம் சொல்லிவிட்டு அவளைத் தன்னோடு வண்டியில் வீட்டிற்கு அழைத்து வந்தாராம். பிறகு அந்தக் கடிதங்களை எல்லாம்படித்து அவற்றின் உள்செய்தியை அறிந்துகொண்டாராம். அதாவது, அதில் இருக்கும் கடிதங்களெல்லாம் வெளியூரிலிருந்து வந்தவைகளாகவே காணப்பட்டனவாம். அவற்றில் சில ரங்கூனிலிருந்து வந்தனவாக விருந்ததாம். அவற்றின் சாராம்சம்: "நான் எத்தனை நாளைக்கு இங்கிருந்தே உழைப்பது. நான் வெகுநாளாகப் பட்டணம் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டாலும் என்னைப்போல உழைப்பாளி இல்லை என்றும் இந்த ஊரில்வேறு எவன் வந்தாலும் என்னைப்போல வேலை செய்ய மாட்டானென்றும் என்னாலேயே வரும்படி அதிகமென்றும் சம்பளம் அதிகமாகக்கொடுப்பதாகவும் கூறி என்னை வரவிடாமலேயே செய்கின்றீர்களே? நான் சுமார் முப்பது வருஷத்திற்கு மேலாகவே இங்கு இருக்கின்றேன். நான் பட்டணத்திற்கு எதையாவது முகாந்திரம் வைத்துக் கொண்டு வரலாமென்றாலும் அக் காரியங்களுக்கெல்லாம் நீங்களே நேரில் வந்து விடுகின்றீர்கள். எனக்கு அங்குவந்து அந்த மனிதர்களையும் பார்க்க அதிக ஆவலாகவிருக்கின்றது. ஆகையால் தயவு செய்து ஒரு பிரயாணம் வருவதற்கு உத்தரவளிக்கவேண்டும்" என்று எழுதி யிருந்ததைப் படித்தார். அதனடியில் வீரபத்திரன் என்று கையொப்பமிட்டிருந்தது. அதையும் பார்த்துக்கொண்டாராம். இன்னொரு கடிதத்தில் "எஜமானே! எனக்குத் தாங்கள் மனமிரங்கி இவ்வளவாவது விடையளித்தீரே. அதுவே போதுமானது. எனக் கிஷ்டமானபோது வரலாம். வந்து ஒருவாரம்தானிருந்து போகலாம் என்றிருப்பது வெகு சந்தோஷ மாயிற்று. என்னை அங்குள்ள வேலைக்காரருக்குத் தெரியுமோ தெரியாதோ சந்தேகம்தான். நான் அடுத்த வாரமே வந்துவிடுகின்றேன்." என்று எழுதியிருந்த கடிதத்தைப் படித்தாராம். அவ்விதமே அவனிட மிருந்த கடிதத்தை எல்லாம் படித்து சாரத்தைக்கிரகித்துக்கொண்டு இதுதான் நல்ல தருணம் இதைக் கைவிடலாகாதென்று தீர்மானித்து உடனே ஒரு தந்தி ரங்கூனுக்கு அந்தக்கடிதத்தில் கண்ட விலாசத்திற்கு 'நீங்கள் இந்த வாரம் வரவேண்டாம் பிறகு தெரிவிக்கின்றேன்.' என்று எஜமானன் பெயர் வைத்து அடித்துவிட்டாராம். பிறகு அவனிடமிருந்து கொண்டு வந்த கடிதக்கட்டில் வீரபத்திரனென்று கையெழுத்துப்போட்ட சிறிய புகைப்படமொன்று இருக்கக் கண்டார். சரி இவன்தான் வீரபத்திர

னென்னும் ஆசாமியாக இருக்க வேண்டுமென்று யூகித்து, உடனே தான் ஒரு யோசனை செய்தாராம். அதாவது, தன்னுடைய ஆட்களை உடனே அழைத்து, அவர்களிடத்தில் தான் கண்டுபிடித்த விஷயங்களை எல்லாம் கூறி "நான் நாளைக்கு வீரபத்திரன் போல வேஷம் தரித்துக்கொண்டு அன்று கண்ட பாழும் வீட்டிற்குப்போகப் போகிறேன். நீங்களெல்லோரும் உஷாராக போலீஸார் உடை தரித்துக்கொண்டு பிற்பகல் அங்குவந்து கிழவியை அதிகாரம் செய்யுங்கள். நான் அங்குள்ள முக்கியமான எஜமானன் உள் ஒன்று இருப்பதாக அந்தப் பெண்ணின் மூலமாக தெரிந்துகொண்டேன். அச்சமயத்தில் அதைக்குறித்துச் சோதனைபோடுவதற்குச் சந்தர்ப்பம் வாய்ப்பதற்கு இதைத் தவிர வேறுவழி கிடையாது. திடீரென்று கதவை திறவென்றால் கிழவி திறக்கமாட்டாள். அதைப் பார்க்கவும் எனக்குச் சமயமகப்படாது. ஆகையால் நீங்கள் போலீசாராக வந்து கதவைப் பலமாக இடியுங்கள். அதற்கு முன்னமே நீங்கள் இதோ நான் சொல்லிக்கொடுக்கும் கதையை நன்றாகப் பாடம் பண்ணுங்கள் என்று (வீரபத்திரன் கிழவியிடம் பீரோவில் பெண்ணைப்பிடித்த விவரம் சொல்லியதைக் கூறி, நான் அந்த சமயம் நீங்கள் கதவை இடிப்பதற்குப் பயந்து ஒளித்துக்கொள்பவன்போல தந்திரம் செய்து அந்த அறையில் புகுந்துகொள்ளுகிறேன். நான் அறையில் கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளேஇருக்கும் எஜமானுடைய பெட்டி பேழைகளைத் திறந்து எல்லாவற்றையும் பார்க்கும்வரையில் நீங்கள் கிழவியிடம் இவ்விதம் (முன்னொரு அதிகாரத்தில் போலீஸார் கிழவியிடம் கூறிய சகலமான கட்டுக்கதைகளையும் கூறி) நடந்துகொண்டு அவளை நன்றாகப் பயமுறுத்தி என்னைப் பிடிக்க வந்ததாகவும் கூறி கடைசியில் வீடுமுற்றும் வருகையில் பிறகு நடக்கவேண்டியதைநான் அப்போது ஜாடையாக தெரிவிக்கின்றேன். அதே மாதிரிநடந்துகொள்ளுங்கள். வெகு ஜாக்கிரதை. உங்கள் தந்திரமான பேச்சில்தான் நான் உள்ளே வேலைபார்க்கவேண்டும். ஜாக்கிரதை ஜாக்கிரதை" என்று எச்சரித்துக் கூறிவிட்டாராம். பிறகு மறுநாள் உதயமானதும் நமது நாயுடு தமக்கு வேண்டிய சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு தான் கண்ட புகைப்படத்தைப்போல பெரிய தலைப்பாகை சொக்காய் முதலியவற்றை அணிந்துகொண்டு, ஒருபெரிய பீரோவைக் காலி செய்துவிட்டு அதை ஒரு கட்டை வண்டியில் போட்டுக்கொண்டு தன்னுடைய ஆட்களில் இருவரைக்கூட அழைத்துக்கொண்டு கட்டை வண்டியோட்டிக்கு அந்த வீட்டை அடையாளம் சொல்லிவிட்டுதான் தன்னுடைய ஆள்களுடன் திருவொற்றியூரிலிருந்து நுங்கம்பாக்கத்திற்குத் தனிக் குதிரைவண்டி வைத்துக்கொண்டு நேராகவந்து சந்தின் முனையிலேயே இறங்கி அவ்விருவர்களையும் குறிப்பான ஓர் இடத்திலிருக்கச் செய்து தான்மாத்தி

ரம் கிழவி வீட்டிற்குவந்துசேர்ந்தாராம். (கிழவிக்கும் வீரபத்திரனுக்கும் நடந்தசம்பாஷணைகளையும், போலீஸார் வந்து கிழவியோடு தர்க்கம் புரிந்ததையும், பிறகு கிழவி தந்திரமாக அவர்களை ஏமாற்றியதையும் போலீஸாராக வந்த நாயுடுவின் ஆள்கள் கிழவி வீட்டிற்குக் காவல் இருக்கச் செய்து சென்றதையும், பிறகு வீரபத்திரரான நாயுடுவின் தந்திரத்தின்மேல் கிழவி புறக்கடைப் பக்கமிருக்கும் போலீஸானைப் பேச்சுப்பராக்கில் வீரபத்திரரான நாயுடு ஒரு மருந்து கொடுப்பதாக சொல்லிக்கொடுத்த சர்க்கரைப் பொட்டலத்தை வாங்கி அதைக்கலந்திருந்த உப்புமாவை அவனைத் தின்னும்படியாகச் செய்ததையும், பிறகு அந்தக் கூட்டத்தாரின் ரகஸிய இடத்தை வீரபத்திரராகிய நாயுடு அறிந்துகொள்ளும்பொருட்டு தக்க சமயம் அதுவென்று உடனே தாம் கொண்டுவந்திருந்த காலி பீரோவை தமது ஆள்கள் மூலமாகவே வண்டியில் ஏற்றிக்கொண்டு அவ்விடத்தில் சென்றதையும், அங்கு தான் வீரபத்திரனைப்போலவே நடித்து அவர்களைத் தந்திரமாக ஏமாற்றி எஜமான் இருப்பிடத்தை யறிந்து கொள்ளும்பொருட்டு, பீரோவிலிருந்த பெண், கிழவியால் தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டதாக ஒரு கடிதமெழுதித்தாம்தயாராக அந்த அறையிலேயே முன்னதாக வைததிருந்ததை எடுத்துப் படித்து எல்லோருக்கும் கலக்கத்தை உண்டாக்கி, தாமும் பெருத்த ஆக்ரோஷமுள்ளவனாய் இருப்பதாக நடித்து உடனே கிழவியைப் பிடிக்கவேண்டுமென்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு மோட்டாரில் ஏறிச்சென்று, அதன் பின்னர் வீரபத்திரனாகவே நடித்து, சின்னிபொம்மைக்காரி வேஷந் தரித்து வைதேகியையும் கௌரியையும் மோட்டாரில் வைத்துவந்த விவரம்வரையில் நமது வாசகர்களுக்கு தெரிந்த விஷயமாகையால் அதைச் சுருங்கக்கூறி, அந்த சம்பவத்திற்குள் முக்கியமாய் நடந்த விஷயத்தை மாத்திரம் நாம் வாசகர்களுக்கு விளங்கக்கூறுவது அதியாவசியமாகையால் அவற்றைக் கடிதத்தோடு சேர்த்து வரைவோம், என்னுருயிர் ப்ராணபதி! "ஆஹா! அன்னவரின் தந்திரங்களை என்னவென்று கூறுவேன்? அன்னவர் கிழவியை நிமிஷத்தில் ஏமாற்றியதை அறிவிக்காமல் கிழவி தம்மை ஏமாற்றியதாகத் தந்திரம் செய்துள்ள அவர் சாமர்த்தியமே சாமர்த்தியம். தன்னுடைய முக்கியமான விஷயங்களை என்னிடத்தில் விரிவாக வெளியிட்டதாவது, தாம் ராவண வேடதாரியைத் தொடர்ந்து சென்றபோது, அங்கு ஓட்டின்மேலிருந்து கவனித்த காலத்தில் அந்த மனிதன், கிழவியோடு நம்மவர் வருவார் என்று கூறியதை முக்கியமாகத் தாம் கவனித்துக் கொண்டாராம். அவரைப்போல தாமேவந்து விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் பூராவாக விழுந்துவிட்டதாம். பிறகு, அவரை அந்த ராவணன் ரயிலில் தள்ளியபிறகு அவனை ரயில்வே போலீஸார் பிடித்து வைத்திருந்தபோது தாம் அவனிடமிருந்த கடிதங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு வந்ததில் ரங்

கூனிலிருக்கும் வீரபத்திரன் என்றவன் இங்கு வருவதற்காக ஆசைப்படுவதாகவும் அதற்கு இவர்கள் நீ அங்கிருந்து வந்துவிட்டால் வேலையே கெட்டுவிடும். உன்னால் தான் எவ்வளவோ வேலையாகின்ற தென்றும், கூடிய சீக்கிரத்தில் வரவழைப்பதாயும், இன்னும் சில கடிதங்களில் அடுத்த வாரத்தில் வரும்படியாக இவர்கள் எழுதியிருப்பதி லிருந்து அவன் பதில் எழுதியிருப்பதாகத் தான் அக்கடிதங்களில் அறிந்து கொண்டாராம். மேலும் அவர்களுடைய தந்தி தபால் முதலிய விவரத்தைக் கண்டாராம். உடனே வீரபத்திரனுக்கு நீ இப்போது புறப்படவேண்டாமென்ற தந்தியை அடித்து அதற்குப் பின்னரே தாம் மேல்கூறிய வேலைகளைச் செய்தனராம். கிழவி இருந்தவிடத்தில் எஜமான் அறையைத் திறக்கச்செய்து தான் ஒளிந்துகொள்வதான முகாந்திரத்தை வைத்துக்கொண்டு அவ்வறையில் புகுந்து கிழவி வீதியில் தமது ஆட்களோடு சண்டைசெய்து கொண்டிருக்கையில் அங்கிருந்த பெட்டி பேழை முதலியவற்றை மாறுசாவியின் உதவியால் திறந்து அதற்குள்ளிருக்கும் கடிதங்களை எல்லாம் எடுத்துப்படிக்கலானாராம். அந்தக் கடிதங்களிலிருந்து அவருக்கு இவர்கள் ஒரு கொள்ளைக்கூட்டச் சங்கத்தார் என்றும் பலபேர்கள் பல மாதிரியான வேஷங்கள் தரித்து பணத்தைப்பறிப்பதும், பெண்பிள்ளைகளைப் பிடித்துக்கொள்வதும், தக்க வயதுள்ள வாலிபர்களைப் பிடிப்பதும், அவர்களைச் சரிப்படுத்தி தமது கூட்டத்தில் சேர்த்துக்கொள்வதோ அல்லது அவர்களிடமிருந்து பணத்தைப் பறித்துக்கொண்டு அனுப்பி விடுகின்றதோ செய்து வருகிறார்களாம். பெண் பிள்ளைகளில் நன்றாய் அழகாயிருக்கின்றவர்களைத் தாமே வைத்துக்கொள்வதாம். குரூபிகளை, வடக்கேயுள்ள தமது இரகசிய சங்கத்துக்கு விற்றுவிடுவதாம். கிழங்கட்டைகளைப் பிடித்துக் கொண்டு 'உன் பணத்தில் இவ்வளவு கொடுத்தால்தான் உன்னைவிடுவேன்' என்றுகூறி பணத்தைப் பிடுங்கிக்கொண்டு விடுவதாகவும், அவர்களுடைய கூட்டத்திற்கு ஒவ்வொரு முக்கியமான ஊரிலும் கிளையாபீஸ் மாதிரியாக, ஒவ்வொரு மறைவிடமும், ஏஜண்டும், ஆள்களும் இருந்து வேலைசெய்வதாகவும் இதன் முதலாளிக்கு அனேக மறைவிடங்களிருப்பதாகவும், தபால் தந்தி, முதலிய விலாஸத்திற்குத் தனியான ஓர் இடமும், அதற்கு சில ஆட்களும் வைத்திருப்பதாகவும், அந்தக் கூட்டத்தாருக்கு எந்தவிதமான கடிதமோ தந்தியோ இங்குவந்தால் இங்கிருந்து ஆட்கள் எஜமானிடத்தில்கொண்டு கொடுப்பதாகவும், ராவணவேஷதாரி தான் தந்திரமாக நாடகக்கொட்டகையில் சேர்ந்து அங்கு கிடைத்தவரையில் சுருட்டிக் கொள்வதன் பொருட்டு சில நாட்களாக நாடகக்காரரிடத்தில் சென்று தாம் நாடகத்திலேயே என்றுமிருக்கப் போவதாயும் தன்னைச்சேர்த்துக் கொள்ளும்படி கேட்டதற்கு கம்பெனிக்காரர் சேர்த்துக் கொண்டதாகவும்,

அங்குசென்று ராவண வேஷத்துக்குரிய விஷயங்களைக் கற்றுக்கொள்வ தாகவும் பிறகு அந்தவேஷத்தில் தாம் தோன்றி நடிக்கப்போவ தாயும், அன்றே சீதையைத் தூக்கிக்கொண்டுவந்து விடுவதாயும் இவன் எஜமானனுக்கு எழுதியிருப்பதாகவும் அதை எஜமானன் ஆமோதித் துப் பதில் எழுதியிருப்பதாகவும் எல்லா விஷயங்களையும் தாம் கடிதங் களின் மூலமாகவே தெரிந்துகொண்டாராம். அப்போதே தாம் பாதி ஜெயித்துவிட்டதாக எண்ணினாராம். ஆயினும் எஜமானனுடைய இருப்பிடம் வேறு இரண்டு மூன்றிடங்கள் இருக்கின்றதென்று அறிந்துகொள்ள முடிந்ததேயன்றி அந்த இடங்களை நேரில் அறியும் படியான விவரமான கடிதம் ஒன்றும் கிடைக்காமையால், இந்தக் கிழ வியைக்கொண்டு கூட்டத்தார் இருப்பிடத்தை யறிந்துகொண்டு பிறகு அங்குத்தமது தந்திரத்தினாலேயேஎஜமானன் இருப்பிடத்தை யறிய வேண்டும் என்று எண்ணினாராம். ஆனால் எஜமான் தன்னை வீரபத்திர னல்லவென்று கண்டுகொண்டால் என்ன செய்வது? எஜமான் நேரில் பார்த்ததாகத் தெரிகின்றது. வேலைக்காரர்கள் பார்க்காதவர்களாகவே பாதி பேருக்குமேல் இருக்கலாம். ஏனெனில் 30 வருஷம் ஒரு மனுஷ்யனைப் பார்க்காமலிருந்தால் பார்த்தவர்களுக்குக்கூட அடை யாளம் கண்டுபிடிப்பது கஷ்டமாகவே இருக்கும். ஆயினும், நாம் செல்லப்போவது நடுநிசி வேளை. அங்கு வேலையைமுடித்துக்கொண்டு மறுநாளே திரும்பவேண்டியதுதானே. ஆகையால் அதற்குத் தந் திரமாக நடந்துகொள்ளலாம். எஜமானனைத்தான் ஏமாற்றிவிடவேண் டும். அதற்கு இதுதான் வழி என்று எண்ணி தமது மடியிலேயே தயாராக வைத்திருந்த கடிதத்தை எடுத்து அதில் தமது ஆட்கள் போலீஸாராக வந்திருப்பவர்களுக்கு முக்கிய சமாசாரமானதை அடி யில் வருமாறு எழுதினாராம். அதாவது: என் வேலை பாதியாகிவிட் டது. நீங்கள் உடனே முன்னால் நான் சொல்லியபடி எல்லாம் செய்துவிட்டு ஒருவன் நம்முடைய காரை போட்டுக்கொண்டு அருகி லுள்ள செங்கல்பட்டுக்குச் சென்று, இதோ துண்டு கடிதத்தில் எழுதியிருக்கும் விலாஸத்திற்கு ஒரு அவஸர தந்தி யடித்துவிட்டு செங்கல்பட்டில் அவர்களுடைய கடிதம் தந்தி முதலிய தைப் பெற்றுகொள்ள இந்த விலாசமுள்ள இடம் தனியாகவிருப்ப தாயும் அதை அடையாளம் பார்த்துக்கொண்டோ அல்லது, இந்த விலாஸத்தின் பெயரை அந்த ஊர் போஸ்ட்டுமானை விசாரித்துக் கொண்டோ அங்கு சென்று, அங்குள்ளவர்களுக்கு நீ சங்கத்திற்கு இப்போதுதான் புதிதாகச் சேர்ந்தவனென்று கூறி அவர்கள் நம் பும்படியாக நடந்துகொண்டு, அவர்களின் மூலமாகவே இருப்பிடத் தைத் தந்திரமாய் அறிந்துகொண்டு நீ அங்கு சென்று, எஜமானன் அங்கு வந்து சேரும் நேரத்தைப் பார்த்துக்கொண்டிருந்து அவன் அங்கு வந்ததும் நீ அவன் கண்ணில் படாமல் நான் சொல்லியதாகப் போலீஸாரிடம் சொல்லி இதோடு கூடவிருக்கும் இந்தக் கடிதத்தையும்

அவர்கள் கையில் கொடுத்து, உடனே அந்த எஜமானனையும் அங்குள்ளவர்களையும் வெளியில் போகவிடாமல் ஜாக்கிரதையாக வாசல், புறக்கடை இருபுறமும் காவலிருக்கச்செய்து ஒருவருக்கும் தெரியாமல் அவர்களைக் கைது செய்துவிடும்படிக்குக் கூறி நீயும் கூடவிருந்து அதைச் சரியாக நடத்திவிடு. அவர்களைப் பிடித்த செய்தி வெளியில் அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்ளுக்கு ஒருநாள் பூராவாகத் தெரியாமலிருக்கும்படியாக இருக்கவேண்டுமென்று போலீஸாருக்கு நான் எழுதியிருப்பதால் அவ்வாறே நீயும் நடந்துகொள்ளவேண்டும். நான் விவரமாக போலீஸாருக்கே தந்தியடிக்கின்றேன். அதுவரையில் ஜாக்கிரதை. எஜமானன் இல்லாத வேளையில் நான் இங்கு ஆகவேண்டிய காரியத்தை முடித்துக்கொள்கிறேன். ஜமீந்தார் தேடிய பெண்மணியையும் இவர்கள்தான் போலீஸார் மாதிரியாக வந்து அரெஸ்டு செய்திருக்கவேண்டும் என்று தோன்றுகின்றது. அந்தப் பெண்மணி வெகு அழகு வாய்ந்தவளாகையால் அவள் எஜமானன் வீட்டிலேயே இருந்தாலுமிருக்கலாம். நான் அதைக் கண்டு பிடித்துவிடுகின்றேன். நீ ஜாக்கிரதை. நேரமாகின்றது. முன்னால் ஒருவன் போங்கள்—என்று ஒரு கடிதத்தை எழுதி அதைச் சுருளாகச் சுருட்டி ஜன்னலின் வழியாகப் போலீஸார் அந்த அறையின் சமீபத்தில் வந்ததும் அங்கு கிழவி வரவில்லை என்பதைத் தெரிந்து வீசி எறிந்தார். உளவறிந்த போலீஸாராகையால் அந்தக் கடிதத்தை உடனே எடுத்துக்கொண்டு கிழவியிடம் வம்பு பேசிவிட்டுக் காவலும் போட்டுவிட்டுப் போய்விட்டார்களாம். பிறகு வீரபத்திரர், கிழவி உப்புமாவு செய்வதற்குச் சென்றிருந்த சமயம், இன்னும் தமக்கு வேண்டிய கடிதம் முதலியவைகளை எல்லாம் எடுத்துக் கட்டித் தமது மடியிலேயே வைத்துக்கொண்டு பிறகு மேலே நடந்த காரியங்களை எல்லாம் செய்தாராம். தான் கிழவியுடன் இருக்கும் கூட்டத்தார் இடத்திற்குச் சென்று நெடுநேரம் கழித்துத் தூங்குவதாக நடித்து, எல்லோரும்நெடுநேரம் விழித்திருந்ததால் நன்றாய் அயர்ந்து தூங்கிவிட்டபடியால் உடனே நாயுடுகாரு எழுந்து கிழவி படுத்திருந்த இடத்திற்குச்சென்று அவளுடைய ஸ்வாஸத்தில் போதை மருந்தைநெடியேற்றி அவளை ஒரு பெரிய பார்சல் செய்யும் ஜாதிக்காய்ப்பெட்டியில் போட்டு தமது ஆளின் தலைமேலேற்றிப் பின்புறமாக வெளிக் கிளப்பிவிட்டார். கடிதத்தில் சுந்தரவல்லி எழுதியிருந்ததுபோல ஒரு மசிக்கூடு, இறகு, காகிதம் முதலியவற்றைத்தாழ்வாரத்து மேஜைமேல் தாமே தயாராகவைத்துவிட்டு அங்குள்ள அறைகளைத் திறந்து முக்கியமான சில கடிதங்கள், தஸ்தாவேஜுகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு தயாராக தமது மடியிலேயே வைத்துக்கொண்டு, மீண்டும் உறங்குபவர்போல வந்து படுத்துக்கொண்டாராம். பிறகு பொழுது விடிந்ததும் தாம் எழுந்து முன் செய்த மாதிரியாக பெரிய அமர்க்களம்செய்து அந்தக் கிழட்டுப் பிணத்

தைக் கொலை செய்ய வேண்டும் என்ற ஆக்ரோஷத்துடன் எஜமானனிருப்பிடத்தை யறியும் பொருட்டாக மோட்டாரில் சென்று எஜமான் வீட்டை அடைந்ததுமே எஜமான் ஊரிலில்லை என்பதைக் கேட்டதும் தாம் முன்னாலே செய்திருந்த காரியம் நடந்தேறியிருப்பதாக அறிந்துகொண்டு கிழவி தம்மை ஏமாற்றிய விவரத்தையும் அவளைத்தேடிக் கொண்டு வந்ததாகவும் எஜமானனைப்பார்த்து வெகுநாளாயிற்றென்றும்கூறி, எங்கே எஜமானன் என்று தந்திரமாகக்கேட்க அங்கிருந்த ஆட்கள் வீரபத்திரனை முன்பின் பார்த்ததில்லை யாகையாலும் பெயரையும், புகழையுமே கேட்டிருப்பதாலேயும் அவர்கள் வீரபத்திரனுடைய பெயரைக் கேட்டதும் ஜன்னலிலிருந்துநான் குதித்துவந்த விவரத்தை அவரிடம் தாம்கண்டுபிடிக்கவேண்டுமென்றும் கூறினார்களாம். அதைக்கேட்ட வீரபத்திரராகிய நாயுடு வெகு ஆத்திரம் பொங்கப் பெற்றவராய், 'ஆ! என்னை தான் ஒரு பெண் ஏமாற்றிவிட்டாள். எஜமானனையுமா ஏய்த்துவிட்டாள்! அவள் யார் எங்கிருந்து கொண்டு வந்தீர்கள்?' என்று கேட்க அவர்களில் ஒருவன் என்னைப் பிடித்துக்கொண்டுவந்த வரலாற்றைச் சொன்னதும் அவர் நான்தான் என்று ஊகித்துக் கொண்டாராம். உடனே அவள் எங்கிருந்து எப்படி விழுந்தாள், என்றுகேட்டு நான் விழுந்த இடங்களை எல்லாம் போய்ப்பார்த்தாராம். அங்கிருந்து நான் விழுந்த பின்புறமும் வந்து பார்த்தாராம். அப்போது நான் தப்பித்துக்கொண்டு நான்கு நாட்களாய் விட்டபடியால் அங்குயாதொரு அடையாளமும் தமக்குத் தெரியவில்லையாம். இருந்தாலும் அவர்களைக் கொண்டே எந்தப்பக்கம் கீரைக்காரியைக் கண்டீர்கள் என்று கேட்டு விசாரித்ததில் அந்த இடத்தைத் தமக்குக் காட்டினார்களாம். பிறகு அங்கிருந்து தேய்ந்திருக்கும் வழி எதுவும் காணாமையால் அந்தக் கால்வாயைத் தாண்டித்தான் சென்றிருக்க வேண்டுமென்றுஎண்ணிக் கால்வாயைக் கடந்து செல்கையில் ஒற்றையடிப் பாதையைக்கண்டு அதன் வழியாகச்சென்றதும் அங்கு கொஞ்சதூரத்தில் சில வீடுகளும் குடிசைகளும் இருக்கக்கண்டு இங்குதான் யார் வீட்டிலாவது அந்த மங்கை தப்பித்திருக்கவேண்டும் அவளைக் காக்கும்பொருட்டு தான் பைத்தியம்போல நடித்திருப்பாளோ என்று யூகித்தவராய் எதற்கும் இந்த வீடுகள் முற்றிலும் தாம் சென்று பார்த்துவிடுவதே நலமென்று எண்ணி முன் குறித்தது போல சின்னிபொம்மை வேஷக்காரியாக ரூபமெடுத்துக்கொண்டு தாம் வீடு வீடாகச்சென்றுபார்க்க அந்தப்பக்கத்தில் மற்ற இன்னும் சில வீதிகளைக் கடந்து வருகையில் தங்களுடைய மோட்டார் அந்த வீதியில் ஓரமாக நின்றிருப்பதைக் கண்டாராம். சரி அவள் இந்த வீதியில் தான் இருக்கவேண்டும். அவளை ஜமீந்தார் கூட பார்த்திருப்பாரோ என்னவோ தெரியவில்லையே. நம்முடைய காரியம் முற்றும் நடந்தேறுகின்ற வரையில் அந்த மடந்தையை ஜமீந்தாரிடம் விடுவது சரியல்ல எவ்விதமாகிலும் செய்தி வெளியில் வந்துவிட்டால்

கூட்டத்தார்கள் உஷாராகி விடுவார்கள். மறுபடியும் அந்த மங்கையை மறைவிடத்திலேயே தான் வைக்கவேண்டும் என்று எண்ணியவராய் கிரைக்காரியின் வீட்டுக்கு வந்ததும் அவரோடு கூட வந்த ஆட்கள் 'இவள்தான் கிரைக்காரி, அன்று பயித்தியம் போல நடித்தவள்' என்று கூறி என்னை வீதிப்புறமிருந்த ஜன்னலால் எட்டிப் பார்த்து உள்ளே நானிருப்பதையும் கூறினார்களாம். பிறகு நாயுடு தாங்கள் என்னைப்பற்றிக் கூறிய அடையாளங்களை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு இருந்தாராம். உள்ளே இருப்பவள் நான்தானு என்பதையறியும் பொருட்டாகத் தந்திரமாக எட்டிப் பார்த்தாராம். பிறகு தாங்கள் கூறிய எல்லா அம்சங்களும் சரியாக இருப்பதைக் கண்டு நான்தான் என்று தீர்மானம் செய்துகொண்டு மேலே நடந்தவற்றைச் செய்துமுடித்து என்னையும் காமாக்ஷியின் மகளையும் யுக்தியாக எடுத்துக்கொண்டு நேராக தமது வீட்டிற்கோ எங்கேயோ சென்று எங்களை தமது பந்தோபஸ்தான இடத்திலேயே வைத்திருக்கிறார். தம்மோடுகூட வந்த ஆளை வெளியில் விடாமல் ஓர் அறையில் போட்டுப் பூட்டிவிட்டார். பிறகு என் மூலமாகவே தாங்கள் அன்னவரைக் கண்ட பின்னர் நடந்த விஷயங்களைக் கேட்டறிந்தார். நான் தாசி என்பதைக் கேட்டுத் தாங்கள் என்னைவிட்டு விலகிவிட்டதாகச் சொல்லியதைக் கேட்டதும் அவருக்குச் சந்தேகம் வந்துவிட்டது. தங்கள் மோட்டார் வெகுநேரம் வரையில் அங்கேயே நின்றிருந்ததைத் தாமறிந்திருந்தாராதலால் தாங்கள் எவ்விதம் வீட்டிற்குப் போனீர்கள் என்று அறியும்பொருட்டுத்தமது ஆட்களைவிட்டுத்தெரிந்து வரும்படிக்குக்கூறிய செய்தியை அறிந்ததில் தாம் இன்றுவரையில் அடியாளையே எண்ணி ஏங்குவதாகவும் அதே வேதனையால் எழுந்திருப்பதில்லை என்பதையும் அறிந்த நாயுடு "அம்மா! உன்னை எண்ணி ஏங்கியே அவர் உயிர்துறந்து விட்டாலும் விடுவார். ஆகையால் நான் சொல்கின்றபடி விவரங்களை எல்லாம் நீ உன் கைப்படவே ஒரு கடிதமெழுதிக் கொடு. அதோடு உன்னை இப்போதே ஒரு புகைப்படமெடுத்து அவருக்கு அனுப்பிவிடுவோம். அவர் அவைகளைக் கண்டு சற்று துயரம் நீங்கி இருக்கட்டும். பிறகு இன்னுமாகவேண்டிய என் வேலைகளைச் செய்துகொண்டு நான் செய்தியை வெளியிடுகின்றேன். நீ தாசியல்ல என்பதை மாத்திரம் நான் இப்போது கூறுவேனேயன்றி வேறென்றும் கூறமாட்டேன். நீயும் அதனை மட்டும் குறிப்பாக எழுதிவிடு என்று கூறி, என்னையும் தாமே படமெடுத்து இந்தக் கடிதத்தோடு அனுப்பும்படியாகக் கொடுத்தார் அதையனுப்பி யிருக்கின்றேன்.

என் ஜீவாதாரமே! நான் சுகமாகவே இருக்கின்றேன். இனிமேல் தங்களுக்குக் கவலைவேண்டாம். என்னிருப்பிடத்தைத் தங்களுக்குத் தெரிவித்தால் தாங்கள் இந்த மெலிந்திருக்கிற காலத்தில் இங்கு

மெல்லவந்து விடுவீர்களோ என்ற பயத்தினால்தான் அவர் இடத்தைக் கூறவேண்டாம் என உத்திரவளித்திருப்பதை சிரமேற்கொண்டு நான் அவ்வாறே செய்திருக்கிறேன். அதைப் பற்றித் தாங்களும் என்மேல் கோபிக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றேன். நாதா! அந்தோ! அன்று தங்களைக் கண்டபோது என்மனம் தவித்த தவிப்பெல்லாம் இரவியைக்கண்ட பனிபோல பறக்கும்படியாகச் செய்த அந்த உத்தமரின் வீரதீர பராக்ரமத்திற்கும், அம்ருத குணத்திற்கும், பரோபகாரமான சிந்தைக்கும் நாமென்ன கைம்மாறு செய்தாலும் தீராது என்றே நினைக்கின்றேன். நாயுடுகாரு, என்னையும் காமாக்ஷி மகனையும் வீரபத்திரராக வந்து அழைத்துச் சென்றபோது எங்களைக் காமாக்ஷி புருஷர் இறந்துவிட்டதாகச் சொல்லிய இடத்திற்கு அழைத்துச் செல்லாமல் வேறு எவ்விடமோ கொண்டுசெல்வதைக் கண்ட என் ஆவி துடித்த துடிப்பைக் கூறவும் போமோ? "ஆஹா! என்னைத் துன்பம்விட்டு அகன்றதென்று எண்ணி வாய் மூடுமுன் மறுபடியும் அகப்பட்டுக் கொண்டோமே" என்று கௌரியும்நானும் எண்ணிக் கண்ணீர்விட்டுக் கலங்கித் தவித்துவிட்டோம். பிறகு எங்களை ஓரிடத்தில் இறக்கித் தனியான அறையில் விடுத்துச் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் நாயுடுகாரு தாம் கூட்டத்தைச் சேர்ந்தவனன்று என்றும் தாம் என்னைக் காக்கும்பொருட்டு அவ்வாறு அவர்களோடு சேர்ந்துகொண்டு செய்கின்ற மாதிரியாக 'உன்னைத் தப்புவிப்பதோடு உன்னை வெளிக் கிளப்பாமலேயே இன்னுமுள்ள பாக்கி வேலையையும் முடிப்பதற்காகவே அழைத்து வந்தேன்.' என்றும் தைரிய மொழியைக் கூறினார். அதையும் என் மனம் சற்றுநேரம் நம்பவில்லை. பிறகுதங்களை அவர் கண்டது முதல் நடந்த வரலாற்றைக் கூறிய பின்னரே அன்று தாங்களும் என்னிடம் சில விஷயம் தெரிவித்திருந்ததையும் அறிந்த பிறகே நம்பினேன். நாதா! ஆஹா! என்னே கூறுவேன் அன்னவர் மகிமையை! நினைக்க நினைக்க எனக்கு ஆச்சர்யம் அடங்கவே இல்லை. இன்னும் ஏதோ முக்கியமான சில விஷயங்களை அதி அற்புதமாகக் கண்டு பிடித்திருக்கின்றாராம். ஆனால் அதனை எனக்குக் கூறவில்லை. தாமே நேரில் உரைப்பதாகக் கூறியுள்ளார்.

"எனதாவிக்கரசே! தங்களுடைய திருமேனி இப்பாவியால் வாட்டமடைந்து வாடி வருந்தி மெலிந்து சக்தியற்றுக் கிடக்கும் இத்தருணம் அடியாள் இத்தகைய பெரிய கடிதத்தைப் புத்தகம்போல வரைந்து விடுத்து இதனைத் தங்களுக்குப் படிக்கும்படியான சிரமத்தை (நமது வாசகர்களுக்கும்) கொடுக்கும் என்னைத் தாங்கள் மன்னிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். தங்களுடைய பரிதாபகரமான நிலைமையில், அன்று தங்களைக் கண்ட எனதுயிர் தத்தளித்து உருகி ஓடிக்கொண்டிருந்தது. எதற்கும் அருகமல்லாத இந்தக் கட்டை எதற்கு என்று வருந்திக்கொண்டிருக்குங்கால், நமது

குலகுருவாகிய நாயுடுகாரு 'நீ வேசி மகளல்ல. நீ குலமாதின் குக்ஷியில் பிறந்த குணவதிதான்' என்று கூறியது எனக்கு அப்போது எவ்விதமிருந்ததென்பதைக் கூறுதற்கே அரிதாயிருக்கின்றது. யமனிடம் சென்ற உயிரை மீட்டுவந்த சாவித்ரிதேவி யடைந்த சந்தோஷத்தையும், மகனை இழந்து மனந்துடித்து இருந்த காலத்தில் அவனை உயிருடன் கண்டதோடு மன்னனையும் அடைந்த சந்திரமதியின் சந்தோஷத்தையும்போல என் மனமானது அந்தச் சொல்லைக் கேட்டதும் என்னை யறியாமலேயே சந்தோஷங்கொண்டது. ஆனந்தக் கண்ணீர் பெருகியது. மெய்மறந்து பூரித்துப் புளகாங்கிதமடைந்தது. நான் அவ்வமயம் தேவலோகத்தில் இருப்பவள்போல அவ்வளவு சந்தோஷமடைந்தேன். அந்தச் சந்தோஷகரமான செய்தியைத் தெரிவித்த நாயுடுகாருவுக்கு என் மனப்பூரிப்புடன், பிரதக்ஷிணம் செய்து அனேக நமஸ்காரமும் செய்து அன்னவரின் ஆசியைப் பூர்ணமாகப் பெற்றேன். அன்னவர் எனக்கு முன்கூறிய விஷயங்களை எல்லாம் முன்னால் தெரிவித்துப் பின்னாலே நான் குலமகள் என்பதைத் தெரிவித்தார். உடனே என் மனம் சந்தோஷம் தாங்காமல் அதை முன்னால் தங்களுக்குத் தெரிவித்துவிட்டு மறுவேலை செய்ய வேண்டுமென்று பட்ட பாட்டை என்னால் வரையசாத்தியமில்லை. அதற்கு நாயுடுகாருவின் உதவி இல்லாமல் எவ்விதம் செய்வதென்றும் நான் சிந்தித்துக்கொண்டிருந்த சமயம் அன்னவர் தங்களைப்பற்றிய முன்னறிவித்த விஷயத்தையும் கூறி, "மாதே! நீ சிறிய நிருபம் ஒன்று வரைந்து கொடு. அன்னவர் கலி அதனைப் பார்த்த பிறகாவது சற்று நீங்கும். உன்னுடைய புகைப் படத்தையும் ஒன்று கூட வைத்தனுப்பு. அந்தலிகிதத்தில் நீ குலமகள் என்று தெரிந்ததாக மாத்திரம் சுருங்க எழுது" என்று கூறினார். என் மனதில் அப்போதுண்டான ஆனந்தத்தில் நானே அவர் கூறிய விருத்தாந்தத்தை எல்லாம் வரைந்துவிட்டேன். நான் அவ்விதம் எழுதியிருப்பதைப் பார்த்துத் தாங்கள் ஆயாசப்படமாட்டீர்களென்று நம்புகின்றேன்.

அன்பரே! தங்கள் திருமேனி இனி வாட்டமடையவேண்டாம். சந்தோஷத்துடன் இருங்கள். நான் தங்களை வந்து காணும் காலத்தில் தாங்கள் பழைய ஜமீந்தாராக விருக்கவேண்டும். அப்படிக் கண்டால் தான் என் மனம் சந்தோஷமடையும். தாங்கள் இனி ஒரு கணமும் அன்னாகாரமின்றி அவதிப்படவேண்டாம்.

பிராணகாந்தா! நான் தங்களை வந்து காணும்நாள் என்று வாய்க்குமோ என்று அந்நாளை நோக்கி எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேன். என் சரித்திரத்தை நான் எத்தனைதரம் கேட்டும் அன்னவர் அதனை மாத்திரம் என்னிடங் கூறவில்லை. தாமே கூறுவதாக ஒரே பிடியாகத் தெரிவித்துவிட்டார். ஆகையால் அதையறியமுடியவில்லை. என்னை

182829

யன்றுமுதல் வளர்த்த பாட்டியின் கதியை நினைக்க எனக்கு வருத்த மாகவே இருக்கின்றது. அந்தோ பரிதாபம்! பரிதாபம்! அவள் கையால் வளர்ந்ததற்காக அவள் நிலைமையைக் கேட்டதும் நான் கண்ணீர்விட்டுவிட்டேன். இந்தக் கொள்ளைக்கூட்டத்தார் பலவேடந் தரித்துப் பலமாதிரியாகக் களவுகள் செய்து வருகின்றார்களாம். இவர்களைப் பிடிக்க போலீஸாராலும் ஆகவில்லையாம். அந்தக் கூட்டத்தின் ஏஜண்டாகிய (வொள்ளுதுரை என வழங்கப்பட்ட) ஒருவன் பரங்கிக்கார உடையோடு தன்னுடன் நான்கு போலீஸ் உடைதரித்த தமது ஆட்களையே அழைத்துக்கொண்டு திருவல்லிக்கேணி டிராம்ரோட்டின் வழியாகச் சென்ற சமயம் நான் என் கற்பைக் காப்பாற்றிக்கொள்ளும்படி, எனக்குச் செய்யவிருந்த தீமையையே என் பாட்டிக்கே செய்து அனுப்பியதை வீணைப்பெட்டியோடு கிழவியை சாரங்கபாணி முதலியார் 'தேனும்பேட்டைக் கிழவனின் வண்டியில் கொண்டுபோய்க் கொண்டிருக்கையில், அந்தக் கூட்டத்தின் ஏஜண்டு அதை உற்றுநோக்கி அவன் பெட்டியை மூடுவதும் திறப்பதுமாயிருப்பதைக்கண்டு இதில் ஏதோ விசேஷ மிருக்கவேண்டுமென்று யூகித்துக்கொண்டு அவர்களைப்பின்தொடர்ந்துவந்து பிடிக்க யத்தனிக்கையில் வண்டி அகஸ்மாத்தாக ஒரு பள்ளத்தில் விழுந்துவிட்டதால் அவர்கள் உடனே வந்து வண்டியை வளைத்துக்கொண்டு துபாஷ் முதலியாரை நன்றாக ஜோட்டினால் ஜோடித்து உண்மையைக் கூறச்செய்து தாம் உண்மையான போலீஸார் மாதிரியே நடித்து அவனையும், வண்டியில் அலங்கோலமாகப் பெட்டியோடு பள்ளத்தில் உருண்டுகிடந்த எனது பாட்டி, சிச்சீ என்னை வளர்த்தக் கிழவியையும், வண்டியையும் சரிப்படுத்தி அதில் பெட்டியோடு அந்தக் கிழவியைக் கிழவன் பங்களாவிற்கு அனுப்பிவிட்டு, சாரங்கபாணிக்கு விலங்கிட்டு அழைத்துச் சென்று ஓரிடத்தில் அவனை வைத்துப் பூட்டிவிட்டு மீண்டும் தாம் சற்று நேரத்திற் கெல்லாம், போலீஸாருடன் ஒரு வேற்று மனிதன்போல தம்முடைய ஆட்களையே அழைத்துக்கொண்டு பக்குவமாக கேஸை ஜோடித்துக் கொண்டு கிழவியும் கிழவரும் உள்ளே இருந்த சந்தர்ப்பம் இவர்கள் சென்று 'ஏய்! இந்த வீடுதானா' என்று அந்த ஏஜண்டு கேட்டானாம். உடனே வேற்றுமனிதனாக வந்த வேலைக்காரன் கூறியதாவது "அந்தக் கிழவர் என்மேல் ஆசைப்பட்டதாகவும் கிழவி அதற்கு இஷ்டப்படாததால் கிழவியைக்கொன்றுவிட்டால் பிறகு தடங்கலின்றி என்னைத் தாமடையலாம் என்றும் யோசித்து, இரவு எட்டு மணிக்குமேல் நான் தூங்கியபிறகுவந்து கிழவியை வீணைப்பெட்டியில் போட்டு வீணைமாதிரியாகத் தூக்கிக்கொண்டு போய்விட்டதாகவும் அதனை அந்த வேற்றுமனிதன் அப்போதே போலீஸாருடன் தெரிவிக்க விரும்பியதாகவும் அதற்குள் வண்டி போகும் இடத்தைக் கண்டுகொண்டு பிறகு தெரிவிப்பதாகத் தாம் எண்ணி அந்த வண்டியை துரத்திவந்த மாதிரியாகவும் அந்தக் கிழவிக்கு வண்டி பள்ளத்தில்

விழுந்துவிட்டதனல் காயங்கள்பட்டு ரத்தம்வருவதை சாக்ஷியாகவைத்துக்கொண்டு அக் கிழவன் அவளைக் கொன்றுவிட்டதாகக் கூறி தான் கிழவி வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரன் என்றும் கிழவியிடம் இந்த ஜமீந்தார் ஆளையனுப்பிப் பேசியதைத்தான் கேட்டமாதிரியாகவும் சாக்ஷி கூறினனும். பிறகு போலீஸாராக வந்த கொள்ளைக்கூட்டத்தார் அந்தக் கிழவரை விலங்கிட்டு, வீணைப் பெட்டியோடு கிழவியையும் தூக்கிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனாகத் தாங்கள் கட்டியிருக்கும் கட்டிடத்திற்குள் கொண்டுபோய் சாரங்கபாணிக்குத் தெரியாமல் அவர்களை வைத்துவிட்டுப் பிறகு சாரங்கபாணியிடம் வந்து நானே கிழவியைக் கொல்ல எத்தனித்துக் கொன்று வீணைப் பெட்டிக்குள் மோசமாகப் போட்டுக் கிழவருக்கு அனுப்பியதாகக் கேஸை ஜோடித்து அதற்கு சாரங்கபாணி வீணையை என்னிடமிருந்து விலைக்கு வாங்கியதாகக் சாக்ஷி கூறும் படிக்குச் சொல்லியவனை அழைத்துவந்து, தங்களை வீதியிலிருந்து உள்ளே நடைத் திண்ணையில் கொண்டுவிட்டதனல், தங்கள் காலிலிருந்து வழிந்து என் சேலையில் ரத்தம் பட்டிருந்ததை சாக்ஷியாக வைத்துக்கொண்டு என்னையும் அரெஸ்டு செய்துவிட்டார்கள். என் விஷயமாகப் பிறகு நடந்த செய்தியை எல்லாம் நான் முன்னரே கூறியுள்ளேனுகையால் அதைவிட்டுக் கிழவியின் கதியைப்பற்றி வரைகின்றேன். கிழவரிடமிருந்து தாம் எவ்வளவு பொருள் அபகரிக்க முடியுமோ அவ்வளவையும் பிடுங்கிக்கொண்டு கிழவரை விட்டுவிட எண்ணி அவர் அப்போது அணிந்திருந்த நகைகளை எல்லாம் எடுத்துக்கொண்டு இன்னும் சுமார் ஒரு லக்ஷ ருபாய்க்குக் கிழவரிடமிருந்து அபகரித்துக்கொண்டு அவரை எவருக்கும் தெரியாதபடி விட்டு விட்டார்களாம். கிழவிக்கு அன்றிரவே தக்க ஔஷதங்கள் கொடுத்து அவளை நன்ருய்த் தெளியவைத்தார்களாம். என்னை அன்றிரவே எஜமான் வீட்டிற்குக் கொண்டு விட்டு விட்டார்கள். கிழவியை நன்ருய் தெளியச்செய்த பின்னர் அவள் மூலமாக ஒரு காரியம் ஆக எண்ணி அவளைப் பயமுறுத்தி, "ஓ! நீ உன்னுடைய பேத்தியை வீணைப்பெட்டியில் போட்டு அன்னியனுக்கு அவளுடைய சம்மதமின்றி விற்றுவிட எண்ணியதை நாங்கள் கண்டுபிடித்துவிட்டோம். உன்னை தண்டனைக்கு ஆளாக்கி விடுவார்களாகையால் ஐயோ பாவமென்று உன்னை நாங்கள் மெல்லத் தப்பவித்துவிடுகின்றேம். அதற்கு நாங்கள் சொல்கின்றபடி நீ கேட்டால் உன்னை விட்டுவிடவேண்டிய ஏற்பாட்டைச் செய்து மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் மறைத்துவிடுகின்றேம். அவ்விதமே நீ செய்யவேண்டும். இல்லையேல் அந்தியகாலத்தில் உன்னைத் தண்டித்து விலங்கிட்டுவிடுவார்கள்" என்று பயமுறுத்தியதற்குக் கிழவி பயந்து தாம் அவர்கள் இஷ்டப்படியே செய்வதாக ஒத்துக்கொண்டாள். அவள் தேகத்தில் பட்டகாயத்தின் வலி அப்போதும் அவளை வருத்திக்கொண்டே இருந்ததாம். அன்று

இரவே என்னை எஜமான் வீட்டில் கொண்டுவிட்டதும் அங்கு எவனோ ஒரு அன்னியன்போல என்னைத் தாம் தப்பவைப்ப தாகவும் தன்னை மணக்கும்படிக்கும் கூறியதாகத் தெரிவித்தே னல்லவா? அவன் தான் எஜமானனும். அவனிடமிருந்து தான் தப்பித் துக் கொள்ளும்பொருட்டுக் கதவின் கம்பியைப் பிடித்துக்கொண்டு கதவின் மேலேறி அங்கிருந்த ஜன்னலில் ஏறுவதற்கு அனுகூலமாகக் கதவும் கம்பிக்கதவாக நடுவில் படிப் படியாக இருந்தமையால் அதன் வழியே ஏறி ஜன்னலும் வெகு அருகிலிருந்தபடியாலும் என் மனத் தில் அப்போதிருந்த ஆக்ரோஷத்தினாலும் ஏறிவிட்டேன். பிறகு குதித்தும்விட்டேன். என்னைச் சிலபேர் தேடிக்கொண்டே இருந் தார்களாம். அன்று மறுநாள் இரவு சுமார் ஏழுமணிக்கு அந்தக் கொள் ளைக்கூட்டத்திலிருக்கும் ஒரு வாலிபன் சுமார் 16 17 வயதிருக்கக் கூடிய ஒருவனுக்கு அவனது இயற்கை யழகோடு செயற்கையழகும் கூடச் சேரும்படி சிங்கார வேஷம் தரித்து ஏஜண்டே ஒரு பெரிய மனிதனைப்போல உடையணிந்துகொண்டு ஒரு பெட்டி வண்டியில் ஏறிக்கொண்டு என்னைத் துராக்ருதம் செய்ய எண்ணிய மார்வாடியி னுடைய பெரிய கடைக்கு வந்தார்களாம். அவர்கள் அங்கு வருவ தற்குக் காரணம் யாதெனில் அந்த மார்வாடியின் வீட்டில் வேலைக் காரனாயிருக்கும் மனிதன் இந்தக் கொள்ளைக்கூட்டத்தில் சேர்ந்தவ னாம். அந்தக் கூட்டத்தாரே தங்கள் மனிதர்களில் சிலபேர்களைப் பெரிய கடைகளிலும் உண்மையான போலீஸ்டேஷன்களிலும் தபாலா பீஸ்களிலும் இன்னுமிதுபோன்ற முக்கியமான இடங்களிலும் வைத் திருப்பது வழக்கமாக விருந்ததாம். அதேபோல மார்வாடியின் கடையிலும் ஒரு ஆள் வேலையாக விருந்தானாம். அவன் முதல்நாள் இரவில் நான் அங்குவந்துபோனதையும் அவன் என்மேல் இச்சை கொண்டதையும் தூரவிருந்து கவனித்துக்கொண்டே இருந்தபடியால் உள்மர்மங்களை எல்லாம் உடனே, பெண்வேஷந்தரித்தவனுக்குக்கூறி மார்வாடியை அவமானப்படுத்தியே பணத்தைப் பறித்துக்கொண்டு விட்டுவிடவேண்டுமென்று எண்ணியதால், அவர்கள் அவனிடத்தில் சென்று மார்வாடி சிறுமியர்கள் முகத்தை மூடியே இருப் பதுபோல அவன் முகத்தை மூடியே வைத்திருந்தானாம். அவன் முற் றிலும் என்னைப்போலவே நடித்து என்மேலேயே தமது உணர்வைச் செலுத்தி இருந்த மார்வாடி கண்ணுக்கு 'காமத்திற்குக் கண்ணில்லை' என்பதுபோல அவன் பார்த்ததெல்லாம் நானாகவே தோன்றுவதாக எண்ணிக்கொண்டிருந்தவனுக்கு அவன் அந்த வேஷதாரியைக்கண்ட தும் அவன் மனதில் சதா குடியிருந்த நான்தான் என்று எண்ணிக் கொண்டே அந்த வேஷதாரி அவனை வணங்கி மண்டி யிட்டு, முதல்நாள் நடந்தனவெல்லாம் கூறி மன்னிப்புக்கேட்டு என் னைப்போலவே பேசியதிலிருந்தும் அவன் முகத்தை முற்றும் மூடி யிருந்தாலும், அவனை உண்மையில் பேச்சிலிருந்தோ நான் என்று

நம்பி மயங்கிப்போய், 2-லக்ஷரூபாய் மதிப்புள்ள நகைகள் போட்டதைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டார்களாம். அதுவும் போதாதென்று என் வீட்டிற்கும் அவனை வரச்சொல்லிவிட்டுச் சென்றதை நம்பிய மார்வாடி சர்வாபரண பூஷணத்தையும் அணிந்து என் வீட்டிற்குப் போனானும். அங்கு நடைத்திண்ணையில் என் பாட்டியை அக்கம்பக்கத்திற்குத் தெரியாமல் கொண்டுவிட்டு, மெத்தையில் தன் பேத்தி இருப்பதாகவும், இன்னும் சில உபசார வார்த்தைகள் கூறும்படியும் வற்புறுத்த அவளும் அப்போலி போலீஸாருக்குப் பயந்து, அந்த மார்வாடியிடத்தில் அவர்கள் சொன்னபடி கூறி முன்னால் வந்த வேஷதாரி நான் தான் என்பது ருஜுப்படுத்தும்படிக்குச் செய்துவிட்டாளாம். அந்தோ! நாதா! காமத்தின் கொடுமையை என்னவென்று சொல்லுவேன்! ஒரு மனிதன் காமம் என்னும் பேய்க்கு அடிமையாகிவிட்டால் அவன் எதை மனதில் எண்ணி யிருக்கின்றானோ அதே அவன் கண்ணிற்கு நன்றாய்ச்சந்தேகமே இல்லாமல் உண்மை போலவே தோன்றி விடுகின்றது. காமம் என்னும் கொடிய பிணி அவனைப் பித்தனாக்கி சில சமயம் ஏமாற்றமும் அடையும் படியாகச் செய்து விடுகின்றது. அந்த மார்வாடிப் பயல் என்னையே மனதில் எண்ணி காமப்பித்துப் பிடித்திருந்தவனுக்கு என்னைப் போலவே அவர்கள் வந்து ஏமாற்றியதைக் கேட்க எனக்கு முற்றிலும் சந்தோஷமாகவே இருந்தது. பிறகு அவன் என் வீட்டிற்குப்போய் மெத்தையில் இவர்கள் ஒரு பஞ்சு பொம்மை செய்து வைத்திருந்ததை நானென்று எண்ணி அருகில் சென்று ஆலிங்கனம் செய்து கொள்கையில் கீழே விழுந்த பிறகே உண்மையையறிந்தானும். அதோடு அவனை விடாமல் நடுநிசியில் அவனிடமிருந்த ஆபரணங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அவனையும் அவ்விடத்தை விட்டுத் தூக்கிக் கொண்டு போய் இன்னும் பொருள் பறிக்கும் நோக்கத்தோடு தமது ரகஸிய இடத்தில் வைத்து விட்டார்களாம். அவர்களிஷ்டப்படி நடந்த கிழவியை அவர்கள் அதிகமாக உபத்திரவிக்காமல் வைத்திருந்தார்களாம். இந்த உளவுகளையெல்லாம் நமது நாயுடு வீரபத்திரனாகவே இருந்து கீரைக்காரி வீட்டிலிருந்து என்னைக் கொண்டு வருவதற்காக வீதியிலேயே காவலிருந்த போது தம்மோடு கூடவிருந்த இரண்டு பேர்களிடத்தும் பேச்சுப் பராக்கிலேயே கேட்டுத் தெரிந்து கொண்டாராம். அவர்களும் நமது நாயுடுவை வீரபத்திரனென்றே எண்ணி முற்றிலும் உண்மையைக் கூறிவிட்டார்களாம். இவர்கள் வீரபத்திரனென்றவனை 30 வருஷ காலமாகப் பார்க்கவில்லை யாகையால் எல்லோரும் இவரே வீரபத்திரரென்பதை நம்பிவிட்டார்கள். இந்த வீரபத்திரனை அடிக்கடிப் பார்த்திருப்பவர்கள் எஜமானனும், வாழை இலைக்கட்டைக் கொண்டு சென்றவனும் இன்னும் சில உள் மர்மங்களை அறிந்தவர்களே தான். இதையும் அவர்களைக் கொண்டே தெரிந்து

கொண்டாராம். எஜமானன் எப்படியும் அந்த வீரபத்திரனைப் பார்த்திருப்பான்; அவன் பாராமலிருக்க முடியாது என்ற யோசனையினாலேயே முதலில் ஜாக்கிரதையாகத் தந்தியடித்து எஜமானனை வெளிக் கிளப்பிவிட்டாராம். இராவணனிடமிருந்த கடிதத்திலிருந்து வீரபத்திரன் இந்தப்பக்கம் வந்து 30 வருஷங்களாய் விட்டதென்பதை யறிந்துகொண்டாராம். 30 வருஷம் ஒரு ஆளை ஒருவர் பார்க்காமலிருந்தால் அவனுடைய சாயல் எப்படி எல்லோருக்கும் நினைவிருக்கும்? அதற்கேற்றபடி தாம் நடந்துகொள்ளலாம் என்ற தைரியத்தினாலும் மேலும் அந்த வீரபத்திரன் எழுதிய கடிதத்தில் தான் அங்கு வந்தால் தனக்கும் அங்குள்ளவர்களுக்கும் பழக்கமே இல்லாமையால் அவர்களுக்கு தன்னைத் தெரியக்கூடத் தெரியாது என்று இருந்தபடியாலும் அவர் உடனே அந்த வீரபத்திர வேஷத்தோடு அங்கு வருவதற்குத் துணிந்தனராம். கிழவிக்கு வீரபத்திரனைத் தெரிந்திருந்து தம்மீது சந்தேகம் கொள்பவள் போலத் தோன்றினால் அவளை எவ்விதமாயினும் ஏமாற்றித் தாம் அந்த வீட்டிலிருக்கும் எஜமானன் விடுதியைச் சோதனைபோட்டு அதன் மூலமாக மற்ற விவரத்தைக் கண்டுபிடித்து விடலாம்; அவள் தெரிந்து கொள்ளாமலிருந்தால் அவளை வைத்துக்கொண்டே வேலையை நடத்திவிடலாம் என்று எண்ணியவராய் வீரபத்திரன் வேஷத்தில் கிழவி வீட்டிற்கு வந்தாராம். கிழவியும் வீரபத்திரனைப் பார்த்ததில்லை என்பதைத் தெரிந்ததும் அவர் அளவற்ற மகிழ்ச்சியோடு இவ்விதம் காரியங்களை எல்லாம் கண்டு பிடித்தாராம். அந்த நாடகக் கொட்டகையில் இருந்த பெண்ணும், கீரைக்காரிக் காமாக்ஷியின் பெண்ணும், நானும் ஒரே இடத்தில்தான் இருக்கிறோம். எந்த இடத்திலிருக்கிறோம் என்பது எனக்குத் தெரியாது; அந்த விவரத்தை அவர் என்னிடம் கூற மறுத்துவிட்டார். என்னை கீரைக்காரி வீட்டிலிருந்து அழைத்துக்கொண்டு வந்து இன்று சரியாகநான்கு நாளாகிறது. என்னை இங்கு கொண்டு வந்ததற்கு முன்பே நாயுடுகாரு கமிஷனரைக் கண்டு தாம் வாழை இலைக் கட்டை எடுத்துச் சென்றவனைப் பிடித்திருப்பதாயும் அவன் மூலமாக இன்னும் சில விஷயங்களைக் கண்டு பிடிக்க வேண்டும்; அதற்கு அவனை ரகஸியமாகவே போலீஸில் வைத்திருக்கத் தாங்கள் உதவி புரிய வேண்டும். பிறகு தாம் எல்லாவற்றையும் கண்டு பிடித்துக் கூடிய சீக்கிரத்தில் தங்களிடம் தெரிவிக்கின்றேன் என்று சொன்னாராம். அதற்கு கமிஷனர் ஒத்துக் கொண்டாராம். பிறகு தாம் எல்லாவற்றையும் கண்டு பிடித்த பின்னர் கமிஷனரைக் கண்டு தாம் கண்டு பிடித்த விஷயங்களை எல்லாம் ஆதியோடந்தமாகக் கூறி அந்தக் கூட்டத்தாரிருக்கும் இடங்களைத் தாமே காட்டுவதாகவும் அவர்களைக் கைது செய்து விடலாம் என்றும் கூறினாராம். இந்த வாலாற்

றைக் கேட்ட கமிஷனர் வெகு ஆச்சரியப்பட்டு நாயுடுகாரு பிழைத்து வந்ததைப் பற்றிப் பெரிதும் மகிழ்ந்து அனேக உபசார வார்த்தைகளைக் கூறினாராம். தாங்கள் என்னைத் தேடிச் சென்றது, பிறகு மார்வாடி காணுமற்போனது, கீரைக்கார காமாக்ஷி நாயுடுகாரு செய்ததை யறியாமல் போலீஸாரே அவ்விதம் செய்துவிட்டதாக எண்ணி அவ்விடம் வந்து குற்றம் சாட்டியது, நாடகக் கொட்டகையில் திருட்டுபோனது முதலிய எவற்றிலும் சிறிது கூட தகவல் கிடைக்காமல் போலீஸார் குழம்பிக் கொண்டிருந்த சமயத்தில் அத்தனை கேஸ்களையும் ஒருவரே கண்டு பிடித்துவிட்டதைக் கேட்டுக் கமிஷனர் சந்தோஷம் தாங்கமாட்டாமல் உடனே மேலதிகாரிகளுக்குச் செய்தி யனுப்பி தான் அனேக போலீஸாருடன் நாயுடு காட்டிய இடத்திற்குச் சென்று எல்லோரையும் கைது செய்து கொண்டு வந்து விட்டாராம். இன்னும் அந்தக் கொள்ளைக் கூட்டத்தார்கள் எங்கெங்கே இடம் வைத்திருந்தார்களோ அவ்வவ்விடத்திலுள்ள போலீஸுக்குத் தந்தியடித்தும் ஆள்கள் சென்றும் எல்லோரையும் பிடித்து விட்டார்களாம். அந்தக் கூட்டத்தாருடன் என்னை வளர்த்தபாட்டியுமிருக்கின்றாளாம். கேஸ் விசாரணை எப்போது நடக்குமோ தெரியவில்லை. உண்மையான வீரபத்திரனையும் ரங்கூனில் பிடித்து விட்டார்களாம். எஜமானன் தந்தியைக் கண்டு ஊருக்குச் சென்றதும் அங்கு யாரும் தந்தியடிக்கவில்லை என்றும் அவ்விதம் வந்த தந்தி ஏதோ மோசம் என்பதையும் உணர்ந்துகொண்டு அவன் திரும்புவதற்குள் நாயுடுகாரு ஆளை முன்னுலேயே அனுப்பி யிருந்து அங்கு அவர்களைப் போலீஸுக்குத் தெரிவித்து கைது செய்துவிடும்படி கூறியிருந்த பிரகாரம் அவர்களை எதிர்பாராவிதம் கைது செய்துவிட்டார்களாம். அந்தக் கொள்ளைக் கூட்டத்தார்கள் சேர்த்திருந்த பொருள்களை எல்லாம் தகுமான பந்தோபஸ்தோடு போலீஸிலேயே வைத்திருக்கின்றார்கள். இத்தகைய செய்தி இன்றைய பேப்பரிலேயே வெளியாகிவிடும் என்று கூறினர். அதனுல் தான் நானதை எழுதிவிட்டேன்.

என் மனதிற்கிசைந்த மன்னு! தங்களுக்கு ஒரு சந்தோஷச் செய்தியைத் தாம் கண்டு பிடித்துவிட்டாராம். அதைத்தாமே தங்களுக்குத் தெரிவிப்பதாகக் கூறியுள்ளார். அதை என்னிடம் கூறவில்லை. அன்னவருடைய உபகாரத்திற்கு நாம் முதலில் தக்க மரியாதை செய்யவேண்டுமென்பதை நான் கூற வேண்டுவதில்லை. அது தங்களுக்கே தெரிந்த விஷயம். நாதா! ஏதோ எனக்குத் தெரிந்தவரையில் தங்களுக்குரைத்துக் களிப்பிக்கும் பொருட்டு இதைப்பெரிய புஸ்தகம் போல வரைந்துவிட்டேன். மேலும் இச்செய்தி எல்லாம் தமக்கும் தெரியவேண்டுவது முக்கியமாக எனக்குத் தோன்றியபடியால் இதை எழுதிவிட்டேன். நாயுடுகாருவிற்கு இன்னும் கொஞ்சம் வேலையிருக்கின்றதாம். அதையும் பூர்த்திசெய்து கொண்டு

தம்மை வந்து நேரில்கண்டு முக்கியமான விஷயங்களைக் கூறுவதாகத் தெரிவித்திருக்கிறார். ஆகையால் காதலா! இதை நான் இவ்வளவோடு நிறுத்தி வந்தனம்செய்து கொள்கிறேன். தாங்கள் திருமேனியை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்; கவலைவேண்டாம். களிப்புடனிருங்கள். மற்றபடி எல்லா விவரங்களையும் கூடிய சீக்கிரம் நேரில் பேசிக்கொள்வோம். பாதாரவிந்தத்துக்கு திக்கு நோக்கி அனேக வந்தனம் செய்து கொள்கிறேன்.

இப்படிக்கு,

கனவிலும் நினைவிலும் கணமும்

மறவாமல்பூஜைசெய்யும் தங்களடிமையான

வைதேகி

என்ற கடிதத்தைப் படித்ததும் ராமாம்ருதத்தின் மனதில் உண்டான ஆநந்தம் அளவே இல்லாமல கரைபுரண்டு வழிந்து கண் வழியாக ஓடத் தலைப்பட்டது. சற்றுமுன் தான்பட்ட கஷ்டங்களுக்கு உடனே அவுடதங் கொடுத்தாற்போல இந்தக் கடிதமாகியகமலத்தைக் கண்டதும் கவலையகன்று களிப்பு மேற்கொண்டு ஆனந்தக் கண்ணீர் அருவிபோல ஓட அவர் இவ்வளவென்று விவரித்துச் சொல்ல சாத்யமில்லாமல் வாய்விட்டும் கூறத் தலைப்பட்டு, "ஆஹா! நாயுடுகாருவின் சாமர்த்தியந்தான் என்ன! அடடா! தர்மதுரைக்கு இத்தகைய ஆபத்து வந்துவிட்டதே' என்றும் அன்னவரை மறுமுறை காணும் பாக்கியம் வருமோ என்றும் ஏங்கிக் கொண்டிருந்த எனக்கு அன்னவர் ஒருவித ஆபத்துமின்றி சுகமாக இருப்பதுடன் இவ்வளவு அருமையான காரியங்களையெல்லாம் செய்துமிருக்கிறார் என்பதைப் படிக்க எனமனம் மகிழ்ச்சியடைவதோடு அவரை எந்தநேரம்கண்டு வந்தனம்செய்வோமென்று ஏங்குகின்றதே" என்றுமெல்ல எழுந்திருந்தார். காலையில் அவர் இருந்த பலஹீனமெல்லாம் இந்தக் கடிததகதைக் கண்டதும் காற்ருய்ப் பறந்துவிட்டது. அவர் தமது பத்தினி யனுப்பிய கடிதத்தைப்பத்திரமாகப் பத்திரம்போலவைத்துவிட்டுத் தமது மனத்தைக் கொள்ளை கொண்ட கோமளாங்கியின் புகைப்படத்தைமீண்டும் சற்றுநேரம் பார்த்தவண்ணம் "ஏ! மாதர்தந்திலகமே! உன்னை மறுமுறை இச்சென்மத்தில் காணும்படியான பாக்கியம் பெறப்போவதில்லை என்று எண்ணி மனமுடைந்து உன்னைவிட்டு நான் பிரிந்தபோது எனது மனம்பட்டபாட்டை என்னல் இப்போது கூறவே முடியவில்லை! அதே மனம் இப்போது இந்தக் கடிதத்தையும் படத்தையும் கண்டதனல் அடைந்த ஆநந்தத்திற்கும் ஓர் எல்லையே சொல்ல முடியவில்லை. என்

கண்மணீ! உன்னுடைய புத்தி நுட்பத்தை நான் எவ்வாறு புகழ்வது என்றே தெரியவில்லை. என் மனக்கவலையை யறிந்து அதனை மாற்றிட மருந்தளித்த உனக்குநான் எவ்வழியில் உபசாரமொழி கூறுவதென பதையறியாது மரம்போல நிற்கின்றேன். எனது ஆவியையே உனக்குத் தத்தம்செய்துவிட்டேனே! அதுதான் என்னால் தருமானது. அதை உனக்களித்தபின்னர் நான் வேறு எதையும் தருவதற்கு இயலவில்லை. மேலும் உனக்கு எதைக்கொடுக்க எண்ணினாலும் அவைகளெல்லாம உனக்கு ஈடாகாது என்று தோன்றுகின்றது. ஹா! என் மாமயிலே! உன் மாமதி முகத்தை நேரில்காண எத்தனைநாட்களிருக்கின்றனவோ தெரியவில்லையே! அந்நாள் வரும் வேளையை நோக்கி நிற்கின்றேன்.'' என்று பலவாறாய் எண்ணமிட்டவண்ணம் படத்தை மாறிமாறி பார்த்துக்கொண்டிருந்த சமயம் அந்த அறையின் கதவை யாரோ தட்டுவது போலக் கேட்டது. உடனே ஜமீந்தார் கடிதத்தையும் படத்தையும் தமது தலையணையின்கீழ் வைத்துவிட்டு எழுந்து கதவைத் திறந்ததும் தன்னெதிரில் தனது அன்னையார் வாடிய முகத்தோடு வந்து நின்றதைக் கண்டதும் இவருக்குத் தன்தாயார் தன் பொருட்டாகத் தானே வருந்துகின்றாள்; தாம் களியுற்ற பிறகு தமது தாயின் கவலையை மாற்றாமலிருப்பது தனக்கு கொடுமையாகத் தோன்றியதாகையால் தான் அந்தச் செய்தியைத் தமது அன்னையாருக்குக் கூற எண்ணிச் சறேலென்று தமது தாயாருக்கு சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு மகிழ்வேமயமாக எழுந்து நின்றார்.

இதைக்கண்ட பார்வதியம்மாளுக்குத் தன் மகன் சோகாக்ராந்தனாய் படுத்திருந்ததற்கு மாறாக மலர்ந்த முகத்தோடு தாம் எதிர்பாராவிதமாய்த் தமக்கு வந்தனம் செய்து நின்றதைக்கண்டதும் தமது மகன் இதற்குள்ளாக இவ்வளவு தெளிவை யடைவதற்குக்காரணம் யாதோ தெரியவில்லையே! ஒருக்கால் அவனுக்கு சித்தம் கலங்கிவிட்டதோ அதனால் இவ்விதம் செய்கின்றானோ! ஒன்றும் தெரியவில்லையே! என்ன செய்வேன்! அவன் மனதில்கொண்ட கலக்கத்தை எவ்விதம் மாற்றுவேன்! ஈசா! நான் பலவிதத்திலும் உன் கீழ் தாழ்மைப்பட்டு நொந்தவள் என்பதை யறியாமல் என்னை இவ்விதமும் சோதனை செய்யவேண்டுமா! ஹா! என்குலம் விருத்தியாகாவண்ணம்தான் செய்துவிட்டாய். என் உயிரிருக்குமளவும் இந்த ஒருவனாகிலும் உயிரோடு நன்றாயிருக்கும்படியாகவாவது செய்யலாகாதா! நான் தான் எவ்வளவோ பாவத்தைச் செய்து பூமியில் பிறந்து இரு குழந்தைகளை யடைந்தும் அவர்கள் சந்தோஷமாய் இருந்து பார்க்கக்கொடுத்து வைக்காத மஹா பாவியாகி என் கண்ணெதிரிலேயே பெண்மணியான கமலம் தனது நாதன் இறந்தது தெரியாமல், இறந்த சவத்தைக் கூட கண்ணால் பார்க்காமல் பறிகொடுத்துவிட்டுத் தவிப்பதை பார்த்துக்

கொண்டிருக்கிறேனே! இதைவிடப்பாதகம் இன்னும் வேறு உண்டோ! அந்தோ! இவைகளை எல்லாம் இந்த மகன் மூலமாகவாவது சற்று ஆறு தலடையலாம் என்று எண்ணியதற்கு முதலிலேயே மண்ணைப் போட்டுவிட்டாய். எல்லாம் தான் தீர்ந்துவிட்டதே! அவனுக்கு ஒரு தாசிப் பெண்ணைக் காட்டி அதனால் கலக்கம் ஏற்படும்படியாகவும் செய்யவேண்டுமா! ஐயோ! மகனே! உனக்கு மூளை அந்தக் கலக்கத்தினாலேயே கலங்கிவிட்டதா? இவ்விதம் நீ என்னை நமஸ்காரம் செய்து கைகட்டிச் சிரித்தவண்ணம் நிற்கின்றாயே! ஏ அம்ருதவல்லி! இந்தப் பரிதாபகரமான விஷயங்களையெல்லாம் பார்த்தும், கேட்டும் அனுபவிப்பதற்காகத் தான் என்னைச் சதமாக வைத்துவிட்டு உன் பெற்றோர் மனமெரிய நீ மாண்டாயோ! ஐயோ! எனக்கும் உன்னிடம் வரும்படியான வழி தெரியவில்லையே! நீயாவது அவன் பக்கம் என்குல தேவதையாக விருந்து இந்தக் கலியைத் தீர்த்து இன்புறச் செய்யலாகாதா? என்னால் இந்த கஷ்டத்தைக் கண்டு சகிக்கமுடியவில்லையே! என் வயிறு பற்றுகின்றதே! என்செய்வேன்!" என்று பலவாறாக எண்ணமிட்ட வண்ணம் கண்ணீர் பெருகதனதுமகனை இறுகத் தழுவிக் கட்டியணைத்துக்கொண்டு "அப்பா தம்பி! ராமாம்ருதம்! நீ காலை முதல் ஆகாரமே கொள்ளவில்லையே! கொஞ்சமாவது சாப்பிடாவிட்டால் உனக்கு சக்தியிருக்குமா? அப்பா! என் கண்ணே! ஒருவாய் சாதம் சாப்பிட்டுவிடு. அதற்குமேல் உன்னை நான் பலவந்தப்படுத்தவில்லை." என்று அன்பொழுகக் கேட்டதைக் கண்ட ராமாம்ருதம் தன் தாயின் நிலைமையைக் கண்டு சகியாமல் தான் இன்னும் இச்செய்தியைக் கூறாவிடில் அவ்வம்மை உயிர் துறநதாலும் துறந்துவிடுவார்கள் என்று எண்ணி, தனது தாயின் ஆலிங்கனத்திலிருந்து தன்னை மெல்லவிடுவித்துக்கொண்டு அன்பாகத் தனது அன்னையை நோக்கி "அம்மா! தாங்கள் என் பொருட்டாக வருந்துவதைக் காண என்னாலியலவில்லை. ஈசன் நம்மிடத்தில் அடியோடு பராமரித்துவிட்டதாக எண்ணி இருந்தேன். இன்று காலை தாங்கள் வெளியில் சென்றதும் நம்மை ஈசன் கண்திறந்து பார்க்க ஆரம்பித்திருக்கிறார் என்றதற்கு அறிகுறியாக இதோ இந்த நற்செய்தியை முன்னால் காட்டி விடுத்திருக்கிறார். தாங்கள் இனி கவலைப் படவேண்டாம். நமது கவலையை நீக்கிவிட்டார். இதைத் தாங்களே பிரித்துப் பாருங்கள் என்று தமது தலையணையின்கீழ் இருந்த கவரை அப்படியே தமது தாயிடம் கொடுத்தார். அவ்வம்மையார் அதை வாங்கிக் கொண்டு, எதிர்பாராவிதமான வார்த்தைகளைத் தமது மகன் கூறுவதையும் உடனே கையில் ஒரு பெரிய கட்டுக் காகிதங்களைக் கொடுத்ததையும் நோக்க அவ்வம்மாளுக்கு இன்னதென்று அறியக் கூடாத ஒருவிதமான உணர்ச்சி ஏற்பட்டது. உடனே அந்தம்மாள் அப்பா மகனே! நீ கூறுவது எனக்கு விளங்கவில்லையே! இதில் என்ன இருக்கின்றது? அதை நீயே சொல்லப்பா! எனக்கு மனம் என்னவோ சொல்லறியாமல் தவிக்கின்றது" என்று மன்றாடிக் கேட்டாள்.

அதைக்கேட்ட ஜமீந்தார். "அம்மா! வருத்தப்படவேண்டாம். நமக்கு இன்றே நற்காலம் பிறந்துவிட்டது. அந்த நற்செய்தி இந்தக் கடிதத்தில் தான் இருக்கின்றது. அதனை நான் கூறுவதென்றால் எல்லாம் வரிசையாக வராது. ஆகையால் தாங்களே படித்தறிந்து கொண்டால்தான் நலம் என்று தோன்றியதால் அதைத் தங்களிடம் கொடுத்தேன். இதோ இதை முன்னால் பார்த்தால் தங்கள் கவலைநீங்கிவிடும்." என்று கூறியவண்ணம். வைதேகியின் புகைப்படத்தைக் காட்டி, "அம்மா! இதிலிருக்கும் மாதரசியே நான் கண்ட காசிகை" என்று கூறினார். இதைக் கேட்ட பார்வதியம்மாள் படத்தை நோக்கி, "ஆஹா! இத்தகைய ரதிதேவியை இவ்வுலகத்திலும் சிருஷ்டித்திருக்கின்றானே! அப்பா மகனே! இது உனக்கு எப்படிக் கிடைத்ததப்பா? தம்பி! நீ கூறுவது உண்மையா? இந்த மங்கையா வைதேகி? இவள்தான் தாசியாயிற்றே. இதை மீண்டும் உன்னிடம் யாரனுப்பிக் கவலையுற வைத்தார்கள்?" என்று கூறினாள். அதைக் கேட்ட ராமாம்ருதம் "அம்மா! இவளே தான் வைதேகி என்ற மாது. உமக்கு அந்தக் கடிதத்தைப் படிக்காமல் சங்கதி விளங்காது. ஆகையால் அதைப்படியுங்கள்" என்று கூறியதன்மேல் பார்வதியம்மாள் அந்தக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள். அதைப் படிக்கும்போதே அவள் கண்ணில் நீர் பெருகிற்று. இடையில் எவ்விதமான பேச்சும் பேசாமல் கடிதத்தைக் கவனமாகப் படித்து முடித்து செய்தியை எல்லாம் அறிந்து கொண்டதும் அவளுக்குண்டான ஆநந்தத்தை அளவிடமுடியாமல் பூரித்தாள். புளகாங்கிதமடைந்தாள். ஆஹா! அந்த நாயுடுகாரு இருக்கும் இடத்தை அறிந்துகொண்டுபோய் அவரை வாத்திய கோஷத்துடன் எதிர் சென்று அழைத்துவந்து நமஸ்காரம் செய்தால் தான் என் மனம் சமாதானமடையும்போலிருக்கின்றதே! "ஆ! அவரால் அல்லவோ அந்தப் பெண்ணின் தாசித்தனம் நீங்கியது. அடடா! அவர் என்ன சாதாரண மானிடப் பிறவியேயல்ல; அவர் சாக்ஷாத் அவதார புருஷன்தான். என் கண்ணே! உனக்கும் இவ்வித நற்செய்தி கிடைத்து நாமும் கண்ணால் காணப்போகின்றோமா என்று ஏங்கிய என் வயிற்றில் பாலைவார்த்த அந்த வள்ளலை என்று காண்போம்" என்று பலவாறாகக் கூறிப் பிறகு மகனை நோக்கி, "அப்பா தம்பி! எழுந்துவா; கொஞ்சம் ஆகாரம் பார்த்துக்கொள். இனி கவலையே வேண்டாம். வா அப்பா கண்ணே!" என்று அழைத்தாள். இதைக்கேட்ட ராமாம்ருதம் "அம்மா! இதோ வந்துவிட்டேன். இந்தச் செய்தியைத் தாங்கள் யாரிடமும் கூறவேண்டாம். இந்தக் கடிதம் வந்ததாகவே பிறர் அறியவேண்டாம்; நாம் நேரில் நாயுடுவைக் கண்ட பிறகு தெரிவிக்கலாம்" என்று கூறினார். பிறகு இருவருமாக எழுந்து உள்ளே சென்று போஜனஞ்செய்துவிட்டு வந்தார்கள். ராமாம்ருதம் சந்தோஷமாகவே முதல் நாள் பத்திரிகையை எடுத்துப் பார்த்தார். அதில் பெரிய எழுத்தில் பின்வருமாறு செய்தி காணப்பட்டது.

ஜயக்கோடி நாட்டிவிட்டார். ஜயக்கோடி நாட்டிவிட்டார்.

"பல நாட்களாக நமது நாட்டில் கொள்ளையும், களவும், கொலையும் செய்து உபத்திரவித்து வந்த கள்ளக்கூட்டத்தார் பிடிபட்டு விட்டார்கள்.

ஜகமெங்கும் புகழ்பெற்ற துப்பற்றியும் நிபுணரான ராஜாராம் நாயுடு அவர்கள் ரயிலிலிருந்து எதிரிகளால் தள்ளப்பட்டதனால் மூளை சிதறி ஆஸ்பத்திரியில் படுத்திருப்பதாகக் கூறிய வீரசிங்கம்பிழைத்து விட்டார். அவரே இந்த அருமையான வேலையைச் செய்து முடித்திருக்கிறார். இன்னும் அனேக விசித்திரங்களை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார். விவரம் பிறகு வரும்."

என்று வரைந்திருந்ததைக் கண்டு அவர் மனம் கட்டிலடங்காமல் பூரித்துப் புளகாங்கித மடைந்து ஆநந்த நர்த்தனம்செய்தார். நாயுடுவைத் தாம் எப்போது காண்போம் என்ற ஏக்கமே அவர்மனதில் குடிகொண்டது. அந்த நாளை எதிர்பார்த்துக்கொண்டே இருந்தார்.

பத்திரிகையில் இந்தச் செய்தி வெளியான அன்று முதல் எங்கு பார்த்தாலும் ஒரே கோஷமாக ராஜாராம் நாயுடுவைப் புகழ்ந்து பேசுவதே முழக்கமாக விருந்தது. போலீஸார் எவ்வளவோ ஊக்கத்தோடு பாடுபட்டும் அந்த விஷயத்தில் தாம் ஜயமடையாமல் துப்பறிபவரே எல்லாவற்றையும் கண்டுபிடித்துவிட்டதைப்பற்றி மனதில் சற்று வருத்தமிருந்தாலும் அதனை மேலே காட்டிக்கொள்ளாமலிருந்து இந்தக் கொலை ஒன்று பாக்கியிருக்கின்றது; அதிலாவது தாங்கள் ஜோடித்த பிரகாரம் முடிவடையச் செய்து அதில் தாமே ஜயிக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பூர்ணமாகக் கொண்டிருந்தார்கள்.

பேப்பரில் இந்தச் செய்தி வந்து இரண்டு நாட்கள் கழிந்ததும், ராமாம்ருதம் சந்தோஷத்துடன் தனக்கு நற்செய்திஎப்போது கிடைக்கும்; நாயுடுகாருவின் தரிசனம் கிடைக்கும் தருணம் என்று வாய்க்கும் என்று எண்ணியிருந்த சமயம், வேலைக்காரன் ஒரு கவரைக் கொண்டுவந்து ராமாம்ருதத்தினிடத்தில் கொடுத்தான். அதன்மேல் பக்கமெல்லாம் மஞ்சள் தடவியிருந்தது. அதைக் கண்டதும் ராமாம்ருதம் இது என்ன கல்யாணக் கடிதம்போ லிருக்கின்றதே; யாருக்குக் கல்யாணமாக விருக்கும் என்று யோசித்துக்கொண்டே கவரைப் பிரித்துப் பின்வருமாறு படிக்கலானார் :—

ம-ா-ா-ஸ்ரீ ராமாம்ருத முதலியார் அவர்களுக்கு அனேக ஆசீர்வாதம். க்ஷேமம். க்ஷேமத்தைத் தெரியப்படுத்தவும். நான் இந்தக் கடிதம் விடுப்பதற்கு முன்னால் தங்களுடைய தர்மபத்னியார் மாதுஸ்ரீ வைதேகியம்மாளால் இயற்றப்பெற்ற லிகிதத்தை அனுப்பியதைத்தாங்கள் படித்துச் செய்தியை அறிந்திருக்கலாம். ஆதலால் மீண்டும் அவைகளையான் வரைவது மிகையாகும் என்பதைத்

தாங்களறிவீர்கள். கோமகனே! இந்தச் செய்தியைத் தெரிவிக்கயானே நேரில் வரவேண்டு மென்ற எண்ணத்தினலேயே இதை இத்தனை நாள் விடுக்காமல் தாமதம் செய்தேன். இன்னும் எனது முக்கிய மான சில வேலைகள் முடியவில்லை யாதலாலும் எனக்கு ஓய்வென் பதே இல்லாமையாலும் நான் வருவதற்கு இயலாதது பற்றி வருந்து கின்றேன். எவ்விதமாயினும் இச்செய்தியைத் தெரிவித்து விட வேண்டிய காலம் சமீபத்தில் நெருங்கி விட்டபடியால் நானே வந்திட இயலாததைப்பற்றி நேரில் மன்னிப்பு கேட்டுக் கொள்வோ மென்ற தைரியத்தினலும் தங்களுக்கும் வைதேகி யம்மாளுக்கும் திருமன்றல், நாளைப் புதன்கிழமையன்றே நெருங்கி விட்டபடியால் இடையில் இன் னும் இரண்டே நாள் தான் இருப்பதாலும் அதற்குள் நான் வந்து நேரில் கூற அவகாசமில்லாதது பற்றியும் முன்னதாகத் தெரிவிக் கும் பொருட்டு இக்கடிதத்தை யனுப்புகின்றேன். இதற்காக என்னை மன்னிக்கவும். தங்களது பத்னியாரின் பெற்றோர்கள் இந்தத் திருமன் றலை எனது கிரகத்திலேயே நடத்தி வைக்க வேண்டு மென்று ஆசிப் பதால் திருவொற்றியூரில் அடியேனுடைய இல்லத்திலேயே நாளது புதன்கிழமை தினம் நடத்துவதாக புரோகிதரைக் கொண்டு நாள் பார்த்து முகூர்த்தம் வைத்து மணவோலை வரைந்து எல்லோருக்கும் விடுத்தாய் விட்டது. தங்களுடைய காரியங்களையும் தங்களனுமதி யின்றி யானே முன் நின்று பெருதனமாகச் செய்து விட்டதைப் பற்றித் தாங்கள் என்னை மிகவும் க்ஷமிக்க வேண்டும். இடையில் சாவகாச மில்லாமையால் யானே தங்களுடைய பந்துக்களுடைய விலா சங்களைத் தங்கள் நண்பன் பரமசிவத்தின் மூலமாகக் கேட்டறிந்து கொண்டு தந்தி அடித்து விட்டேன். எல்லோரும் இன்று நாளைக் குள் வந்து விடுவார்கள் என்று நினைக்கின்றேன். தங்கள் வீட்டார் இறங்குவதற்கு திருவொற்றியூரிலேயே தனியாகபங்களா அமர்த்தி இருக்கின்றேன். தங்களுடைய நண்பரைக் கொண்டே தங்களுக்கு இன்னும் வேண்டியவர்களுக் கெல்லாம் கடித மனுப்பிவிட்டேன். திருவொற்றியூரில் பந்தல் படிகள் முதலிய எல்லாம் போட்டாயிற்று. தாங்களும் தங்களைச்சார்ந்த சகலமான மனிதர்களும் நாளை செவ் வாய்க் கிழமை யாகையால் இன்று மாலையிலேயே புறப்பட்டு வரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். தங்கள் பத்னியின் பெற்றோர்களைத் தாங்களறியாமலிருக்கும் போது நான் இவ் வித பெருதனம் செய்து விட்டதாக எண்ண வேண்டாம். அத் தகைய முகமறியாத மனிதரையும் ஜாதிபேதப் பட்ட மனிதர்களை யும் தங்களுக்கு யான் சம்மந்தம் செய்யமாட்டேன். விவாகத் தன்று பார்த்தால் உங்களுக்கே விளங்கும். மேலும் தங்கள் பத்னியிடத்தில் தாங்கள் தெரிவித்த சகலமான வரலாற்றையும் நானறிவேனுகையால் இதைத் துணிந்து செய்ய முன் வந்தேன். நிற்க, தங்களுடைய மனி தர்கள் வெளியூரிலிருந்து வருபவர்களுக்குப் பெண் வீட்டாரே நேரில்

ஸ்டேஷனுக்கு வண்டியனுப்பி அவ்விடத்திற்கே அழைத்துப் போக ஏற்பாடு செய்திருக்கின்றபடியால் அதைப்பற்றியும் தாங்கள் தாமதிக்காமல் இன்று மாலை 5-மணிக்கு நல்ல லக்கின மாகையால் எல்லோரும் புறப்பட்டு திருவொற்றியூருக்கு வந்து சேர்ந்து விட வேண்டுகின்றேன். தங்களை அழைத்துப் போவதற்கு நண்பகலில் சில மனிதர்களை அனுப்புகின்றேன். பாக்கி விவரங்களை யெல்லாம் நேரில் பார்த்துக் கூறுகின்றேன். அதுவரையில் பொறுத்து மன்னிக்க வும். எனக்கு இந்தக்கடிதம் எழுதுவதற்குக் கூட அவகாசமே இல்லா மல் தங்கள் திருமன்றலின் வேலையாகவே இருக்கின்றேன். இன்றுமாலை யிலேயே புறப்பட்டு வந்து சேரும்படிக்குக் கோருகின்றேன். தங்களை மாமனாரே வந்து அழைக்கவில்லை என்று எண்ணவேண்டாம். தற்சம யம் என்னையே மாமனாராக எண்ணவும். ஏற்கெனவே தாங்களிரு வரும் பரஸ்பரம் மனமொத்து விட்டபடியால் வைதேகியைத் தங் கள் தர்ம பத்தினி யென்றே நான் குறித்தேன்.

வேணும் ஆசீர்வாதம்,

இங்ஙனம் தங்கள் நன்மையைக் கோரும் நண்பன்,

ராஜாராம் நாயுடு.

என்று எழுதியிருந்த கடிதத்தைப் படிக்கப் படிக்க அவர் மனதில் ஆநந்த ஊற்று கிளம்பி வெள்ளமாக ஓட வாரம்பித்தது. அந்தக் கடிதமான அம்ருதத்தை உண்ட அவர் தேகம் பூரித்துப் புளகாங்கித மடைந்து, துப்பறியும் நிபுணரைத் தமது வாய்க்கு வந்தபடி எல் லாம் துதித்து அவரை மனதில் எண்ணி திக்கு நோக்கி வந்தன மளித்து "ஆஹா! மஹானுபாவனே! உம்முடைய வீரதீர பராக்கிர மத்தை என்னென்று கூறுவேன்! தாம் எம்பொருட்டாகச்செய்துள்ள உபகாரத்திற்காக கேவலம் என்னிடம் தாங்கள் மன்னிப்புக் கேட்கவேண்டுமா? அடடா! நானல்லவா தங்களுக்கு இவ் வளவு சிரமம் கொடுத்ததற்கு மன்னிப்பு கேட்டுக்கொண்டு பிர தக்ஷிண நமஸ்காரம் செய்யவேண்டும்? அதைவிடுத்துத் தாங்கள் என் னைக்கேட்டு வணங்கிவிடுப்பது சற்றேனும் தகுமோ? ஆஹா! என் பொருட்டாகத் தாங்கள் எத்தனையோ ஆபத்தில் எல்லாம் சிக்கி அவற்றை ஜயித்து எமக்குப் புத்துயிரளித்துப் புனிதஜென்மம் எடுக் கும் படிச்செய்த புண்ணிய மூர்த்தியே! காருண்யவள்ளலே! தாங்கள் செய்துள்ள இப்பெருதவிக்கு யான் எவ்விதம் கடமைப்பட்டுக் கைம் மாறு செய்வதென்பதை யறியக்கூடவில்லையே! என்னுடைய ஜமீன் முற்றிலும் தங்களுக்குத் தத்தம் செய்துவிட்டாலும் போதாதே! கேவலமான பணத்தையா தாங்கள் எதிர் பார்ப்பீர்கள்? தங்கள் காலில் ஒட்டிய தூசிகூட பணத்தை லக்ஷியம் செய்யாதே! அத்தகைய பரம புருஷராகிய தங்களுக்கு என் உயிருள்ளளவும் தங்களன்பிற்கு அடிமையாயிருப்பதைத் தவிர வேறுமுண்டோ?" என்று பலவாறாக

எண்ணி ஆநந்தக்கண்ணீர் விட்டவண்ணம் கடிதத்தை எடுத்துக் கொண்டு தமது அன்னையிடம் சென்று வணங்கி அதைக் கொடுத்து "அம்மா! இதைப் படித்துப்பாருங்கள் என்று நகைமுகத்தோடு அகமகிழ்ந்து மிகவும் பூரித்தவண்ணம் நின்ற தமது மகனைக்கண்ட தாயான பார்வதியம்மாள் ஏதோ சந்தோஷச்செய்தி வந்திருப்பதாக உணர்ந்து கடிதத்தை நோக்க அதில் மஞ்சள் தடவி இருந்ததைக் கண்டு இது திருமணப் பத்திரிகை என்பதை ஊகித்து அதைப் படிக்கலானாள். முற்றிலும் படித்த தாயின் மனம் அடைந்த ஆநந்தத்திற்கும் ஓர் எல்லையுண்டோ? அடடா! அவள் இதுவரையில் பட்ட துன்பமெல்லாம் அக்தக் கடிதத்தைக்கண்டதும், காற்றைக் கண்ட மேகம்போல் பறக்கவாரம்பித்து, பரிதியைக்கண்ட பங்கயம் போல முகமலர்ந்து மகிழ்ச்சியே மயமாகமாறினாள். அவள் தேகம் கட்டுக்கு அடங்காமல் சந்தோஷத்தினால் பூரித்துப் பெருத்துவிட்டது. அந்தம்மை தன்மகனை இறுகத்தழுவி யணைத்துக்கொண்டு "ஆ! என் கண்ணே! ராமாம்ருதம்! உன்னையும் நான் மணக்கோலத்துடன் திரும்பவும் பார்க்கப் போகின்றோமா என்று ஏங்கி இருந்த எண்ணத்தில் பாலைவார்த்த அப்பரம் பொருளான தாயுடுவை இன்னும் நேரில் கண்டு தரிசிக்கும்படியான நற்காலம் பிறக்கவில்லையா? அப்பா தம்பீ! நம் பொருட்டாக அந்தப் புண்ணியவான் முன்னின்று எல்லா வேலையையும் செய்துவிட்ட உதவியைச் சற்றும் பாராமல் அவர் உன்னிடம் மன்னிப்பு கேட்கும் அழகிலிருந்தே அன்னவருடைய குணம் நடத்தை, ஒழுக்கம், தயாளத்தன்மை, காருண்யம் முதலியவற்றின் மேம்பாடு தெரியவில்லையா? அவர் ஒருவராலேயே இந்த உலகத்தில் மழைபெய்து வருகின்றதென்று எனக்குத் தோன்றுகிறது. அடடா! இத்தகைய மனிதர்களும் இந்தக் கலிகாலத்திலிருக்கின்றார்களா? ஏ மஹானுபாவா! உம்முடைய உதவியால் அணைந்துவிட்ட என் குடிவிளக்கை மீண்டும் ஏற்றிவிட முன் வந்த வள்ளல் பெருமானே! தாங்களே தான் என்குலதெய்வமென்று நான் என் மனச்சாக்ஷியாக எண்ணிவிட்டேன். தங்களைக் கண்டு தரிசிக்கும் பாக்கியம் எப்போது வருமோ தெரியவில்லையே என்று எண்ணியவண்ணம், மகனை நோக்கி, "தம்பி! இன்று மாலையிலே நல்ல லக்கினமாகையால், அவர் உத்தரவுப்படி புறப்பட்டு விடுவோம், இன்று நாம் புறப்படுவதற்கு முன்னர் நமது அம்ருதவல்லியைக் குறித்துப் பூவாடை பூஜைசெய்து ஏழை ஜனங்களுக்கு அன்னமிட்டு வஸ்திரமளித்து, அநேக சுமங்கலிகளுக்குச் சேலை, ரவிக்கை, பாக்கு, மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பழம், தக்ஷிணை முதலியவைகளை வழங்கி விட்டுப் பிறகு நாம் பிரயாணமாக வேண்டும். ஆகையால் நீ உடனே நமது மோட்டாரைத் தயார்செய்யச் சொல்லப்பா! மேலும் உடனே ஆளையனுப்பி பந்தல்காரனை வரவழைத்து பந்தக்கால் நட்டுப் பந்தலிடச் செய்துவிடு. நமது காரியஸ்தரை இங்கு நானழைத்த

தாகச் சொல்லியனுப்பு" என்று கூறினாள். இதைக்கேட்ட ஜெமீந்தார் மகிழ்ச்சியோடு ஆள்களை யனுப்பி வண்டியைத் தயார் செய்யும்படிக் கூறிவிட்டுப் பந்தற்காரனுக்கும் சொல்லி யனுப்பிவிட்டார். அடுத்த க்ஷணத்தில் பார்வதியம்மாள் காரியஸ்தரிடம் சாமான்கள் வாங்குவதற்கு ஏற்பாடுசெய்து அனுப்பிவிட்டுத் தான் வண்டியில் ஏறி ஜவுளிக்கடைக்குச் சென்று, அனேகவிதமான புடவைகள், ரவிக்கைகள், வேஷ்டிகள, அங்கவஸ்திரங்கள், பாவாடை, சிற்றாடை, சொக்காய், குட்டை, இவைகளை ஏராளமாக வாங்கிக்கொண்டு, பெரிய ஷாப்புகளுக்குச் சென்று வைதேகிக்கு சுமார் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமலுள்ள சேலைகளில் 4-5-ம் அதற்கேற்ற ரவிக்கைகளும்வாங்கிக் கொண்டு, வைர ஷாப்பிற்குச்சென்று வைர நகைகள் ஒரு செட்டு வாங்கிக் கொண்டு தமக்குத் தெரிந்தவர்களுக் கெல்லாம் அன்று நடக்கும் சுமலங்கலிப் பிரார்த்தனைக்கு வரும்படியாக அழைத்து விட்டு வீடுதிரும்பினாள். இந்தம்மாள் வருவதற்குள் வீட்டில் பெரிய கல்யாண முழக்கத்தோடு பாண்டு வாத்தியமும் மேளமும் வாசிக்கப் பந்தக்கால் நட்டுப் பிரமாதமாக அனேகம் பேர் கூடிப் பெரிய பந்தலை ஒரு நிமிஷத்தில் போட்டு விட்டார்கள். அந்தப்பந்தல் நிறைய வாழை கமுகு, தென்னை, பனை, மாவிலைத் தோரண முதலியவற்றைக் கட்டி அழகாய் அலங்கரித்து விட்டார்கள். அனேக ஆட்களைப் பலவிடங்களுக்கும் அனுப்பி அளவற்ற ஏழை ஜனங்களையும் சுமங்கலிகளையும் உடனே வரவழைத்து விட்டார்கள். அன்று பெரிய விருந்து தடபுடலாய்த் தயாரித்து பூவாடைக்காரி என்னும் சுமங்கலிப் பிரார்த்தனையை வெகு விமரிசையாக நடத்தி அம்ருதவல்லியை எண்ணித் தனது குலவிளக்கு அவியாமல் என்றும் எரியவேண்டும் என்று வேண்டிக்கொண்டு எல்லோருக்கும் அன்னமிட்டு வஸ்திரமளித்து,சுமங்கலிகளுக்கெல்லாம் சேலை, ரவிக்கை,குங்குமம், மஞ்சள், புஷ்பம், சந்தனம், தாம்பூலம் அனேக தினுசு பழவர்க்கங்கள் எல்லாமளித்துக் களிக்கச் செய்து வெகு விமரிசையாக சுமங்கலிப் பிரார்த்தனையை நடத்தினார்கள். எல்லாச் சடங்குகளும் நடந்த பின்னர் எல்லாரும் பிரயாணத்திற்குரிய பெட்டி பேழைகளையும் மூட்டை முடிச்சுகளையெல்லாம் கட்டித் தயார் செய்து கொண்டிருந்தார்கள். அன்றே அனேக கோயில்களுக்கெல்லாம் அபிஷேக நிவேதனம் செய்து துப்பட்டாக்கள் சுவாமிக்குச் சமர்ப்பித்து, திருவிழாக்கள் நடத்தி லக்ஷரூபாய் வரையில் ஆலயங்களுக்குச் செலவிட்டு பார்வதி, ராமாம்ருதம், கமலம் ஆகிய எல்லோரும் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துகொண்டு வந்து கடைசியில் மூவரும் உண்டு பிரயாணத்திற்குச் சித்தமானார்கள். கமலம், தனது அறையில் சென்று தன் காலவிதியை எண்ணிக் கண்ணீர்விட்டுக் கலங்கியவண்ணம், "ஐயோ! நாம் இந்த கலியாணத்திற்குப் போய்

சகல ஜனங்களுடனும் சந்தோஷமாகவிருக்கும் பாக்கியத்தைச் செய்யாமல் இச்சிறு பிராயத்திலேயே பந்தலில் வருவதற்கு அருகமற்ற அபாக்யவதியாகிவிட்டேனே! ஆ! நான் வரமாட்டேனென்றால் அம்மாளும் தம்பியும் திட்டுவார்கள். என்ன ஜென்மமெடுத்தேன்?" என்று கண்ணீர் விட்டுக்கொண்டே இருக்கையில், அவளுக்குப் பின்புறத்திலிருந்து இருகரங்கள் தோன்றி கழுத்தில் எதையோ கட்டியதுபோலவிருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள். அவள் அப்படியே அலறியவண்ணம் திரும்பிப் பார்த்தாள். அவளையுமறியாமல், "ஹா! இதென்ன நான் காண்பது கனவின் தோற்றமா அல்லது உண்மையா! ஒருக்கால் பைசாசமாகவிருக்குமோ! 10 வருஷத்திற்கு முன்னால் கப்பல் பிரயாணத்தில் கவிழ்ந்தபோது இறந்துவிட்ட என் நாதரின் உருவம் என் கண்ணெதிரில் தோற்றுவது வியப்பிலும் வியப்பாகவிருக்கின்றதே" என்று அவள் வாய்விட்டுக் கூறி முடிக்குமுன், அவளுக்கெதிரில் நின்ற மனிதர், மிகவும் மெலிந்துபோய் வெகுகாலமாய் நோயினால் அடிபட்டவராகக் காணப்படும் மேனியை உடையவராய், சறேலென்று கமலத்தைத் தழுவிக்கொண்டு "ஹா! கமலம்! நீயா இவ்விதம் அடையாளமே தெரியாமல் துரும்பிலும் துரும்பாக மெலிந்துபோய்விட்டாய்? அடடா! உன் வனப்பென்ன? நீ இருந்த செழுமை என்ன? இப்போது நீ இருக்கும் நிலைமை யென்ன? இதுவெல்லாம் காலவித்தியாசம்தான். கமலம்! நீ இனியும் சந்தேகம் கொள்ளவேண்டாம். நானே உன்னை மணந்த மாதவ முதலியார். கப்பல் கவிழ்ந்து இறந்துவிட்டதாக எண்ணி நீ விதந்துவாய், இவ்விதக் கோலத்தோடு உன்னை வைத்துச் சென்ற பாவி நானே! சந்தேகம் வேண்டாம். இதோ நீ என்னுடைய மச்ச அடையாளத்தைக் கண்டு நிச்சயித்துக்கொள். உன்னுடைய நிலைமை இம்மாதிரியாகவிருக்கும் என்பதை யூகித்தே நான் முன்னதாக முக்கிய வஸ்துவாகிய தாலி உருவைக் கோர்த்துக்கொண்டு வந்து கட்டிவிட்டுப் பிறகு உன் முன் நின்றேன். 10 வருஷம் கழித்து நம்மைச் சேரும்படியாக அருள்புரிந்த காருண்யமூர்த்தியாகிய துப்பறியும் ராஜாராம் நாயுடுவிற்கு நாம் என்ன கைம்மாறு செய்தாலும் போதாது. கமலம்! ஏன் இவ்விதம் விழிக்கின்றாய்? நான் இன்னும் உனக்கு அடையாளம் தெரியவில்லையா?" என்று கூறிக்கொண்டிருக்கையில், பார்வதியம்மாளும் ராமாம்ருதமும், முதலில் கமலம் தன்னை யறியாமல் ஹா! என்று கூவியதைக் கேட்டு இவ்விடத்திற்கு ஓடிவந்தார்கள். அங்கு தனது மருமகப்பிள்ளையைப் போல நிற்கும் மனிதரைக் கண்ட பார்வதியும், ஜமீந்தாரும் திடுக்கிட்டுத் திகைத்துப் பிரமித்து நின்ற அச்சமயமே, அங்கு நின்றிருந்த கமலத்தின் புருஷர் பார்வதியம்மாளை வணங்கி, "மாமி! நான் புனர் ஜன்மமெடுத்துத் தங்கள் மகளுக்குத் திருமன்றல் செய்து விட்டேன். இவ்விதம் என்னை மீட்டுவந்தவர் சாக்ஷாத் பரம்பொருளுக்கு ஒப்பா

கக் கூறும் ராஜாராம் நாயுடுவே. நான் இன்னும் யாரென்பதைக் கமலம் அறியவில்லைபோலும்" என்று கூறிமுடிக்குமுன் கமலம் அவரது மச்சவடிவையும் இன்னும்மற்ற அடையாளத்தையும் கண்டு தன்நாதன் தான் என்பதை அறிந்துகொண்டு சரேலென்று பாய்ந்து தன் கணவன் காலில் பணிந்து ஆநந்தத்தால் மெய்மறந்து கண்ணீர் பெருக "ஆ! என் பிராணபதே! இப்பாவிக்கும் இத்தகைய காலம் பிறக்கும் என்று கனவில் கூட எண்ணவில்லையே. சற்று முன் நான் வருந்தியதற்கு உடனே பேசுந் தெய்வமாகிய நாயுடு என் கலியைத் தீர்த்து என்னைக் களிப்பிக்க முன் வந்தாரா! நாதா! அந்த பரமபுருஷர் எங்கே? தம்மை அவர் எவ்விதம் கண்டு பிடித்தார்? தாங்கள் கப்பல் விபத்திலிருந்து எவ்விதம் தப்பினீர்கள்! இத்தனை நாள் எங்கிருந்தீர்கள் என்பதை அறிய வேண்டுகின்றேன்." என்று கூறிக் கண்ணீர் விடுத்ததைக் கண்ட மாதவ முதலியார் கமலத்தைத் தூக்கி நிறுத்திவிட்டு ராமாம்ருதத்தை நோக்கி "அப்பா தம்பி! உங்கள் வரலாற்றை எல்லாம் நாயுடு மூலமாயறிந்து மிகவும் கலங்கினேன். ஏதோ அன்னவரே நமக்கு குலதெய்வமாக விளங்கி நம்மை எல்லாம் உயிர்ப்பித்துவிட்டார். கடவுளின் கடாக்ஷத்தினாலும் அந்த உத்தமரின் பேருதவியினாலும் உனக்கு சீக்கிரம் மனக்கவலை மாறிவிட்டது. உன் தமக்கையின் விசனமும் நீங்கிவிட்டது. அதுவே போதுமானது. நான் கப்பல் ப்ரயாணம்செய்யச் சென்ற காலத்தில் கப்பல் விபத்தில் ஜனங்களில் பெரும்பாலோர் சேதமாகிவிட்டார்கள். அதில் சிலர் தப்பித்துக் கொண்டார்கள். ஏதோ புண்ணிய வசத்தால் அந்தப் பக்கம் வந்த வேறொரு கப்பலில் ஏறி ஒரு பட்டணத்தை யடைந்தேன். அங்கு பாஷையே எனக்குத் தெரியவில்லை. நான் அவ்விதமே தவித்துக்கொண்டிருந்த சமயம் ஒரு தமிழன் என்னிடம்வந்து தான் பட்டணம் செல்வதாகவும் கூடவந்தால் என்னையும் அழைத்துப் போவதாகவும் கூறியதை நான் நம்பி அவனோடு சென்றேன். அவன் என்னை வண்டியில் அழைத்துச் சென்று 3-4 நாள் ப்ரயாணம்செய்து ஒரு ஊரை யடைந்ததும் தான் ஒரு பெரிய மாளிகையைப் போன்ற கட்டிடத்தை யடைந்து என்னையுமிறங்கும்படிச் செய்து என்னை அழைத்துவந்தது தங்களோடு சேர்ந்துகொண்டு கொள்ளையடிக்கவேண்டும் இல்லையேல் ஹிம்சை செய்வதாகவும் கூறியதைக் கேட்டதும் என் குடல் நடுக்கமெடுத்துக் கொண்டது. இவர்கள் துன்மார்க்கர்கள் என்பதை யறியாமல் அகப்பட்டுக் கொண்டோமே என்று வருந்தினேன். நான் அவர்களுடன் சேர்ந்து கொள்ளையடிக்க சம்மதப்படவில்லை; மறுத்துவிட்டேன். அதன்மேல் அவர்கள் என்னை அங்கு அவர்களுக்கு வேலை செய்யும்படியாக உபத்திரவித்து என்னை சிறையில் வைத்துவிட்டார்கள். நான் தப்பி வெளியேறுவதற்குச் செய்த முயற்சிகளெல்லாம் வீணாய்விட்டன. என்னை வெளியில் விட்டுவிட்டால்

தமது மர்மத்தை வெளியிட்டு விடுவேனே என்ற பயத்தினால் என்னை சிறை வைத்திருந்தார்கள். அவர்கள் காவலுடன் என்னை வெளியில்விட்ட சமயம் வேலைசெய்யவேண்டும்; மற்ற சமயம் என்னைத் தலை எடுக்கவிடாமல் இந்த பத்து வருஷகாலமாக உபத்திரவித்துக் கொண்டே வருகையில் இப்போது சென்ற வாரத்தில் திடீர் என்று போலீஸ்காரர்கள் வந்து அந்தக் கூட்டத்தாரை எல்லாம் கைதுசெய்து கொண்டுசென்றார்கள். அவர்களோடு என்னையும் சேர்த்துஅழைத்து வந்தார்கள். நான் போலீஸாரிடத்தில் என் வரலாற்றை எல்லாம் உரைத்ததுடன் இதைக் கண்டுபிடித்த நாயுடுவிற்கு ஒரு கடிதம் விரிவாக எழுதியனுப்பினேன். அவர் ஸ்டேஷனுக்கு வந்து என்னைக் கண்டார். நான் பலான மனிதன் உங்கள் உறவினர் என்ற வரலாற்றைக் கூறியதைக் கேட்டுக்கொண்டு போலீஸ் கமிஷனர் உத்திரவைப் பெற்றுக் கொண்டு வந்து என்னை இன்று காலையிலேயே விடுவித்து அழைத்து வந்து கமலத்தின் நிலைமையைக் கூறி 'இன்று ஜனக்கூட்ட மதிகமாகவே இருக்கும் அங்கு. ஆகையால் நீ சந்தடியில் நுழைந்து, இந்த தாலியை கமலத்தின் கழுத்தில் கட்டிவிட்டு பிறகு வரலாற்றைக் கூறு. அதன்மேல் உங்களை எல்லாம் தமது ஊராகிய திருவெற்றியூருக்கு அழைத்துப் போகும்படிக்கும் கூறி யனுப்பினர். அவ்விதமே செய்தேன்' என்ற வரலாற்றைக் கேட்ட எல்லோரும் அளவிலடங்காத சந்தோஷத்தை யடைந்து, ஆநந்தநிர்த்தனம்செய்து," ஆஹா! கடவுளின் திருவருளை யாராலறியக் கூடும்? துன்பம் வருங்காலை அடுத்தடுத்து விடுக்கின்றார். அதேபோல இன்பத்தையும் ஏககாலத்தில் ஒருவர் மனத்திற்கு ஊட்டி அவர் வயிற்றில் பாலை வார்க்கும் பரம்பொருளின் அருளே அருள்" என்று நாயுடுவை பலவாறாகப் புகழ்ந்துகூறி அன்னவரை மனதில் எண்ணி எதிரில் நிற்பதுபோல பாவித்து வந்தனம் செய்து ஆரவாரித்துக் கரகோஷம்செய்தனர். பார்வதியம்மாள் மாதவ முதலியாரை உள்ளழைத்துச் சென்று ஸ்நானபானாதிகளை முடித்துக் கொள்ளச்செய்து அழைத்துவந்தாள். கமலம் உடனே சென்று மஞ்சள் பூசி மஞ்சனமாடி நல்லசேலை, நகை முதலியவற்றுடன் சர்வாபரண பூஷிதையாகவிளங்கினாள். பார்வதியம்மாள் ஆநந்தமயமாக மாறிப்பூரித்தாள். வெகு காலமாகக் கண்தெரியாமல் அவஸ்தைப்பட்ட குருடன் ஒருவனுக்குதான் எதிர்பாராத விதமாக இரண்டு கண்ணும் திடீரென்று ஏககாலத்தில் தெரிந்தால் அவனுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகுமோ அதுபோலவும், ஒருமாது தனக்கு பிள்ளை இல்லாமல் மலடி என்ற பட்டத்தைப்பெற்று வருந்துங்காலையில் இரட்டைப் பிள்ளைகளை ஒரேகாலத்தில் பெற்றால் அவள் மனம் எவ்வாறு பொங்குமோ அதேபோல பார்வதியம்மாளின் மனம்பொங்கி மகிழ்ந்தது. மாலை 5-மணியாயிற்று. எல்லோரும் தயாராகப் புறப்பட்டுவிட்

டார்கள். ராமாம்ருதம் தனக்கு குறை நீங்கி சந்தோஷம் உண்டான காலத்திலேயே தனது தமக்கைக்கும் நெடுநாளைய துன்பம் தீர்ந்து, இன்பம் வந்ததை எண்ணி அளவளாவிமகிழ்ந்த வண்ணம் மணக்கோலத்தோடு, எல்லோருடனும் கிளம்பிவிட்டார். மூட்டைகளை எல்லாம் ஓர் பெரிய மோட்டார் லாரியில் போட்டுக்கொண்டு மற்ற எல்லோரும் மோட்டார்காரில் அமர்ந்து மங்களவாத்யம் முழங்க திருவொற்றியூரை நோக்கிச் செல்லலாயினர்.

## 18-வது அதிகாரம்

### கண்ணுளின் மணக்காட்சி கண்கொள்ளா மகிழ்ச்சி.

திருவொற்றியூரில் ராஜாராம் நாயுடுவின் பங்களாவிற்கு எதிரி லுள்ள பங்களாவையே இவர்களுக்கு அமர்த்தி யிருந்தாராதலால் அந்த பங்களாவையும ராஜாராம் பங்களாவையும் சேர்த்து வீதியில் ஒரு பெரிய பந்தல் போட்டு அதில் தேவலோகம்போல சிங்காரித்து கலர் வாரியாக எலக்ட்ரிக் விளக்குகளைக் கொத்து கொத்தாகமாட்டி அனேகவித லஸ்தர் குலோபு ரஸகுண்டு மகர தோரணங்களும் வாழை மரம், மாவிலைத் தோரணம், கமுகு, தென்னை, ஈச்சம் முதலிய வைகளை நிறையக்கட்டி நாலு புறத்திலும் மகரம்போல அலங்கரித்து ஆள் உயரத்திற்கு பொம்மைகளை நிற்க வைத்தும் எங்கும் முத்துக்களாலும்,ஜிகினு,குருணுபட்டை, சரிகை முதலியவைகளினுலும்பலவிதமாக அலங்கரித்து அனேக புஷ்பச்செடிகளும் க்ரோட்டன்ஸ்களும் நாற்காலிகளும் பலவிதமாக எல்லாம் போட்டு அதை தேவேந்திர லோகம் போலவே அலங்கரித்து அங்கு மங்கள வாத்தியம் முழங்கிக்கொண்டிருந்தது. இவர்களின் வரவை அதிக ஆவலோடு எதிர் நோக்கிக்கொண்டிருந்த ராஜாராம் வீட்டாரும் இன்னும் சிலரும் ராமாம்ருதம் வண்டியோடு வந்திறங்கியவுடன் திருஷ்டி தோஷங் கழித்து ஆலத்தி எடுத்து மங்களவாத்ய கோஷத்துடன் எதிர் பங்களாவின் உள்ளே அழைத்தார்கள். இவர்கள் வருவதற்கு முன்னமே இவர்களுடைய விடுதியில் இவர்களைச் சார்ந்த சில உறவினர், நண்பர்கள் எல்லோரும் வந்து ஏராளமாகக் கூடியிருந்தார்கள். அதைக் கண்ட பார்வதியம்மாள் சந்தோஷத்துடன் நல்வரவு கூறி தனது மருமகன் திரும்பிவந்த செய்தியைத் தெரிவிக்க எல்லோரும் ஆச்சரியமடைந்து ஆநந்தித்தார்கள். பார்வதி யம்மாள் உடனே ஒரு தங்கத் தாம்பாளத்தில் ஆயிரம் ரூபாய் பெருமானமுடைய புடவையொன்றையும், அதற்கேற்ற ரவிக்கையையும் வைத்து,ஒரு வைர நெக்லேஸ் என்னும் ஹாரத்தையும் வைத்து, மற்ற வெள்ளித்தட்டுகளில் மஞ்சள் குங்கும, புஷ்ப, தாம்பூல கந்த பலாதி வர்க்கங்களை எல்லாம் வைதது அவைகளைத் தமது ஆள்களிடம் கொடுத்து எடுத்துக் கொண்டு கமலத்தையும் அழைத்துக்கொண்டு மேளவாத்தியத்துடன் ராஜாராம் பங்களாவில் சென்று ராஜாராம் நாயுடுவின் தர்ம பத்னியா

யைக்கண்டு அவ்வம்மையின் பாதத்தில் விழுந்து வணங்கி அவைகளை எல்லாம் அந்தம்மாளுக்கு பாதகாணிக்கையாகச் சமர்ப்பித்து அவ் வம்மைக்கு நமஸ்காரம் செய்து உபசார வார்த்தைகள் கூறிப் புகழ்ந்தார்கள். இவைகளை எல்லாம் கண்ட அந்தம்மாள் அவைகளை மறுக்க முயன்றும் இவர்கள் பலவந்தமாக அந்த ஹாரத்தை அவ்வம் மையின் கழுத்தில் தாமே அணிவித்து அச் சேலையைக் கட்டிக்கொள் ளும்படி பலவந்தித்து அதையும் கட்டிவைத்து பிறகு சற்றுநேரம் அங்கு பேசிக்கொண்டிருந்து பின்னர் வைதேகி அங்குதானே இருக்க வேண்டும் என்று சுற்றுமுற்றும் பார்க்க எங்கும் அவளைக் காணமை யால் அவளுக்குண்டான மரியாதையோடு வந்து அப்புறம் காணலாம் என்று எண்ணி அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தமது விடு திக்கு வந்து சேர்ந்தார்கள். அன்று கழிய மறுநாள் காலையில் அவர் களுடைய சகலமான பந்துக்களும் வந்துவிட்டார்கள். எல்லோரும் ஒன்றுகூடி மணப்பெண் யாருடைய பெண் தெரியவில்லையே! அது மர்ம மாகவே இருக்கின்றதே! ஒருவேளை அந்த பெண்ணையே இவன் கட்ட வேண்டுமென்று பிடிவாதமாக இருப்பதால் அவனுக்கு அவளை கட்டு வதற்காக தாசி பெண்ணல்லவென்று கூறி கல்யாணத்தை நடத்திவிட ஏற்பாடு செய்திருப்பார்களா என்று குழப்பம் செய்ய ஏற்பட்டார்கள். வந்தவர்கள் இவ்விதம் தமக்குள்ளேயே கொசமச என்று பேசத் தலைப் பட்டதை அறிந்த ராஜாராம் வீட்டிலிருந்த ஒரு பெரியவர் வந்து தாங்கள் சந்தேகமே கொள்ளவேண்டாம். அந்தப்பெண்ணின் பெற் றோரைத் தாங்கள் நாளைக்குக் காணலாம் என்று கூறியதைக்கேட்டு எல்லோரும் வைதேகியின் பெற்றோர்களையறிய அதிக ஆவ லாகக் காத்திருந்தார்கள். பார்வதி, ராமாம்ருதம், கமலம் ஆகிய மூவரும் வைதேகியின் பெற்றோரைக்காண அதிக ஆவலுடனிருந்தார் கள். இன்னார் பெண்ணுக்கு விவாகமென்பதே தெரியாமல் சிலர் வந்து கூடியிருந்தார்கள். சிலர் ராஜாராம் நாயுடுவின் பரிச்சயத்தால் வந் தார்கள். சிலர் வைதேகியின் பெற்றோரைக் காண்பதற்கு வந்திருந் தார்கள். சிலர் ராமாம்ருதத்தின் பந்துக்கள் வந்திருந்தார்கள் இவ்வித மே அன்று மாலைக்குள் அந்த இரண்டு பங்களாவிலும் பெரியகூட்டம் கூடிவிட்டது. எங்கு பார்த்தாலும் ஆச்சரியமான பேச்சும் கூட்டம் கூட்டமாக வியப்பே வடிவமாய் எதிர் பார்த்திருந்தார்கள். மறுநாளா கிய புதன்கிழமை பொழுது விடியுமுன்னிருந்து ஒரே களியாட்டமும் மேள கோஷமும் அவரவர்கள் அலங்கார மயமாய் கந்தர்வ ஸ்ரீகள் போல நிற்பதும் அன்று அந்த பங்களாவே பெரிய இந்திர லோகம் போல விளங்கிற்று. மணமகளாகிய வைதேகி ஒரே வைர செட்டினலான ஆபரணங்களை அணியப் பெற்று தங்க ஜரிகைக்களினல் நெசவு செய்த பீதாம்பரத்தை தரித்துக்கொண்டு கந்தர்வமாது போல விளங்கினாள். அன்று விடியற்கால முதல் மண

மகனுக்கும் மணமகளுக்கும் நடக்கவேண்டிய சடங்குகளை எல்லாம் ராஜாராம் நாயுடு வீட்டாரே முன்னின்று வெகு விமரிசையாக நடத்துகின்றார்கள். பகல் 1 மணிக்கு மேல் முகூர்த்தம் வைத்திருந்தார்கள். அன்று ஜனங்கள் எல்லோரும் வைதேகியின் பெற்றோர் இன்னும் வரவில்லையே அவர்கள் வராமலேயே இவ்வளவு காரியத்தையும் செய்து வருவதைப் பார்த்தால் இது வேடிக்கையாக விருக்கின்றதே யன்றி நிஜமான கல்யாணம் செய்வதாகத் தெரியவில்லையே. இன்னும் தாலி கழுத்தில் ஏறுகின்ற வரையில் பார்த்தால் தெரிகின்றது என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தார்கள். ராஜாராம் நாயுடுவையும் காணவில்லை. அவரைச் சேர்ந்தவர்கள் இந்த விவாகத்திற்கு முன்நின்று செய்கின்றாரேயன்றி அவரையும் காணவில்லையே; இதென்ன வேடிக்கை விவாகமாக விருக்கின்றதே. என்று பல பேர்கள் பல மாதிரியாகக் கூறிக்கொண்டு வைதேகியின் அழகைக் கண்டு வியப்பதுமாக விருந்தார்கள். மணியும் முறையே சென்று 12-30 ஆய்விட்டது. புரோகிதரும் தமது திறமையை நன்றாக இந்த பெரியவிடத்தில் தான் காட்டவேண்டுமென்ற எண்ணத்தோடு பட்டை பட்டையாக விபூதியை அணிந்து, ருத்திராக்ஷ மாலையணிந்து வழுக்கைத் தலையோடு பந்தலில் வேண்டிய சாமான்களை எல்லாம் தயாராக வைத்துவிட்டு உட்கார்ந்திருந்தார். மணியும் ஆய்விட்டது. இன்னும் நாயுடுவையும் காணவில்லை. அந்தப்பெண்ணின் பெற்றோரும் பாதபூஜை செய்துகொள்ள வரவில்லை; நேரமாய்விட்டதே. என்று மணப்பந்தலில் விவாகப்பெண்ணையும், பிள்ளையையும் உட்கார வைத்துவிட்டு எல்லோரும் நாயுடுவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அந்த சமயம் அத்தனை கும்பல்களும் யார் வந்தாலும் அவர்கள் தான்வைதேகியின் பெற்றோர்களோ என்றுபார்த்து ஏமாற்றமடைந்து விடுவார்கள். வைதேகியும் மணையில் உட்கார்ந்து கடைக் கண்ணால் தனது நாதனைக் கண்டு களியுற்றிருந்தும் இன்னும் நமது பெற்றோர் வரவில்லையே அவர்கள் யாரா யிருக்கக்கூடும்! ஒருகால் நம்மை ஏமாற்றுகின்றார்களோ என்ற எண்ணம் அவளுக்குத் தோன்றி மறைந்துகொண்டே இருந்தது. அந்த சமயம் அவ்விடத்தில் அத்தனை ஜனங்களையும் விலக்கிக்கொண்டு நாயுடுகாரு சிறித்த முகத்தோடு முன்னால் வர பின்னால் ஒரு பெரிய ஜமீந்தாரும் அவர் மனைவியும் அதிக ஆத்திரத்தோடு வேகமாக நடந்துவர பின்னால் அனேக ஸ்ரீகளும் புருஷர்களும் வந்தார்கள். முன்னால் வந்த ஜமீந்தாரைக் கண்டதும் அங்கிருந்த எல்லோரும் "ஆ! இவர் கொலையுண்டு இறந்து விட்டதாகச் சொல்லிய புருஷோத்தம ப்ரபுவல்லவா! இவர் எவ்விதம் பிழைத்தார்! ஆ! அவர் மனைவியையும் காணவில்லை என்று பேப்பரில் போட்டிருந்ததே! அந்தம்மையும் இப்போது எப்படி வந்தார்கள்!" என்று ஒரே பேச்சாகவும் வியப்பாகவும் கரகோஷம்செய்து அவர்களையே பார்த்தவண்ண மிருந்தார்கள். மணையில் மணமகளுக

அமர்ந்திருக்கும் ராமாம்ருதம் அவர்களைக் கண்டதும் திடுக்கிட்டவராய் "ஹா! இவர் கொலையுண்டு இறந்தவர் எவ்விதம் பிழைத்துவிட்டார்? அந்தம்மை எவ்விதம் வந்து சேர்ந்தார்கள்? அடடா! அவர்களுடைய வயிற்றெறிச்சலையும் கவனிக்காமல் என் விவாகத்திற்கு எவ்விதம் பொறுமையோடு வந்து சேர்ந்தார்கள்? ஆஹா! அம்ருதவல்லி! உன் ஒருத்தியையும் பறிகொடுத்துவிட்ட அவர்களுடைய பரிதாபத்தைக்கண்டு சகிக்க முடியவில்லையே. ஐயோ! என்னபொறுமை! அடடா! இவர்கள் அப்போது இருந்த நிலைமை என்ன? இப்போது இருக்கும் நிலைமை என்ன? இவர்கள் நாயுடுவின் பலவந்தத்திற்காக இங்கு விசனத்தையும் பாராமல் வந்திருக்கின்றார்கள்; நாம் முன்னால் எழுந்து வந்தனம் செய்துவிட்டு மறுவேலை பார்க்கவேண்டும்" என்று எண்ணி மணையைவிட்டு எழுந்தார். அதே நேரத்தில் ஜெமீந்தாரும் ஜெமீந்தாரிணியும் பந்தலை நோக்கி ஓடிவந்து மணையில் ஸ்ரீ மஹாலக்ஷ்மி போல உட்கார்ந்திருந்த வைதேகியை ஜெமீந்தாரிணியம்மாள் வாரி குழந்தைபோலத் தூக்கி எடுத்து இறுகத் தழுவிக்கட்டிக்கொண்டு கண்ணீர்பெருக நாத்தடுமாற "ஆ! என் ரத்தினமே! மறைய வளர்ந்த மாணிக்கமே! உன்னை 2 வருஷக் குழந்தையில் பறிகொடுத்துத் தவித்துத் தண்ணீராயுருகிக் கொண்டிருந்த என் வயிற்றில் பாலை வார்த்தாயா! என் கண்மணி! உன்னை மீண்டும் உயிரோடுகாணும்படியான பாக்யத்தை எமக்களித்த அந்த நாயுடுவாகிய வள்ளலுக்கு நான் எவ்விதம் நன்றி காட்டுவதென்று விளங்கவில்லையே. என் செல்வச் சீமாட்டியே! 12-30 மணி வரையிலும் எனக்கு இத்தகைய பாக்யம் வரும் என்று நான் கனவிலும் கருதவில்லையே. ஹா! எல்லாம் தெய்வச்செயலேயன்றி வேறில்லை என்று வைதேகியைப் பலதரம் முத்தமிட்டு தனது கண்ணால் பெருகும் ஆநந்தநீரால் வைதேகியை மஞ்சன மாட்டியதுபோல அவளது புடவை நனையும்படியாகக் கண்ணீரை யோடவிட்ட வண்ணம் "ஆ! என் கண்ணிரு கருமணிகளில் ஒன்றாகிய உன்னை பறிகொடுத்துத் திரும்பப் பெற்றேன். ஆ! என் அம்ருதவல்லி! உன்னை மறுமுறை காண்பேனா? நீ இருந்து இந்த அதிசயமான காட்சியைக்கண்டு எங்களோடு ஆநந்த மனுபவிக்க அதைக்கண்டு நான் களிக்கும் பாக்கியம் செய்யாத பாவியாகிவிட்டேனே. என் ஆருயிர் அம்ருதவல்லி! உனக்குக் கூடப் பிறந்தவர்கள் துணை யில்லையே என்று நீ வருந்திய நாளைக்குள் நீயே மாண்டு எம்மைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டாயே. இந்த சகோதரி உனக்கு இருப்பதைக் கண்டு களிக்கும் வரையில் உன்னை ஈசன் புவியில் வைக்கவில்லையே. என்கண்ணே! உன்னை இழந்த துக்கம் ஒரு பங்கிருக்க, உன் கண்ணாளனை விட்டுப்பிரிய எம்மனம் பட்டபாட்டை என்னால்கூற இயலவில்லையே. உனது மணாளனை என் மருமகனையே நான் மறுபடியும் மருமகனா யடையும் பாக்கியத்தைச் செய்த எனது அதிர்ஷ்டமே அதிர்

ஷ்டம்." என்று கூறியதை எல்லாம் கேட்ட அங்கிருந்த ஏனையோ ரும் வியப்பே வடிவமாய் மாறிப்போய் இதென்ன ஆச்சரியம்! புரு ஷோத்தமப் பிரபுவினுடைய பெண்ணு இவள்? முன் இறந்த அம்ருத வல்லியும் இவர்களது மகளல்லவா! அப்போது இவர்களுக்கு இன் னொரு பெண்ணிருந்ததாகவே தெரியவில்லையே. இந்தப் பெண் என் னவோ தாசிவீட்டுப் பெண்ணுக விருந்தவள். இவர்களுடைய பெண் ணுக மாறியது என்ன ஆச்சரியம்! அடடா! அந்தம்மையின் பரிதாப மும் ஆநந்தமும் ஒன்றுகூடி யிருக்கும் நிலைமையைக் காண மனம் உருகுகின்றதே. கஷ்டத்தின்மேல் கஷ்டம் வந்து கடைசியில் சுகம் வந்துற்றது பெரிதும் புகழத் தக்கது" என்று வியப்பாகக்கூறிய வண் ணம் பங்கஜவல்லி யருகில் வந்தார்கள். வைதேகி தன்னை திடீரென்று எதிர்பாராது ஓர் மாது கட்டித் தழுவிக் கூறிய வார்த்தைகளைக்கேட்டு இன்னதென்று கூறமுடியாத ஆநந்தத்தையடைந்து தன் தாயினிடத் தில் தன்னை மீறி வந்த வாஞ்சையால் தூண்டப்பட்டு, "ஆ! எனக்கு அன்னை என்று ஒருவரைக் காணப் பாக்யம் செய்தேனே" என்று கூறி தாயைத் தழுவிக்கொண்டாள். மேலும் எதுவும் கூற முடியாமல் அவள் தொண்டையை அடைக்க, கண்ணீர் பெருக அப்படியே நின்று விட்டாள். பார்வதியம்மாளும் கமலமும் இந்தக் காட்சியைக் கண்டதும் ஓடிவந்து பங்கஜவல்லியைக் கட்டி, "ஆ! பங்கஜவல்லியம்மாள்! இந்த காக்ஷியைக் காணஎனக்கு இன்னதென்று கூறயியலாத விதமான ஆநந்த ஊற்றுக்கிளம்பி கரைபுரண்டு ஓடுகின்றது. ஆஹா! எல்லாம் கடவு ளின் திருவருளன்றே! அம்ருதவல்லிக்குப் பிறகு நமக்கு உலகமே இல்லை என்று எண்ணி விரக்தியடைந்தவர்களை எவ்வளவோ கஷ் டங்களை எல்லாம் காட்டிப் பிறகு பெரும் புதையல்போல இவ்வித ஆநந்தத்தை அளித்த ஜகதீசனுக்கும் அதை முன்னிட்டுச் செய்த பேசும் ஈசனாகிய நாயுடுவிற்கும் நாம் என்னவிதமான கைம்மாறு செய் யப்போகிறோம் என்பதுதான் தெரியவில்லை! அடடா! என்ன மாயங் களை எல்லாம் ஈசன் செய்கின்றார்! எனக்கும் தங்களைப்போலவே வேறொரு சந்தோஷம் கூட சேர்ந்தது. 10 வருஷத்திற்குமுன்னுல் கப்பல் விபத்தில் இறந்துவிட்டதாகச் செய்தி கிடைத்த கமலத்தின் கணவர் மாதவ முதலியாரை நாயுடு கண்டு பிடித்துக்கொண்டு வந்து சேர்த்தார். அவளுடைய கவலையும் நீங்கிக் களிப்பு உண்டாயிற்று. நமது எல்லோருடைய குலத்திற்கும் குலதெய்வம் நாயுடுவேயன்றி வேறல்ல. தங்களுடைய முதலியார் பிழைத்த விவரம் ஆச்சரியத் திலும் ஆச்சரியமாயிருக்கின்றதே. தங்களுடைய விவரம் ஒன்றும் தெரியவில்லையே. நேற்றுவரையில் விசாரித்துக்கொண்டேதானிருந் தோம். ஒருவித தகவலும் தெரியவில்லை. இன்று கேஸ் விசாரிக் கப்போவதாகத் தெரிந்தது. இதற்குள் இவ்வளவு நல்ல சங்கதி கிடைத்துவிட்டதே. இதென்னமாயம்! எல்லாம் இறைவனருளன்றே!" என்று இன்னும் பேசிக்கொண்டே இருக்கையில், ஜெமீந்தார் புரு

ஷோத்தம பிரபு ராமாம்ருதத்தினருகில் வந்து தனது கரத்தால் அவரைத் தழுவிக்கொண்டு "ஆ! இவர் என் அம்ருதவல்லியை மணந்த மன்னாயிற்றே! நாயுடுகாரு! உம்முடைய பெருமையை நானென்னென்று கூறுவேன்? அப்பா அம்ருதம்! இந்த மஹா வீரரின் தீரத்தை எடுத்துக் கூறவே சாத்யமில்லை. இவர் கலிகாலத்து தெய்வமேயன்றி வேறல்ல. இவரால்தான் நான் ஒரு மனுஷ்யனாய் வெளியில் வந்தது." என்று கூறி ராமாம்ருதத்தின் கையைப் பிடித்து நாயுடுவின் கையில் கொடுத்து "நாயுடுகாரு! எமது குலவிளக்கை ஏற்றி வைத்த கோமானே! நான் சற்று நேரத்திற்கு முன்னால் இவ்விதமான காக்ஷிகளைக் காணப்போவதாய்க் கனவில்கூட எண்ணவில்லையே. அடுத்த க்ஷணத்தில் எனக்கு இத்தகைய ஆநந்தக்காக்ஷியையளித்த ஆவியே! நான் என்ன விதமாகத் தங்களைப்புகழ்ந்து பேசுவது என்பதையே தெரியவில்லை" என்று கூறி தமது மகளிருந்த திக்கை நோக்கிச் சென்று "ஆ! என் கலியைத் தீர்த்த கண்ணே! ஈசன் உன்னை என் வயிற்றில் பிறக்கச் செய்து என் கண்மறைய வளர்த்து விவாக தருணத்தில் காணும்படியான அருள் பாலித்திருந்தார் போலவிருக்கின்றது" என்று கூறி அவளை தமது கரத்தால் தடவிக் கொடுத்தார். இதற்குள் வைதேகி தன் தாய் தந்தை இருவருக்கும் நாயுடுவிற்கும் வந்தனம் செய்து நின்றாள். அப்போது அந்த மண்டபத்தின் காக்ஷியை விவரித்துக் கூற நம்மால் சாத்தியமேயன்று; ஊகித்தறிவதே நலம்.

அந்தசமயம் புரோகிதர் எழுந்து நாயுடுகாருவைக் கண்டு "ஐயா! முகூர்த்தவேளை தப்பிவிடுகின்றதே. பிறகு எல்லாம் பேசிக்கொள்ள சாவகாசமிருக்கின்றது. விவாகமாய்விடட்டும்" என்றார் அதே சமயம் அங்கு கூடியிருந்த பெரிய மனிதர்களெல்லோரும் நாயுடுவை சுற்றிக்கொண்டு "நாயுடுகாரு! ஆஹா! என்ன ஆச்சரியம்! முதலியார் பிழைத்த வரலாறும், அந்த அம்மாளை கண்டுபிடித்த வரலாறும், இந்தப்பெண்மணி அவர்களுடைய பெண்ணென்றுகண்டுபிடித்த விவரத்தையும் இன்னும் தாங்கள் கண்டுபிடித்த அரிய விஷயங்களையும் அறிய ஆவலாயிருக்கின்றோம்" என்று கூறினார்கள். அதற்கு நாயுடுகாரு எல்லா விவரத்தையும் தாமே கூறுவதாகவும் முகூர்த்த வேளை தப்பிவிடுகின்றது. அது நடந்தேறியபிறகு போஜனத்தை முடித்துக்கொண்டு எல்லா வரலாற்றையும் கூறுகின்றேன். அதுவரையில் தயவு செய்துபொறுமையோடிருந்து திருமன்றலை நடத்தி தம்பதிகளை ஆசீர்வதிக்கவேண்டுமாகக் கேட்டுக்கொள்கின்றேன்" என்று கூறியதைக் கேட்ட எல்லோரும் அதற்குச் சம்மதித்து அவரவரிடத்தில் அமர்ந்தார்கள். மணமகனையும் மணமகளையும் மணையில் உட்காரச் செய்து புரோகிதர் எழுந்து முதலியார் ஜாதிக்குரிய சடங்குகளை எல்லாம் செய்து, ஜெமீந்தாரும் ஜெமீந்தாரினியம்மாளும் பாதபூஜை செய்துகொண்டு, இன்னுமற்ற க்ரமப்படி நடக்கவேண்டிய சடங்குகளை எல்லாம் செய்து முடித்ததும்

நானுவிதமான வாத்யங்களும் மங்களகரமாக முழங்க சுமங்கலி கள் லக்ஷ்மி கல்யாணம் பாட மற்ற எல்லோரும் ஆசிகூற, ராமாம் ருதம் வைதேகியின் கழுத்தில் திருமங்கல்யதாரணம் செய்தார். அப்போது பந்தல்முற்றும் ஒரே ஜெயகோஷமே காகோஷமாக முழங் கியது. அதுபெரிதும் வியக்கத்தக்ககண் கொள்ளாகாக்ஷியாகவும் ஆநந்த மே மயமாகவுமிருந்தது. திருமன்றல் முடிந்த பின்னர் நடக்க வேண்டிய காரியங்களை எல்லாம் வெகு விமரிசையாக முடித்து மங்கள ஹாரத்தி எடுத்துப் பின்னர் அங்கு வந்திருந்த சகல மான ஜனங்களுக்கும் பை பையாக பணமும், சர்க்கரை, கற்கண்டு, பாதங்கொட்டை, தேங்காய், பழம், மஞ்சள், குங்குமம், சீப்பு, வெற் றிலை, பாக்கு, புஷ்பம், சந்தனம், பன்னீர், புடவை, ரவிக்கை, வே ஷ்டி, சித்தாடை, குட்டை, பாவாடை, சொக்காய், முதலிய சகல மான வஸ்துக்களும் முறையே வழங்கப்பட்டன. எல்லோரும் பெற் றுக்கொண்டு மனமாற வாழ்த்திவிட்டு அங்கு நடந்த அதிமாதுர்ய மான விருந்தில் எல்லோரும் பஞ்சபக்ஷ்ய பரமான்ன பலாதிகளு டனே சம்பிரமமாக உண்டு தாம்பூலந்தரித்துக்களித்து நாயுடுகாருவின் விரிவான ப்ரஸங்கத்தைக் கேட்க ஆவலே வடிவாய் எதிர் பார்த்திருந் தார்கள்.

மேற்பட்டகாரியங்களெல்லாம் முடிவு பெறுவதற்கு மாலை சுமார் நாலுமணி ஆயிற்று. அதற்குமேல் அந்த பங்களாவின் பெரிய ஹாலில் எல்லோரும் கூடினூர்கள். சர்வ ஜனங்களின் ஆவலைத் தணிக்க முன் வந்த நாயுடுகாரு சகலமான வரலாற்றையும் கூறத்தொடங்கினூர்.

நண்பர்களே! இப்போது நான் கண்டுபிடித்திருக்கும் சில அரிய சம்பவங்கள் நேரில் கண்டறிந்தவர்கள் வாயிலாகவே வருவது, நான் கூறுவதை விட சிலாக்கியமாகவும் விளக்கமாகவு மிருக்குமாகையால் அவரவர் சேதியை அவரவர்களேயே கூறும்படியாகச் சொல்கின்றேன். அதை எல்லோரும் ஆமோதிப்பீர்கள் என்று நம்புகிறேன்'' என்றூர்.

இதைக்கேட்ட ஜனங்கள் அவர் கூறியதை ஆமோதித்து மேலே விஷயங்களைக் கூறும்படிக்குச் சொன்னூர்கள். உடனே நாயுடுகாரு புரு ஷோத்தம ப்ரபுவை நோக்கி ''முதலியாரே! தங்கள் கொலை சம்பந்த மாய் நடந்த வரலாற்றைக்கூறும்'' என்றூர். உடனேமுதலியார் எழுந்து சர்வ ஜனங்களையும் கண்டு பணிவுடன் பேசத்தொடங்கி ஐயன்மீர்! இச்சென்மத்தில் எனக்குத் தெரிந்து பகைவர்களே கிடையாது. ஏதோநான் செய்த பூர்வஜென்ம கர்மவசத்தினுல் கஷ்டங்களை யனுபவிக்கிறேன். எனது இரு கண்களைப் போலவும் எனக்கு இரண்டு பெண்களை ஈசன் கொடுத்தார். அவர்களில் பெரியவ ளான அம்ருதவல்லியும் சிறியவளான ஜனகவல்லியும் வெகு செழு மையாய் வளர்ந்து வரும் நாளையில் எனது தங்கை மரண மடைந்து விட்டதால் எங்கள் வீட்டில் பெருத்த துக்கஸாகரத்தில் நாங்கள் மூழ்கி வருந்திக்கொண்டிருந்த சமயம்குழந்தைகளை நாங்களதிகமாய்

கவனிக்காமலிருந்தோம். அவ்வமயம் ஒரு நாள் சிறியவளான 2 வயது குழந்தையான ஜனகவல்லியை திடீரென்று காணமல் போய்விட்டது. நாங்கள் எவ்வளவோ ப்ரயாசைப்பட்டுத் தேடியும் குழந்தை யகப்பட வில்லை. போலீஸிலும் எழுதி வைத்தோம். அதற்கும் தகவல் தெரிய வில்லை. குளம், குட்டை, கிணறுகள் முற்றும் பார்த்ததில் எங்கும் கிடைக்கவில்லை. பின்னர் குறி முதலியது விசாரித்ததில் சரியானபடி யாரும் சொல்லவில்லை. நாங்கள் விசனத்தோடு இன்னும் ஆன முயற்சிகளைச் செய்தும் பயனற்றதாய்விட்டது. பிறகு நாங்கள் அம்ருதவல்லியின் முகத்திலைலேயே ஆறுதலடைந்து அவளையே நம்பியிருந்தோம். அவளுக்கு யுக்தவயது வந்ததும் அவளை செஞ்சிகோட்டை ஜெமீந்தாருக்கு விவாகம்செய்து கொடுத் தோம். சிறியபெண் காணமல்போனபோது அம்ருதவல்லிக்குவயது 4 ஆகையால் அவள் அந்தக் குழந்தையைக் காணமல் போனது பற்றி ஏங்க வாரம்பித்தாள். அவளுக்கு அந்த விசனம் தெரியாதிருக்கும் படிக்கு நாங்கள் அந்த வார்த்தையையே எடுக்காமல் மனதிற்குள் ளேயே விசனித்துக்கொண்டு வெளிக்கு காட்டிக்கொள்ளாமல் நடந்து கொண்டு அவளை வளர்த்து கடைசியில் ஒரு க்ஷணத்தில் எமலோக மனுப்பிவிட்டோம்'' என்று அவர் கூறும்போது அவர் கண்ணில் நீர் தாரைதாரையாக வழிந்தது. இதைக்கண்ட எல்லோரும் மனம்வருந்தி னார்கள். தூரவிருந்து இந்த வரலாற்றைக் கேட்டுக் கொண்டிருந்த வைதேகிக்கும் தன்னையறியாமல் துக்கம்வந்துவிட்டது. "ஆஹா! நான் அம்ருதவல்லி என்பவளை யாரோ என்று எண்ணினேனே. இன்று சாலையில் எல்லோரும் பேசியதிலிருந்து எனக்கு நன்ருக தகவல் விளங்காமலிருந்ததை இப்போது என்தந்தையார்நிவர்த்தி செய்துவிட் டார். அந்தோ! எனதரிய சகோதரியா அம்ருதவல்லி!'' என்றுஎண்ணி னள். மீண்டும் முதலியார் சற்று சமாளித்துக்கொண்டு பேசத்தொடங்கி னர். "எங்களுக்கு இந்தவிசனம் தாங்கமாட்டாமல் எங்கள் ஜமீனை எல் லாம் குமாஸ்தாவிடம் விட்டுவிட்டு நாங்கள் தேசயாத்திரை செய்யக் கிளம்பிவிட்டோம். அநேக ஊர்களில்சென்று ஸ்வாமி தரிசனம்செய்து விட்டுப் பின்னர் இந்தப் பட்டினத்தை யடைந்து திருவல்லிக்கேணி யிலுள்ள ஸ்ரீ பார்த்தஸாரதி, வேதவல்லி முதலியவர்களை தரி சித்தபோது எங்களுக்கு இந்த ஊரிலேயே இருக்கவேண்டுமென்று தோன்றியபடியால் நாங்கள் ஒரு பங்களாவை வாங்கிக்கொண்டு வசித்து பெருமாளை தரிசித்துக் கொண்டு வந்தோம். இவ் விதமே என் காலம் சென்றுகொண்டு வருகையில் இப்போது எனது கொலை நடந்ததற்கு முன்னல் ஒருநாள் ஒரு கடிதத்தை எனது பங் களாவின் தபால் பெட்டியில் தலை முத்திரையொன்று மில்லாமல் வெறுமை போட்டிருந்ததை எடுத்துப்படித்ததில் எனக்கு அதன் பொ ருளே விளங்கவில்லை. இது யாரோ வெறுமை வேடிக்கைக்குப்போட்

டிருப்பார்களென்று எண்ணி நான் அதை லக்ஷியம் செய்யாமல் பெட்டியில் வைத்துவிட்டேன். பிறகு கொலை நடந்த அன்றும் அம்மாதிரியான ஒரு கடிதம் என் தபால் பெட்டியில் போட்டிருந்தது. அதையும் பார்த்தபோது இதையாரோ வேடிக்கைக்குச் செய்ததாக எண்ணக்கூடாது. இதைப்பார்த்தால் குழந்தைகள்கிறுக்குவது போலவிருக்கிறது; இதை நம்முடைய தபால் பெட்டியில் யார் போடுவார்கள். அன்று வந்ததைவிளையாட்டு என்று எண்ணினேன். அதைப்போலமறுபடியும் வந்திருப்பதால் இதுஎதுவானாலும்சரி; இதைப்போலீஸாரிடம் காட்டிவிடுவோம் என்று நான் தீர்மானித்துக் கொண்டேன். அன்று ஏதோ வீட்டில் வேலையிருந்தபடியால் அதை மறுநாள் பார்த்துக்கொள்வோம் என்று எண்ணியிருந்தேன். அந்தக்கடிதம் வந்திருப்பது என்னைத்தவிர வேறுயாருக்கும் தெரியாது. அன்று நான் வழக்கம்போல எனது விடுதியில் படுத்துக்கொண்டேன். வீட்டில் என் சம்சாரம் இல்லை. அவளும் என் மைத்துனரும் ஊருக்குச் சென்றிருந்தார்கள். நான் படுத்த சற்றுநேரம் வரையில் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. நான் புரண்டு புரண்டு படுத்திருந்த சமயம் என் வேலையாட்களில் ஒருவன் வந்து—'இதற்கு முன் ஒரு காரியத்தைச் சரியாக செய்யாமலிருந்த குற்றத்திற்கு நான் ஒருவனை வேலையிலிருந்து விலக்கிவிட்டேன். அவனுடைய தகப்பன் என்னை நேரில் காணும்பொருட்டு வரலாமா என்று கேட்டு அனுப்பியிருப்பதாக—என்னிடம் கூறினான். நான் யோசித்து அவனை வரும்படிக்குச் கூறிவிட்டுப் படுத்துக்கொண்டேன். அப்போதுமணி 11 ஆயிருக்குமென்று நினைக்கின்றேன். நான் நெடுநேரம் விழித்ததால் இனி அந்த ஆள் வரமாட்டான்; நாளை தான் வருவான் என்று நான் எண்ணிப் படுத்திருந்த சமயம் எனது அறைக் கதவு திறக்கப்பட்டது. அதை மறுபடி சாத்திக்கொண்டு நேரே என் கட்டிலருகில் ஒரு தடித்த மனிதன் வந்து தனது கையில் வைத்திருந்த கத்தியை ஓங்கிக்கொண்டு நான் தூங்குவதாக எண்ணி குத்த முயன்றான். அதே சமயம் நான் கண்ணை விழித்திருந்தேனாதலால் எனக்கு இந்த எதிர்பாரா சம்பவத்தைக் கண்டதும் என் குடல் நடுங்கிவிட்டது. நான் எவ்விதமாகிலும் தப்பித்துக்கொண்டு மறையவேண்டுமென்ற எண்ணத்தினாலும் அந்தவிடத்தில் விளக்கில்லாமல் இருட்டாயிருந்தபடியாலும் நான் மெல்ல அவன் கை என்மேல் படுவதற்குள் கட்டிலிலிருந்து உருண்டு கீழே விழுந்து சரேலென்று அங்கு வரிசையாக வைக்கப்பட்டிருந்த எனது பீரோக்களின் மறைவில்போய் அங்கு எவருக்கும் தெரியாமலிருந்த ரகசிய அறையில் நான் புகுந்து கொண்டேன். பிறகு என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியவில்லை. நான் அங்குசென்று சற்றுநேரம் கழித்து மறுபடி வெளியில் வந்து என்ன நடந்திருக்கின்றது என்பதைப் பார்க்கலாமென வெளியில் வந்தேன். அப்போது நிசப்தமாகவும் விளக்கே இல்லாமலுமிருந்தது. தாராளமாய் வெளியில் வருவதற்கு'எனக்குப் பயமாகவிருந்தது.

நமக்குப் பகைவரே இந்த உலகத்திலில்லையே. அங்ஙனமிருக்க இவன் எதற்காக நம்மைக் கொலை செய்ய வரவேண்டும். ஒரு காரணமும் தெரியவில்லையே. ஒருக்கால் இவ்விடத்திலேயே எங்காவது பதுங்கிக்கொண்டு நம்மை வெளியில் வரும் சமயம் பார்த்து மறுபடி கொலை செய்ய வருவானோ என்று எண்ணி மறுபடியும் எது எப்படியிருந்தாலும் வெளியில்சென்று பார்ப்பதேசரிஎன்று தீர்மானித்துக்கொண்டு மெல்ல பீரோவைவிட்டு வெளியில் வந்தேன். விளக்கை ஏற்றாமல் மெல்லநடந்து வருகையில் என்காலில் சில்லென்று ஏதோ தட்டியது. உடனே ஆனது ஆகட்டுமென எண்ணி விளக்கை ஏற்றினேன். ஆகா! விளக்கை ஏற்றிப் பார்த்தால், கீழே ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதைக் கண்ட என்னுயிரே கிளம்பிவிட்டது. ஐயோ! என்னுயிர் துடித்தவண்ணம் அருகில் சென்று பார்க்க, அது என் வேலைக்காரனுடைய தகப்பனாகவிருக்கக் கண்டதும் எனக்குண்டான வருத்தமும் மனக்கொதிப்பும் அளவிட்டுச் சொல்லமுடியாமல் போய்விட்டது. நான் அவனை உற்று நோக்கி, "ஐயோ! என் பொருட்டாக நீ மாண்டாயோ எனக்கு நீ இனி வருவாய் என்பது தெரிந்திருந்தால் நான் அவ்விதம் ஒளிந்து கொள்ளாமல்வெளியிலேயே சென்றிருப்பேனே. அப்பா! முனியாண்டி! நான் இந்த பாபத்தை எவ்விதம் தீர்ப்பேன்? எந்தச் சண்டாளன் இவ்விதம் செய்தானோ தெரியவில்லையே" என்றுகண்ணீர்விட்டுக்கலங்கி பின்னர் சற்று யோசித்தேன். அதாவது நாம் இப்போது வெளியில் வந்து போலீஸாருக்குத் தெரிவித்துவிடுவோம் என்றால், குற்றவாளி யார் என்பது நமக்குத் தெரியவில்லையே. மேலும் நம்முடைய அறையில் இவனைக் கொலை செய்யப்பட்டிருப்பதால் ஒருக்கால் போலீஸார் இவனை நானே கொலை செய்துவிட்டதாக கேஸைஜோடித்தாலும் ஜோடித்துவிடலாம். மேலும் இதற்கு சாக்ஷி யாரும் இல்லை. இவனுடைய பிள்ளையை நான் வேலையிலிருந்து நீக்கி இருக்கின்றேன். இவைகளை எல்லாம் வித்தியாசமாக அர்த்தம் செய்து நம்முடைய தலைக்கே தீம்பு வைத்துவிட்டால் என்ன செய்வது? இத்தனை நாள் எவ்வளவோ கண்ணியமாய்ப் பிழைத்துவிட்டுக் கடைசியில் அநியாயமாய்க் குற்றவாளி என்று பெயர் படைத்து தூக்கு மரத்தில் சாவதா? எப்படியும் இவன் என்னவோ இறந்துவிட்டான். இனி பிழைக்கப்போவதில்லை. மேலும் கொலை செய்ய வந்தவன் இவனை நான் என்றே எண்ணிக் கொலை செய்திருக்கவேண்டும். எப்படியெனில் நான் கட்டிலிலிருந்து புரண்டு விழுந்ததை அவன் கவனித்திருப்பான். நான் பீரோவின் மறைவில் மறைந்ததை அறியாமலிருந்திருப்பான். அதே சமயம் இந்த வேலைக்காரன் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்திருப்பான் அதைக் கண்ட அவன் நான்தான் வெளியில் போய் வந்ததாக எண்ணி உடனே

இவனைக் கொலை செய்திருக்கவேண்டும் என்று நான் சந்தர்ப்பங்களைக் கூட்டி யோசித்துக்கொண்டேன். அவ்வளவு ஆத்திரத்தோடு என்னைக்கொலைசெய்வதற்கு வந்து எனக்குப் பதிலாக வேறொருவனைக் கொலை செய்துவிட்டுப் போனவன் மறுபடி நான் உயிரோடிருப்பது தெரிந்தால் கட்டாயம் என்னையும் கொலை செய்தே தீருவான். அவன் யாரோ புது ஆசாமியாக விருந்தான். இவனைக் கொலை செய்தது போதாமல் என்னையும் கொலை செய்து ஆசாமி அகப்படாமலிருந்தால் என்ன செய்வார்கள்?" என்று வெகுநேரம் யோசித்துக் கடைசியில் நான் ஓர் தீர்மானம் செய்துகொண்டேன். அதாவது இறந்துவிட்டவனை நானென்றே ஜனங்கள் எண்ணும்படியாகச் செய்துவிட்டு இந்தக் கேஸில் யாரை குற்றவாளியாகக் கண்டுபிடித்துத் தண்டனை செய்கின்றார்களோ அவனை நாம் மாறுவேஷத்தோடு சென்று பார்த்து அவனாக விருந்தால் சரி. வேறு யாராகவிருந்தால் அனியாயமாய் மரணதண்டனை எற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதுவரையில் நாம் இந்த அறையிலேயே ஒளித்துக்கொண்டு மேலாக வேண்டியதைச் செய்ய வேண்டும் என்று முடிவு செய்துகொண்டு நான் என்னுடைய உடை, நகைகள் முதலிய எல்லாவற்றையும் அந்த சவத்திற்கு அணிவித்து அதைத்தூக்கி என் கட்டிலில் கிடத்திவிட்டு, என்னிடமிருந்த அக்னித் திராவகத்தை நான் அவன் முகம் அடையாளம் தெரியாமலிருக்கும்பொருட்டு முகத்தில் கொட்டிவிட்டேன். பிறகு நான் வெளியில் சென்றுவிட்டால் அடிக்கடி இங்கு வருவதற்கு முடியாது. மேலும் என்னை வெளியில் யாராவது கண்டுவிட்டால் காரியம் கெட்டுவிடும் என்று யோசித்து நான் அந்த ரகஸிய அறையிலேயே இருக்கத் தீர்மானித்தேன். அவ்வாறே அவ்விடத்திற்குப் போய் விட்டேன். உடனே பொழுதும் விடிந்தது. நான் ரகஸிய அறையிலிருந்தபடியால் எனக்கு அன்று எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. அன்று இரவும் நான் மெல்ல வெளியில்வந்து பீரோவின் இடுக்கிலிருந்தே எட்டிப் பார்த்தபோது, சவத்தினருகில் என்மனைவி இன்னும் அநேக ஜனங்களிருந்தபடியால் எனக்கு அதற்குமேல் செல்ல முடியாமல் போய்விட்டது. நான் அன்று முற்றிலும் பட்டினியாகவே கிடந்தேன். மறுபடி அறைக்குள் போய்விட்டேன். அன்று இரவுகழிய பொழுது புலர்ந்ததும் புலராததுமாயிருக்கும் தருணம் ராஜாராம் நாயுடுகாரு திடீரென்று என்னுடைய ரகஸிய அறைக்குள் தோன்றினர். அந்தோ! அவரைக்கண்ட என்னுடல் திடீரென்று நடுங்கியது. எவருக்கும் தெரியாத இந்த அறையில் இவர் எப்படி வந்தார் என்பது எனக்கு வியப்பிலும் வியப்பாய்விட்டது. நாயுடுகாருவை அப்போது எனக்குத் தெரியாதாகையால் அன்னிய மனிதர் எவ்விதம் வந்தார்? என்று நடுங்கிய சமயம் நாயுடுகாரு என்னை நோக்கி சிரித்த முகத்தோடு பேசத்தொடங்கி, "ஐயா! முதலியாரே! உம்முடைய

சவத்தைச் சோதனைசெய்ய நான் வந்தேன். சோதனை செய்தும் விட்டேன். உண்மையில் சவமாகக் கிடக்கும் மனிதர் தாங்களல்ல என்பதை நான் இரவே அறிந்தேன். ஆதலால் தான் காலையில் வருகின்றேன் என்று கூறிச் சென்றேன். நான் இப்போது சற்று முன் வந்ததும் எல்லோரையும் வெளி கிளப்பிவிட்டு சவத்தை சில விதத்தில் பரீக்ஷித்து இதோ இந்த அடையாளம் கண்டு பிடித்து வந்தேன் பாருங்கள்'' என்று கூறி என்னிடம் ஓர் கண்ணாடியைக் காட்டினார். அதை நான் பார்த்ததும், எனக்குண்டான ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அந்த மனிதர் அப்போதும் உண்மையில் யார் என்பதைத் தெரியாமல் நான் விழித்து அந்த உத்தமரை யார் என்று கேட்டதில் அவர் தமது பெயர், ஊர் முதலிய எல்லாவற்றையும் கூறினார். நான் அப்படியே இன்னதென்று விவவிரிக்க இயலாத விதமான ஆநந்தத்தை அடைந்து அவருக்கு வந்தனம்செய்து மீண்டும் கண்ணாடியை உற்றுக் கவனித்தபோது அதில் கையில் கத்தியைப் பிடித்தபடியே என்னை அன்று கொல்ல வந்த மனிதன் நிற்கும் புகைப்படம் அப்போதே எடுத்துக் கண்ணாடியிலேயே இருப்பதைக் கண்டதும் என்னையே நான் மறந்து "ஆஹா! இந்த ஆச்சரியத்தைக் கண்டு பிடித்த தங்களுடைய பெருமையை நான்என்னென்று கூறுவேன்? இந்த மனிதனைத் தாங்கள்எவ்விதம்கண்டுபிடித்து படமெடுத்தீர்கள்'' என்று நான்கேட்டதற்கு அவர் அந்த வரலாற்றைத் தெரிவித்தார். அதை மீண்டும் அவரே தெரிவிப்பார். அதற்குமேல் நான் இனி வெளியே வந்துவிடலாமா என்று கேட்டதற்கு அன்னவர் "தாங்கள் இன்னும் சிலதினம் அதாவது நான்சொல்கின்ற வரையில் இவ்விடத்திலேயேஇருக்கவேண்டும். இந்தஆசாமியை நேரில் கண்டு பிடித்துக் கொண்டு வந்து கூண்டில் நிறுத்துகிறபரியந்தம் தாங்கள் மறைந்தே இருக்கவேண்டும். வெளியில் வந்து விட்டால் மறுபடி கொல்ல முயலுவான். தங்களுக்கும் அவனுக்கும் பழக்கமே இல்லாமலிருக்கையில் என்ன காரணத்தினால் கொலை செய்ய வந்தான் என்ற விவரத்தைத்தெரிந்துகொண்டு தங்களுக்குத் தெரிவிக்கின்றேன். அதுவரையில் என்னுடைய ஆள் ஒருவரை இங்கு அனுப்பித் தங்கள் உறவினர்போல நடந்து கொள்ளும்படிக்குச் சொல்கின்றேன். அவரால் உங்களுக்கு வேண்டிய ஆகாரம் முதலிய எல்லா விஷயத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள். மேலும் இன்னொன்று. தங்களுக்காக அந்த ஆசாமி துர்மரணமடைந்ததால் அவனுக்குக் கர்மக்ரியைகள் தங்களுக்கு நடப்பது போல நடக்கட்டும். ஆனால் தங்கள் தர்ம பத்தினி மங்கலியம் இழக்கநேரிடாமல் தாங்கள் உபாயமாய் அந்த அம்மையை இன்னும் இரண்டு மூன்று நாளில் ஒருவரும் அறியாதபடி இந்த ரகஸிய இடத்திலேயே கொண்டு வைத்துக்கொள்ளுங்கள். தாங்கள் நன்றாயிருக்கும்போது அந்தம்மைக்கு அந்தகதிவேண்டாம். மேலும் அவர்

கள் வெகு சோகத்தினுல் மூர்ச்சையடைந்திருக்கின்றூர்கள். ஆதலால் அவர்களுக்கு தங்களைக் கண்டாலே தெளிந்து விடும். அவ்விதமே செய்யுங்கள். கூடிய சீக்கிரம் எல்லாச்செய்திகளையும் தங்களுக்கு விளக்கமாய்க் கூறுகின்றேன்'' என்று கூறியதைக் கேட்டு நானும் அவ்வாறே செய்வதாக ஒத்துக்கொண்டு அவருக்கு வந்தனம்செய்து உபசார வார்த்தைகள் கூறினேன். பிறகு அவர் போய்விட்டார். அப்புறம் அவருடைய ஆள் ஒருவர் என்னுடைய உறவினர்போலவே துக்கம் விசாரிக்க வருவதுபோல வந்துவிட்டார். எனக்கு யாருமறியாதபடி உணவு முதலியவைகளைக் கொடுத்து உதவி புரிந்தார். என் பத்தினியை நான் எடுத்துக்கொண்டு போவதற்கு சமயம் பார்த்துக்கொண்டே இருந்தேன். அவளருகில் சதா மனிதர்களிருந்தபடியால் சீக்கிரம் அவளை எடுத்துவர முடியாமல் போய்விட்டது. பிறகு ஒரு நாள் இரவு அவள் மாத்திரம் தனியாக படுக்கையாய்ப் படுத்திருப்பதை யறிந்த நான் அவளை என்னிருப்பிடத்திற்குக் கொண்டு வைத்துக்கொண்டு என்னிடமிருந்த பாலை வாயில் வார்த்து என் குரலைக் காட்டிப்பேசி அவள் மூர்ச்சையைத் தெளியச்செய்து அவளிடம் உள் மர்மங்களை எல்லாம்கூறி என்னிடமே வைத்துக்கொண்டிருந்தேன். இன்று காலை நாயுடு என்னிருப்பிடம் வந்து “இனி பகிரங்கமாய் வெளியில் வரலாம். உங்களுக்கு முக்கியமான ஓர் சந்தோஷச் செய்திகொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் முன்னல் வெளியில் வந்து ரகஸியமாகவே ஸ்நானம் செய்து ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு என்னேடுகூட வாருங்கள்'' என்று கூறினர். நான் ப்ரமித்து ஆச்சரியமடைந்து அவ்வாறே கூட வந்தேன். கோர்ட்டிற்கு அழைத்துச் சென்றூர். என்னுடைய வரலாற்றை எல்லாம் தெரிவித்தேன். பின்னர் மாணிக்க முதலியார் விடுவிக்கப்பட்டார். கேஸும்முடிந்தது. அந்த விவரம் நாயுடுகாரு கூறுவார். நான் நேரே இங்குவந்து சேர்ந்து இந்தக் கண்கொள்ளாக் காக்ஷியையடைந்தேன். மற்ற விவரத்தை நானுமறிய ஆவலாயிருக்கின்றேன்'' என்று கூறி முடித்ததைக்கேட்ட ஜனங்கள் அடங்கா மகிழ்ச்சியையும், ஆச்சரியத்தையுமடைந்து “அடடா! பங்கஜவல்லியைக் காணுமல் போனதுபற்றி என்னென்னவோ எண்ணமெல்லாம் எண்ணி பலமாதிரியான யோசனைசெய்து குழம்பிக்கொண்டிருந்தோமே! கடைசியில் இவ்விதமாகவாமுடிந்தது. ஆஹா! என்ன ஆச்சரியம். நாயுடுகாருவின் சாமர்த்தியத்தை என்னவென்று கூறமுடியும்'' என்றுபலவாருக பேசி, நாயுடுவை நோக்கி, “பெருமை பொருந்திய நாயுடுகாரு! இன்னும் விவரங்களை அறிய ஆவலாயிருக்கின்ருேம். இந்தப் பெண் மணியை இவர்களுடைய மகள்தானென எவ்விதம் கண்டுபிடித்தீர்கள்? அந்தக் கொலையாளியை எவ்விதம் கண்டுபிடித்தீர்கள்?'' என்று கேட்க நாயுடுகாரு சிரித்த முகத்தோடு எழுந்து நின்று “இதோ சொல்லுகின்றேன். தங்கள் யார் யாருக்கு என்ன சந்தேகம் தோன்றுகின்

றதோ அதை எல்லாம் என்னைக் கேட்டால் எனக்குத் தெரிந்தவரை யில் கூறத் தயாராகவிருக்கின்றேன்" என்று கூறி பேசத்தொடங் கினர்.

அறிவிற் சிறந்த பெரியீர்! அன்புமிக்க சோதரர்காள்! அடியேன் இச்சென்மம் எடுத்துள்ளது பிறருக்கு உழைப்பதற் காகவேயன்றி வேறல்ல. சில நாளைக்குமுன் நாடகக் கொட்டகையில் ஒரு பெரிய கொள்ளை நடந்ததை எல்லோரும் பேப்பர் மூலமாய் அறிந்திருக்கலாம். அதன் சொந்தக்காரர் (இதோ இவர்) எனக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்து அவர்களுடைய புகைப் படத்தையும் கொடுத்திருந்தார். அந்தப் படத்தைப் பெற்றுக் கொண்டு வந்ததும் வேறொரு காரியமாய் சென்றிருந்த சமயம் என்னை டெலிபோனில் அழைத்ததாக ஆள் வந்து கூறியதும் நான் அன் றிரவே கொலை நடந்த விடத்திற்குச் சென்றேன். போலீஸார் நிறைந்திருக்க, பிணத்தருகில் நான் சென்று அவர்களறியாதபடி கூர் மையாய்க் கவனித்தேன். அப்போது எனக்கு சில சந்தேகங்கள் உண்டாயின. அதாவது சவத்தின் மேலணிந்திருந்த நகைகள், உடை முதலியவற்றை உற்று நோக்கினேன். அந்த உடை அந்தமனிதனுக்கு அளவு சரியாக விருந்ததென்றாலும் அதில் சில விடங்களில் ரத்தம் படிந்த விரலின் அடையாளம் தெரிந்தது. மேலும் கொலை செய்திருப்பதென்னவோ கத்தி யால் குத்தியிருக்கின்றது. கத்தியால் குத்தியபோது சொக் காயையும் சேர்த்துத் தானே குத்தியிருக்கவேண்டும்? சொக்காயை விலக்கிவிட்டு மாரில் மாத்திரம் ஈட்டி எவ்விதம் பாய்ந்திருக்கும். சொக்காயை விலக்குகின்ற வரையில் அந்த மனிதன் சும்மா இருப் பானா? ஆகையால் இந்த சொக்காய் கொலை செய்தபிறகே அணியப் பெற்றிருக்கவேண்டும். மேலும் அந்த சொக்காயில் கை விரல் ரத்தம் தோய்ந்துபட்டிருக்க வேண்டிய காரணம் யாது? மேலும் காதில் அணிந்திருந்த கடுக்கன் பாந்தமில்லாமலும் பலவந்தமாய்க் குத்தி அமுக்கப்பட்டிருப்பது போலவும் விரைப்பாகவே இருந்தது. தினம் காதோடு போட்டுக் கொண்டிருக்கும் கடுக்கன் தளர்ந்து படிந்திருக் காதா? முகத்தைக் கவனித்தபோது அந்த முகம் எந்த ஆயுதத்தினலேயும் குத்தப்பட்டதல்ல. அது த்ராவகத்தைக் கொண்டே ரணமாக்கிவைக்கப் பட்டிருக்கின்றது என்பதை யூகித்துக் கொண்டேன். இவ்விதமே இன்னும் பலவித சந்தேகங்கள் என் மனத்தில் உண்டானபடியால் நான் அவை களை வெளியில் காட்டிக்கொள்ளாமல் சவத்தினருகில்சென்று ஆராய் ச்சிசெய்தே பார்க்கவேண்டும். இந்த சவம் ஜமீந்தாருடையதல்லவென் பதை மாத்திரம் நிச்சயித்துக்கொண்டு போய்விட்டேன். பிறகு

றுநாள் உதயத்திற்கே அவ்விடம் சென்று மற்ற எல்லோரையும் வெளி கிளப்பிவிட்டு நான் தனியாக சவத்தினிடத்தில் சோதனை செய்தபோது அந்தக்கடுக்கனை பலவந்தமாக அணிவித்திருப்பது நிஜமென்பதை யறிந்துகொண்டேன். நிற்க, சென்ற சில நாளைக்குமுன் பேப்பரில் வெளிதேசத்தில் ஒரு பெரிய டாக்டர் ஓர் கொலை செய்யப்பட்ட பிணத்தை சோதனையிட்ட சமயம் அவர் புத்தி விசாலத்தால், மனிதன் காணும் ஒவ்வொரு உருவமும் அவனது கண்ணில் பிரதிபிம்பித்து மற்றொன்று காணப்பட்டதும் மறைந்துவிடுகின்றது. ஒருவன் எதிரிலேயே கொலை செய்யப்பட்டால் அந்த கொலை செய்தவனுடைய உருவமும் கண்ணில் பிரதிபிம்பித்து உடனே உயிர்போய் விடுவதனால் அது அப்படியே தானே இருக்கவேண்டும்; என்று யோசித்து சவத்தின் கண்ணிலுள்ள பிரதிபிம்பத்தை சில த்ராவகம், இயந்திரம் முதலியவற்றின் உதவியைக்கொண்டு புகைப்படமெடுத்து பார்த்ததில் குற்றவாளி அந்தக் கொலையுண்ட சவம் உயிர்துறக்கும் சமயம் கண்ணால் பார்த்தபோது எவ்விதம் நின்றானோ அதேபோல கையில் கத்தியைப் பிடித்து மற்றொரு கையில் இவனைக் கெட்டியாகப் பிடித்திருப்பது அப்படியே தெரிந்ததால் உண்மையான குற்றவாளியைக் கண்டு பிடித்துத் தண்டித்து விட்டதாக செய்தி வந்ததை நான் படித்திருந்தேன். ஆகையால் நானும் அவ்வாறே அந்தக் கண்ணை படம் பிடித்தேன். அதில் முன்பு பேப்பரில் கண்டதுபோலவே கத்தியைக் கையில் வைத்துக்கொண்டபடியே நிற்பது நன்றாய் விழுந்துவிட்டதைக் கண்டு நானே ஆச்சரியப்பட்டேன். அந்த கத்தியை வைத்திருக்கும் மனிதனை நான் இதற்குமுன்னால் பார்த்திருக்கிறேன். அவன் குணம், தொழில் முதலியதைப்பற்றியும் கேள்விப் பட்டிருக்கின்றேன். இந்த மனிதன் இவரைக் கொல்லவேண்டிய காரணம் யாதோ தெரியவில்லையே. நமக்கு வேண்டியது குற்றவாளி கிடைத்துவிட்டான். இனி சவத்தினிடம் வேலையில்லை என்று நான் அந்த அறையின் பாங்கைக் கவனிக்கலானேன், நான் கீழே கவனித்தபோது அந்த அறையில் ரத்தத்தை மிதித்து அப்படியே நடந்த காலடி தெரிந்தது. அது ஒருக்கால் கொலை செய்தவனுடைய காலடியாகவிருக்குமோவென்று கவனித்தேன். அந்த அடி வெளிபக்கம் செல்லாமல் உள்பக்கமே சிறுகசிறுக சென்று அடிபாகத்தில் ரத்தம் குறைந்து சிறிது விரல்பக்கமும், துளி துளியாகவும் காணப்பட்ட விடத்தைப் பிடித்துக்கொண்டே நான் சென்றேன். அந்த அடிகள் அவ்விடத்திலுள்ள பீரோவின் மறைவில் சென்றிருந்தன. அங்கு சென்று

பார்க்க அதோடு நின்றிருந்தன. பிறகு எனக்கு பெரிய சந்தேகமாய் விட்டது. இந்த அடிகள் இவ்விடத்தோடு நின்றிருப்பதால் கொலை செய்தவன் இங்குவந்துபோக நியாயமில்லை. மேலும் சாக்ஷிகள் யாரும் அவனைக் கண்டதாகக் கூறவில்லை. அவ்விதமிருக்க அவன் ஒளிந்து கொள்ளவேண்டிய காரணம் சிறிதுமில்லை ஆகையால் அந்தக் காலடி யுள்ள இடத்தில் ஏதோ ரகஸியமிருக்கவேண்டும் என்று நான் யூகித்துக்கொண்டு அந்த விடத்தை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினேன். அங்கே ஒரு பெரிய நிலைக்கண்ணாடி மாட்டியிருப்பதைக் கண்டேன். பீரோக்கள் நிறைந்துள்ள விடத்தில் இத்தனை பெரிய கண்ணாடி மாட்டியிருக்கின்றதற்குக் காரணம் ஏதோ இருக்கவேண்டும் என்று தீரமாக எண்ணி நான் அதனை முற்றிலும் சுற்றிப் பார்த்து அதன் அமைப் பெல்லாம் ஆராய்ச்சி செய்ததில் அந்தக் கண்ணாடி சுவற்றோடு பதிந்தமாதிரியிருப்பதை யறிந்து அதை நாற்புறமும் பார்த்துக் கொண்டே வருகையில் அதனடி பாகத்தில் எலக்ட்ரிக் விளக்கின் பொத்தானைப்போல ஒன்று இருக்கக் கண்டு அதனை அமுக்கினேன். உடனே அந்த கண்ணாடிமேலே தூக்கிக்கொண்டு வழி ஏற்பட்டதைக் கண்டு வியப்புற்று உள்ளேசென்றேன். அங்கு இந்த ஜெமீந்தார் உட்கார்ந்திருந்தார். உடனே இவரே கதவை மூடிவிட்டார். பிறகு நான் அங்கு நடந்தவிஷயங்களை எல்லாம் பேசி முடித்துக்கொண்டு இந்தப் புகைப்படத்தையும் அவரிடம் காட்டிவிட்டு நான் வெளியில் வந்துவிட்டேன். கொலையுண்டு இறந்த அந்த மனிதன் இவருடைய வேலைக்காரனாயிருந்தவனுடைய தந்தையென்று நான் அவர் மூலமாக அறிந்துகொண்டே னாகலால் நேராக அந்த மனிதன் வீட்டிற்குச் சென்று அவன் மனைவியைக் கண்டு உன் புருஷனெங்கே என்று விசாரித்ததில் அவள் தனக்குத் தெரியாதென்றும் அவன் இரண்டு நாளைக்கு முன் எங்கேயோ அயலூருக்குச் செல்வதாகக் கூறியதாகவும் இன்னும் வரவில்லை என்றும் சொன்னாள். உடனே யோசித்து இவன் அதை அவளிடம் சொல்லிக் கொள்ளாமலேயே அவமானத்தால் அயலூருக்குச் செல்வதாகச் சொல்லிச் சென்றிருக்கிறான்; இன்னும் இரண்டு நாளைக்கு வராவிட்டால் இவள் அவனைக் காணவில்லை என்ற புகார் கிளப்பிவிடுவாள்: அதனால் காரியத்திற்கு சிறிது தடங்கல் நேரும். இதற்குத் தகுந்தபடி செய்துவிட்டுப் போகவேண்டும் என்று எண்ணி நான் அவளை ரகஸியமாகக் கூப்பிட்டு, "உன் புருஷனை இரண்டு நாளாகக் காணவில்லை என்று நீ சொல்கின்றாய். உன் மகன் ஜமீந்தாருடன் மனஸ்தாபப்பட்டு வேலையை விட்டு நீங்கி இருக்கிறான். அந்த ஆத்திரத்தினால் உன் புருஷனை ஜமீந்தாரைக் கொலை செய்ததாக யூகித்துக் குற்றம் சாட்டப்படும்போல விருக்கின்றது. ஆகையால் நீ என்ன செய்

வேண்டுமென்றால் அவனைக் காணவில்லையே என்று தேடவே தேடாதே. அவன் ஒளிந்துகொண்டே இருக்கட்டும். நிஜமான குற்றவாளியைக் கண்டு பிடித்ததும் உன் புருஷன் சங்கதியை நானே தெரிவிக்கின்றேன். ஆகையால் நான் மறுபடி வந்து சேதியை தெரிவிக்கின்றவரையில் மூச்சு விட்டால் உன் புருஷன்மேல் குற்றம் ஏற்படும். ஜாக்கிரதை. நான் உன் நன்மையைக் கோரியே சொல்லுகிறேன். ஜாக்கிரதை.நான் துப்பறிபவன்'' என்று கூறி எச்சரித்து பயமுறுத்திவிட்டு போய்விட்டேன். அன்றே என்னுடைய ஆளை ஜெமீந்தார் வீட்டிலேயே உறவினர்போல விருந்து அப்போதைக்கப்போது நடக்கின்ற செய்தியை எனக்குத் தெரிவிக்கும்படிக் கட்டளையிட்டேன். பிறகுநாடகக்கொட்டகையின் களவுவிஷயமாய்நான்சுற்றிவிட்டுவீட்டிற்குச்சென்றபோது ராமாம்ருத முதலியாரும் அவர் சிநேகிதரும் என் வீட்டில் வந்திருந்து வைதேகியம்மாளின் விஷயத்தைக் கூறினார்கள். நான் அவர்களோடுகூடவே சென்று அந்த விவரத்தை எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு, அந்த வைதேகி யிருந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டுக் கிழவரோடு நான் தந்திரமாய்ப் பேசியதில் அந்த கிழவர் கூறியதிலிருந்து வைதேகி தாசி வகுப்பில் பிறந்தவள் என்பதை யறிந்ததும் நான் அதை உடனே இவரிடம் தெரிவித்தால் மனமுடைந்துவிடும் என்பதை உணர்ந்து அதைக் கூருமல் வாளாவிருந்துவிட்டேன். அந்தப் பெண் நல்ல உத்தமி என்பதையும் கிழவி அதற்கு நேர் விரோதம் என்பதையும் அறிந்துகொண்டு நான் அவருக்குத் தேறுதல் கூறி என்னாலானமட்டும் முயற்சிக்கின்றேன். என்று கூறிச் சென்ற சமயம் நாடகக்கொட்டகை எஜமானர் கொடுத்த புகைப்படத்திலுள்ள மனிதன் அங்கு செல்வதைக்கண்டு அவனைப் பின் தொடர்ந்து சென்றேன். (வாழை இலைக்கட்டைக்கண்டது முதல் வைதேகியையும் கௌரியையும் கொண்டுவந்த வரையில் சகலமான வரலாற்றையும் சாங்கோபாங்கமாகக் கூறினர்) இதற்குள் அங்கிருந்தவர்களில் ஒருவர் குறுக்கே பேசத் தொடங்கி ''ஆமாம். கல்கத்தா 'மயில் நெல்லூருக்கு இப்புறமுள்ள சிறிய ஸ்டேஷனில் நிற்காதே. அங்கு எவ்விதம் வண்டி நின்றது''' என்றார். நாயுடு இதோ சொல்லுகிறேன். ''சாதாரணமாய் வண்டி நிற்காதென்பது உண்மையே. அன்று ஏதோ அந்த சிறிய ஸ்டேஷனருகில் வண்டி வந்தபோது ஸ்டேஷனுக்கு அப்பாலிருக்கும் கைகாட்டிமரம் சாயவில்லை யாதலால் வண்டி ஸ்டேஷனில் எதிர்பாராவிதமாக சற்று நிற்கும்படியாக நேர்ந்து விட்டது. அந்த சமயம்தான் எனக்குத் தெரிந்தவன் ஒருவன் வந்து என்னைக்கேட்டான்'' என்றார். இதற்குள் இன்னொருவர் ''ஐயா! அந்த ஆசாமியைத் தாங்கள் அங்கேயே பிடிக்காமல் இவ்வளவு தூரம் தொடர்ந்துசென்று பிடிக்கக் காரணம் என்ன?'' என்றார்.

நாயுடு:—அதற்குக் காரணம் நான்போலீஸாரிடம் தெரிவித்து அவர்களை அழைத்துக்கொண்டுவந்து இவனைப் பிடிப்பதற்குள் இவன் ரயிலுக்குப் போய்விடுவான். பிறகு இவனைப் பிடிக்கவே முடியாது, ஆகையாலப்படிச் செய்தேன். மேலும் ரயிலிலேயே சமீபத்தில் பிடிக்கலாகாதா எனலாம். நான் முதலில் பயித்தியம்போல நடித்ததற்கு மாறாக நான் அவனைப் பிடிக்க முயன்றால் அவன் அந்தக் கட்டை எடுத்து வண்டி ஓடிக்கொண்டிருக்கையில் எறிந்துவிட்டு என்னையும் தள்ளியோ கொன்றோ விட்டால் காரியம் கெட்டுத்தானே போய்விடும்? மேலும் அவனும் தப்பித்துக்கொண்டு குதித்து ஓடிவிட்டால் என்னசெய்வது என்று யோசித்துத் தான் நான் முற்றிலும் பயித்தியம்போல நடித்து, நடுநிசியில் அவனும் சற்று கண்ணயர்ந்தாலும் அயர்வான்; அந்த தருணம் நாம் கீழே இறங்குவதுபோல இறங்கி அவனுக்கே தெரியாமல் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்க வேண்டுமென்று எண்ணி அவ்விதம் செய்தேன். அதற்குள் வேலை இவ்விதம் நடந்துவிட்டது. இவன் மூலமாகவே இன்னும் அனேக காரியங்களைக் கண்டு பிடிக்கவேண்டுமென்ற எண்ணமும் உண்டாயிருந்தபடியால் அவ்விதம் செய்தேன். ஏதோ ஈசனருளால் காரியம் நல்லபடியே முடிந்துவிட்டது. பிறகு நான் வீரபத்திரனாக வந்தபோது என்னைக் கண்டு சிறிது சந்தேகித்த இரண்டு பெயரை நான் அந்தக் கூட்டத்தாரின் கூடவிருந்தே என் ஆட்கள் மூலமாய் வெளிக் கிளப்பிவிட்டு அவர்கள் கிழவியைத் தேடிக்கொண்டு சென்றதாகக் கூறி நிச்சயிக்கும்படியாகச் சொல்லிவிட்டேன். நான் அன்று கூட்டத்தாரிருக்கு மிடத்தில் நித்திரை செய்யாமல் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு வருகையில் அடடா! அன்று ஜமீந்தார் கொலையின் விஷயமாகச் சென்று சவத்தின் கண்ணிலிருந்து எடுத்த புகைப்படத்திலிருக்கும் அந்த மனிதன் அந்தக் கூட்டத்தாரால் சிறை வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு வியப்பே வடிவாய் மாறிப் போய் நான் அவனை கவனிக்காதவன் போல வந்துவிட்டேன். பிறகு மறுநாள் கிழவியைத் தேடிக்கொண்டு சென்ற சாக்காக எஜமான் இடத்தையும் கண்டுபிடித்துக் கைதுசெய்து விடவேண்டும் என்ற எண்ணம் கொண்டே நான் அவ்விடம் சென்றதும் கடவுளின் திருவருளால், வைதேகியை அவ்விடத்திற்கு கொண்டு வந்ததும், அவள் தப்பித்துக் கொள்வதற்குத் துணிந்து உயரத்திலிருந்து கீழே விழுந்ததும், சாரங்கபாணி முதலியார் கூனற் கிழவியை வீணைப்பெட்டியில் வைத்துச் சென்றதற்காக அவனை கைது செய்ததாகவும், வீணைப்பெட்டியிலிருந்த கூனற் கிழவியைக் கொல்ல முபன்றதற்காக லோகாற்புதம் ஜெமீந்தாரைக்கைது செய்து,அவரிடம் பணம் பெற்றுக்கொண்டு விட்டுவிட்டதாகவும், வீணைக்குப் பதிலாக கிழவியைப் பிடித்துக்கொன்று போட்டதற்காக வைதேகியைக் கைது செய்ததாகவும், சாரங்கபாணி பொய் சாக்ஷி கூறி வைதேகியை தமக்குப் பிடித்துக் கொடுத்ததற்காக

அவனை எஜமான் விட்டுவிடுவதாக எண்ணி இருப்பதாகவும், அறிந்த நான் "சாரங்கபாணியை விடவே விடாதீர்கள்; அவனால் பெரிய காரியம் நமக்கு ஆகவேண்டும். அதை முடித்துக்கொண்டு விடலாம்" என்று கூறிவிட்டு, முதலில் வைதேகியைக் கண்டு பிடிப்பதிலேயே என் கவனத்தைச் செலுத்தி அவள் ஏறி, விழுந்த விடத்தை எல்லாம் பார்த்துக்கொண்டு நான் சென்றபோது எனக்கு ஒரு யோசனை உண்டாயிற்று. அதாவது வைதேகி எங்காவது தப்பிப் பிழைத்திருந்தால் இவர்கள் மீண்டும் பிரயாசைப்பட்டு அவளைப் பிடித்து வந்து விடுவார்கள். ஆகையால் அந்தம்மாளை நாமே இவர்களின் உதவியைக் கொண்டே கண்டுபிடித்து என் வீட்டில் வைத்துவிட்ட பிறகே இவர்களைப் பிடிக்கவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு நான் அங்குள்ள வழிகளைப் பிடித்துக்கொண்டு சென்று சின்னி பொம்மை வேஷக்காரியாக மாறி அவளைக் கண்டுபிடித்து என் வீட்டில் கொண்டு வைத்த பிறகே என்னுயிர் வந்தது. பிறகு வைதேகியின் மூலமாய் அவளுடைய சகலமான வரலாற்றையும் கேட்டறிந்து கொண்டு நான் கமிஷனரிடம் சென்று கூட்டத்தாரைக் காட்டிக்கொடுத்துகைது செய்யச்சொல்லி பிறகு அந்தக் கூட்டத்தாரைச் சேர்ந்த சகலமானவர்களையும் அந்தந்த ஊர்களிலேயே பிடித்துவிட்டு கைதுசெய்துவிடும் படிக்குச் செய்தேன். அந்தக் கூட்டத்தாரிடத்திலேயே விருந்த மார்வாடியை போலீஸாரின் அனுமதியின் மேல் அவன் கொடுத்த நகைகளை எல்லாம் திருப்பிக் கொடுத்து அவன் வீட்டிற்கு அனுப்பி விட்டேன். வைதேகியை நான் கொண்டுவருவதற்காகச் சென்ற அன்று ராமாம்ருதத்தின் வண்டி வீதியிலேயே நிற்பதைக்கண்டு அவர் வைதேகியைக் கண்டிருப்பார் என்று உணர்ந்தேன். அப்படியே கண்டதாக வைதேகியும் கூறியதைக்கேட்ட நான் அவர் எதிர்பாராதுஉண்டான மனக்குழப்பத்தினால் வண்டியில் ஏறாமல் கால் நடையாகவே சென்றிருக்கவேண்டும்என்று உணர்ந்து அவர் வீட்டிற்கு என் ஆளை யனுப்பி விசாரித்ததில் அவர் இந்தம்மாளையே எண்ணி ஏங்குவதாகத்தெரிந்து, உடனே ஒரு கடிதம் அந்தம்மாளையே கொண்டு எழுதச் செய்து அவர்களை ஒரு புகைப்படமும் எடுத்து அனுப்பினேன். இதுநிற்க, நான் அந்த கொள்ளைக்கூட்டத்தாரை கைதுசெய்த போது அவர்களுடன் வைதேகியை வளர்த்த கிழவியையும் கைது செய்திருந்தார்கள். அதற்கு முன் நான் வீரபத்திரன் வேஷத்தில் சென்றிருந்தசமயம் கொள்ளைக்கூட்டத்தார் இருந்த விடத்தில் போய் பார்த்த காலத்தில் ஒரு மனிதனை அவர்கள் சிறையில் வைத்திருப்பதாகக் கூறினேனே. அந்த மனிதன் யார் என்பதை இனியும் விவரித்துக் கூறுவிடில் உங்களுக்குத் தெரியாதாகையால் இனி கூறிவிடுவோம். அவன்தான் நமது துபாஷ் சாரங்கபாணி முதலி. அவனை எல்லோருமறிந்திருக்கலாம். அவனுடைய தொழில், அவன் பெயர் முதலிய எல்லாம் நானும் கேள்விப்பட்டிருந்ததாலும், அவனை நிதர்சனமாய்

நேரில் ஒரு சந்தர்ப்பத்தில் கண்டிருந்தபடியாலும் அவனே உடனே நான் இன்னுனென அறிந்துகொண்டேன். அவனுடைய உருவமே ஜெமீந்தார் கொலை செய்யப்பட்டதாகக் கூறிய சவத்தின் கண்ணிலிருந்து எடுத்த புகைப்படத்தில் இருந்தது. இதோ அந்தப் படத்தை எடுத்து வைத்திருக்கின்றேன் பாருங்கள்'' என்று எல்லோருக்கும் ஒரு புகைப்படத்தைக்காட்டினர். அதைக்கண்ட எல்லோரும் வியப்பும் திகைப்புமடைந்து, ஆச்சரியமே மயமாய் மாறிப்போய் அந்தப் படத்தை உற்று எல்லோரும் கவனித்து ''ஆ! இந்த மொட்டை தடியனை நாங்கள் பார்த்திருக்கின்றோமே. இவன் சோதாவில் முதல்நம்பர் அல்லவா? இவனு ஜெமீந்தாரை கொலை செய்ய வந்தான்? இவனுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்'' என்று பலமாதிரியாக பேசத் தலைப்பட்டனர். இதற்குள் நாயுடு பேசத் தொடங்கி ''அன்பர்களே! நான் இவனை முதன்முதல் போட்டோவில் கண்டதும் இவனை நன்றாக என் ஞாபகத்தில் வைத்துக்கொண்டேன். அந்த சிறையில் அவனைக் கண்ட பிறகு நான் சின்னி பொம்மை வேஷக்காரியாகச் சென்று வைதேகியிருப்பிடத்தைக் கண்டுபிடித்தபின் நான் தந்திர மாகவே வீதியில் நின்றேன். ஏனெனில் எஜமான் வீட்டிலேயே நாமிருந்தால் ஒருக்கால் வீரபத்திரனைத் தெரிந்த எவனுவது அங்கு வந்து நம்மைக் கண்டால் உண்மை வெளியாகிவிடும். இரண்டாவது எஜமானே நாம் கைது செய்துவிட ஏற்பாடு செய்து அனுப்பியிருந்தபோதிலும் அவனுவது, அவனது ஆளாவது உண்மையையறிந்து தந்தியடித்தது பொய் என்று திரும்பி வந்துவிட்டால் நம் செய்தி வெளியாகிவிடும். நாம் வெளியிலேயே இருந்தால் அப்படி யாராவது வந்தாலும்கூட வைதேகி யிருப்பிடத்தை என்னவோ தெரிந்துகொண்டாய்விட்டது. இனிமேல் அவர்களை ஏய்த்து நாம் தப்பித்துக்கொண்டு வைதேகியையும் எடுத்துக்கொண்டு வந்து அவர்களைப் போலீஸார் கையில் பிடித்துக்கொடுத்துவிடலாம். அதுவரையில் வீதியிலேயே நின்று அவர்கள் வாயிலாகவே சமீபத்தில் நடந்த வரலாற்றை தெரிந்துகொண்டே காவலிருப்பதுபோலவிருக்கலாம் என்று எண்ணி நான் வீதியிலேயே நின்று காவலிருந்த சமயம் அந்த ஆள்களின் மூலமாகவே சாரங்கபாணி, பொக்கைக் கிழவர், கூனற்கிழவி மார்வாடியை ஏமாற்றிய செய்தி ஆகிய எல்லாவற்றையும் கேட்டறிந்துகொண்டேன். நிற்க, வைதேகியின் வாயினுலேயே (கூனற்கிழவி, சாரங்கபாணி இருவரது செய்தியையும் கூறி) இவற்றை தெரிந்துகொண்டேன். எனக்கு அப்போதே சந்தேகம் உண்டாயிற்று. கூனற்கிழவிக்கும் சாரங்கபாணிக்கும் ஏதோ நெடுநாளாய் பழக்கமும் சம்பந்தமும் இருக்கவேண்டுமென நான் யூகித்தேன். நிற்க, நான் ஜெமீந்தார் கொலைகேஸ் விஷயமாக பிரேத சோதனை செய்துவிட்டுச் சென்றபிறகு என்னுடைய ஆளை அங்கு இவர்களுக்கு உறவினர் மாதிரியாக நடந்துகொண்டு

எனக்கு ஒய்வின்மையினால் அவரையே என்னுடைய வேலையை செய்துவரும்படிக்கு உத்திரவிட்டிருந்தேன். அவரும் என்னோடு நெடுநாள் பழகியும் நான் செய்யும் வேலைகளைக் கண்டு அநுபவப்பட்டிருக்கும் புத்திமானாகையால் அவர் நான் சொல்லியபடியே ஜெமீன்தாருடைய மைத்துனரைக் கூட வைத்துக்கொண்டே தந்திரமாக அவரது பெட்டி, பேழை முதலியவைகளைத் திறந்து அதிலிருந்த இரண்டு பொருள்விளங்காத கடிதங்களையும், மைத்துனருக்குத் தெரியாமல் அந்தப் பெட்டியிலிருந்த இரண்டு புகைப் படங்களையும் எடுத்துக்கொண்டு அவற்றை ரகசியமாக என்னிடம் சேர்த்தார். நான் அவற்றை வாங்கிப் பார்த்ததில் ஒரு படத்தில் யுக்தவயதடைந்த மடந்தையின் வடிவமும், மற்றொரு படத்தில் சுமார் இரண்டு வயதுள்ள பெண் குழந்தையின் வடிவமும் இருந்தன. அதைக் கண்டதும் எனக்கு இவர்கள் இருவரும் ஒரே சாயலாக விருந்தபடியால் சமீபித்த உறவினராகவே இருக்கவேண்டும் என்று நான் எண்ணினேன். இரு பெண்களும் ஒருவரைக்காட்டிலும் ஒருவர் வெகு அழகாக விருந்தார்கள். அந்தக் குழந்தையின் படமெடுத்து வெகு நாளான மாதிரியும் பெரிய பெண்ணின் படமெடுத்தது சமீபத்திலிருக்கவேண்டுமென்றும் யூகித்தேன். ஒருக்கால் இந்த பெரிய மடந்தையையே குழந்தையில் எடுத்த படமாகவிருக்குமோ இது என்று எண்ணவோ அதற்கு மிதற்கும் சில வித்தியாசங்கள் ஏற்பட்டிருந்தனவாதலால் இரண்டும் வேறுபட்டனவென்று யூகித்தறிந்தேன். அந்த மடந்தையின் வலது காலில் 6 விரல்கள் இருந்தன. சிறிய குழந்தையின் கால் சாதாரணமாக விருந்தது. இதுவே முக்கியமான வித்தியாசமாகையால் நான் சுலபத்தில் வெவ்வேறு மனிதர் என்பதை யறிந்தேன். நிற்க, அந்தப் பொருள் விளங்காத கடிதத்தை நான் எவ்வளவோ பாடுபட்டு திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்தேன். எனக்கும் பொருள் விளங்கவில்லை. அதை சாவகாசமாய்ப் பார்த்ததில், அதன் பொருள் ஒருவாறு எனக்கு விளங்கிற்று. அதாவது 'நீ உடனே ஊரைவிட்டுப் போகாவிட்டால் உன்னுயிர் நிற்காது. ஜாக்கிரதை சீக்கிரம் போய்விட்டால் பிழைத்தாய்'—என்று எழுதியிருந்தது. அதைக் கண்டதும் பலவித சந்தேகங்கள் உண்டாயின. இன்னொரு கடிதத்தையும் படித்தேன். அதன் பொருளாவது.—'நான் அன்றே கடிதமெழுதியும் நீ இன்னும் செல்லவில்லை. இன்றிரவிற்குள் போகாவிட்டால் நாளை நீ சவமாய்க் கிடப்பது திண்ணம்' என்று எழுதியிருந்தது. அதில் பெயரையும் காணவில்லை. ஊரையும் காணவில்லை. நான் வெகுநேரம் யோசித்தேன். ஜெமீன்தாரைக் கொலை செய்யவந்து அவரென எண்ணி வேறொருவனைக் கொலை செய்தவன் சாரங்கபாணி. அவன்தான் இந்தக் கடிதத்தையும் எழுதியிருக்கவேண்டும். அவனையே நேரில் சென்று விசாரித்து தகவலைத் தெரிந்துகொள்வோம் என்று எண்ணி நான் உடனே

போலீஸ் உடை தரித்துக்கொண்டு நேரே சாரங்கபாணியை அடைத்திருந்த விடத்திற்குச் சென்று அவனை நோக்கி "என்ன முதலியாரே! உம்முடைய அற்புதமான வேலை வேறொன்று வெகு ஜாஜ்வல்யமாய் பிரகாசிக்கின்றதே. அடடா! என்ன பெருமை! என்ன பெருமை! அதற்காக உமக்கு இந்தப் பரிசைக் கொடுக்கச் சொன்னார்கள்" என்று கூறி அவனிடம் அவனை கத்தியோடு எடுத்த படத்தைக் காட்டினேன். அதைக்கண்டதும் அவன் துடிதுடித்து, பதைபதைத்து, இன்னதென்று விவரிக்க இயலாதவித வேதனை அடைந்துவிட்டான் என்பதை அவன் முகம் காட்டிவிட்டது. அவன் மறுமொழி கூறவில்லை. பிரம்மஹத்தி செய்தவனுடைய களை அவன் முகத்தில் நன்றாக பிரகாசித்துவிட்டது. அவன் வாளாவிருப்பத்தைக் கண்டு நான் "என்ன பேசாதிருக்கின்றீரே? என்ன பதில் சொல்கின்றீர்? என்ன காரணத்திற்காக அவரைக் கொலை செய்தீர்? வரலாற்றை எல்லாம் மரியாதையாகச் சொல்லிவிடும்" என்று நான் கேட்டு அந்தப் பொருள் விளங்காதகடிதங்களையும் காட்டி அவற்றின் பொருளை விளக்கி நான் எழுதிய நகலையும் காட்டினேன். அதையும் கண்டு அவன் சற்றுநேரம் பேசாதிருந்து மறுபடி என்னைப்பார்த்து, "ஐயா! விஷயமென்னவோ தெரிந்துவிட்டது. இனி ஒளித்துப் பிரயோஜனமென்ன? ஜெமீந்தாரைக் கொலைசெய்தவன் நான்தான்; ஆனால் அதற்குக் காரணம் அந்த கூனற்கிழவிதான். என்னால் விவரத்தைச் சொல்ல முடியவில்லை. தாங்கள் அவளையே கேட்டு அறிந்துகொள்ளலாம்" என்று கூறி அவன் சோர்ந்துவிழுந்துவிட்டான். நான் உடனே கூனற் கிழவி இருப்பிடத்திற்குச் சென்று அவளைக் கண்டு! "ஏ பாட்டி! நீ இவ்வுலகில் பிறந்து எவ்வளவு காலமிருக்கவேண்டுமோ அவ்வளவும் இருந்து சாகுந் தருவாயையும் அடைந்துவிட்டாய். அதற்குள் நீ செய்துள்ள பல வேலைகளையும் கண்டுபிடித்தாய்விட்டது. வீணாக சாகுங் காலையில் அதிகமாய் இம்சைப் படாமல் சாவதற்கு வழியாவது நீ செய்ததெல்லாம் உன் வாயினாலேயே கூறிவிட்டால் அதிகமாக வருந்தாமல் இறக்கலாம். என்ன சொல்லுகின்றாய்?" என்றேன். அதைக்கேட்ட கிழவி மிகவும் ஈனகுரலோடு, "ஐயா! உங்களுக்குமுன்னாலேயே நான்எல்லாவற்றையும் யாரையாவது அழைத்துச் சொல்லிவிடவேண்டுமென்று தீர்மானம் செய்துவிட்டேன். அவ்விதமே இதோ கூறுகின்றேன். என் கண்மணி மாற்றிலாமரகத மணியான வைதேகி இனியாகிலும் துன்பமின்றி வாழட்டும்" என்று கூறினாள். நான் உடனே சென்று மாஜிஸ்டிரேட்டை அழைத்துக்கொண்டு வந்து கிழவியின் வாக்குமூலத்தை வாங்கி அவ்விதமே எழுதிக்கொண்டேன். அதை இதோ படிக்கின்றேன்.

"ஐயா! நான் இனிமேல் பிழைக்க மாட்டேன். என்னுயிர் தத்தளிக்கின்றது. ஆகையால் எனது சுய ஞாபகம் இருக்கும்போதே எனது வரலாற்றையும் நான் செய்த துராக்கருதங்களையும் சொல்லி

மன்னிப்புகேட்டுக்கொள்கின்றேன். நான்பிறந்தது தாசி குலம். எனக்கு விரிஞ்சிபுரத்தில் ஒரு வீடும் கொஞ்சம் நிலமும் இருந்தன. எனக்கு ஓரே பெண் இருந்தாள். நாங்கள் எங்கள் ஜாதித் தொழிலேயே செய்து ஜீவித்து வந்தோம். என் பெண் அதிக அழகு வாய்ந்தவளல்ல வாகையால் அவள்மூலமாக எங்கள் ஜீவனத்திற்குப் போதிய பணம் கிடைக்கவில்லையாகையால் வீடு, நிலம் முதலிய எல்லாவற்றையும் விற்று ஜீவித்து வந்தோம். கையிலிருந்த பொருள் எல்லாம் செலவாகிவிட்டபடியால் நாங்கள் சோற்றிற்குக்கூட இல்லாமல் திண்டாடிக்கொண்டிருந்த சமயம் என்மகள் திடீரென்று ஜுரம்கண்டு இறந்துவிட்டாள். பிறகு என்கதி அதோகதியாகிவிட்டது. நான் எப்படி என் வாழ்நாள் முற்றும் ஜீவிப்பது என்று யோசனைசெய்தேன். என் கெட்டகாலப் பயனுல் எனக்கு துற்புத்தி உண்டாயிற்று. நான் என் வயிற்றுக்கில்லாக் கொடுமையால், சிறிய பொருள்களைத் திருடித் தின்னலானேன். அதன்பின்னர் என் பிந்திய காலத்திற்கு நமக்கு திக்கு வேண்டுமேயென்று யோசித்து நான் விரிஞ்சிபுரத்து ஜமீந்தார் வீட்டில் அவரது தங்கை இறந்துபோயிருந்த துக்கநாளில், அவர்களை எனக்கு நன்ருய்த்தெரியுமாதலால், நானும் துக்கம் கேட்கச்சென்றதுபோல சென்று வரும்போது அவர்களுடைய இளைய குழந்தையான ஜனகவல்லி என்பவளை நான் யாரும் அறியாமல் எடுத்துக்கொண்டு அந்த ஊரைவிட்டு வெளியூருக்குச் சென்றுவிட்டேன்.

பிறகு நான் அந்தக் குழந்தையை வெகு பக்ஷமாய் அதன் உடம்பிலிருந்த நகைகளைக்கொண்டு விற்று வளர்த்துவந்தேன். குழந்தை வெகு ரூபவதியாயிருந்ததால் நான் என் பிந்திய காலத்தில் அவளாலேயே ஜீவிக்கலாம் என்று எண்ணி வளர்த்தேன். அந்த நகைகளும் தீர்ந்துவிட்டபிறகு நான் வருந்துங்காலையில் அந்த ஊரின் ஜமீந்தாரின் பேத்தி வழிதப்பி வீதியில் வெகுதூரம் வந்துவிட்டது. அதை நான் கண்டேன். உடனே எனது துற்புத்தியால் அதையும் எடுத்துக்கொண்டு நான் அந்த ஊரைவிட்டு வந்து அந்தக் குழந்தையை ஆலந்தூர் நாடகக் கம்பெனிக்காரருக்கு 2000-ரூபாயிக்கு விற்றுவிட்டு அதை வைத்துக்கொண்டு திருவல்லிக்கேணியில் ஆலந்தாப்பிள்ளைத் தெருவில் சிறியவீட்டை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு அந்த வீட்டில் ஜனகவல்லி என்ற குழந்தைக்கு வைதேகி என்று நாமம் சூட்டி அதை வெகு பாசத்தோடு வளர்த்துவந்தேன். அவளுக்கு கல்வி கற்றுக்கொடுக்க உபகாரச் சம்பளம்பெற்று பள்ளியில் சேர்த்தேன். அவளை எனது சொந்த பேத்தியைப்போலவே சகலவிதத்திலும் பாசத்தோடு வளர்த்தேன். எனக்கு வேண்டியவரான எங்கள் ஜாதியாரைக்கொண்டு பாட்டும் கற்றுக்கொடுத்தேன். ஆனல் எங்கள் ஜாதியில் செய்யும் அபினயம், சதிர் முதலியவைகளை அவள் நான் எத்தனைதரம் சொல்லியும் கற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள். அவளை வளர்க்கும்பொருட்டு எத்

தனேயோ அரும் பாடுபட்டு நான் பொருள் தேடினேன். அவ ளுக்கு வயது முதிர முதிர எனக்கு முற்றிலும் மாருகவே நடக்க வாரம்பித்து கடைசியில் என் சொல்லே ஒருவிதத்திலும் கேட்காம லேயே மறுத்துவிட்டாள். அப்போது எனக்கு அவளிடத்தில் பாசம் குறைந்து த்வேஷம் அதிகரிக்க ஆரம்பித்தது. இவ்விதமிருக் கையில் ஒருநாள் நான் ஏதோ அலுவலின்மேல் திருவல்லிக்கேணியில் ஒரு தெருவில் சென்றபோது, விரிஞ்சிபுரம் ஜெமீந்தாரும் அவர் மனேவியும் வண்டியில் செல்வதைக் கண்ட என் குடல் நடுக்கமெடுத் துக்கொண்டது. "இவர்கள் இங்கு எதற்கு வந்தார்கள்? ஒருக்கால் நாமிருப்பதைக் கண்டுகொண்டு தான் வந்துவிட்டார்களோ? என்று பல யோசனேகள் எனக்குண்டாயதால் நான் அவர்கள் எங்கு இறங்கு கின்ருர்கள் என்று இடத்தைப் பார்த்துக்கொண்டு அந்த வீட்டு வேலேக்காரர்களே ரகஸியமாய் விசாரித்ததில் அவர்களுடைய மூத்தப் பெண் இறந்துவிட்டதாகவும், விசனம் தாளாமல் ஊரைவிட்டு வந்து விட்டதாகவும், இங்கேயே இனி இருக்கப்போவதாகவும் கூறினுர் கள். பிறகு எனக்கு பயமெடுத்துக்கொண்டது. இந்தப் பெண் ணும் அவர்களுடைய மூத்த பெண்ணேப்போலவே இருப்பதால் இவளேக் கண்டதும் ஜனகவல்லி இவள்தான் என்பதை நன் ருகத் தெரிந்துகொண்டால் பிறகு நம் கதி அதோகதி தான் என்று தோன்றியதால் என் போராதகாலச் சனியனின் பலத் தால் எனக்குப் பெரிய துற்புத்தி உண்டாயிற்று. நான் உடனே எனக்கு எல்லா உபகாரத்தையும் செய்யும் சாரங்கபாணி யிடத்தில் "அந்த ஜெமீந்தாரைக் கொலே செய்துவிடவேண்டும். அவர் போய் விட்டால் பிறகு அவர் மனேவி தானே இறந்துவிடுவாள். அதற்கு மேல் நமக்கு பயமே இல்லே. இந்த உதவியை நீ செய்யவேண்டும்" என்று நான் கேட்டுக்கொண்டதற்கு சாரங்கபாணி 'வீணுக அவர் களேக் கொலே செய்வானேன்? நீங்கள் அந்தப் பெண்ணே யழைத்துக் கொண்டு வேறு ஊருக்குப் போய்விடுங்கள்" என்ருன். நான் எத்தனே தரம் கூப்பிட்டும் அந்த வைதேகி என்மேல் சந்தேகித்து இந்த ஊரைவிட்டு வரமாட்டேனென்று மறுத்துவிட்டாள். பிறகு அவளே பலவந்தித்தால் செய்தி தெரிந்துவிடுமே என்ற பயத்தினுல் நான் சாரங்கபாணியை வற்புறுத்தியதில் அவன் அந்த ஜெமீந்தாரைக் கொலே செய்ய ஒப்புக்கொண்டான். இதற்குள் ஒரு பெரிய ப்ரபு வைதேகியின்மீது ஆசைப்படுவதாகவும் ரூபாய் ஏராளமாய்க் கொடுப்ப தாகவும் கூறினுன். நான் அவளே எப்படியாகிலும் அந்தப் பெரிய மனிதரிடம் தள்ளிவிட்டால், பிறகு நமக்கு ஒருவிதத்திலும் குறை யில்லே என்ற எண்ணத்தோடு அதற்கும் ஏற்பாடு செய்தேன். சாரங்க பாணி நான் சொன்னதுபோலவே அவரைக் கொலே செய்துவிட் டான். பிறகு அந்த வைதேகியை நான் எவ்வளவு தரம் நல்ல

மாதிரியாகச் சொல்லியும் அவள் கேட்காமையினால் அவளை மயக்கம் கொடுத்துத்தான் சரிப்படுத்தவேண்டும் என்று நான் ஏற்பாடு செய்ததை அவள் எவ்விதமோ தெரிந்துகொண்டு, அந்த மயக்கத்தை எனக்கே தந்திரமாகக் கொடுத்து வேலை செய்துவிட்டாள் போலவிருக்கின்றது. அதற்குப் பின் நடந்த செய்திதான் உங்களுக்குத் தெரிந்த விஷயம். பிறகு அந்தக் கூட்டத்தார் என்னைப் பயமுறுத்தி மார்வாடியை ஏமாற்ற உதவிபுரியச் சொன்னபடி செய்தேன். அதற்குப்பிறகு இதோ சாகக் கிடக்கிறேன். ஐயா! அந்த உத்தமியை வருத்த எண்ணியதற்கு நானே அனுபவித்துவிட்டேன். அந்த ஆரணங்கான வைதேகியின்கதி எப்படி இருக்கிறது? அதுதான் எனக்குத் தெரியவில்லை. நான் செய்த பாதகத்தை எல்லாம் சொல்லிவிட்டேன். அந்த ஜெமீந்தார்தான் இறந்துவிட்டார். அந்தம்மாளிடத்தில் இனி அவளைச் சேர்த்துவிடுங்கள். நாடகக்காரருக்கு விற்ற பெண்ணை அவளது பெற்றோருக்கே சேர்த்துவிடுங்கள். நான் உயிர் துறக்குமுன் என் கண்ணானக் கண்மணி வைதேகியை ஒருதரம் பார்க்கக் கிடைக்கும்படிச் செய்யுங்கள். ஐயா! இதுதான் என் வரலாறு. இனி நான் அதிக நாள் இருக்கமாட்டேன். ஆகையால் அவளை சீக்கிரம் பார்க்கவேண்டும். இவ்வொன்றிற்குமாத்திரம் தயவு செய்யவேண்டும். அவள் இனி மனதிற்கிசைந்த மன்னனைத் தேடி வாழட்டும். அவளது அன்னை அவளுக்கு ஜனகவல்லி என்று வைத்த பெயரை நான் ஜானகி என்றும் வைதேகி என்றும் சாக்ஷாத் சீதையின் நாமமாகையால் நான் அவளுக்கு வைதேகி என்றுநாமம் சூட்டினேன்; அந்த நாமத்திற்கேத்தாற்போல அவள் என்னிடத்தில் அசோக மரத்தடியில் சீதை சிறைவாசம் செய்தார்போல சிலகாலம் சிறை வாசம் செய்ததாகவே இப்போது நான் நன்றாயறிந்துகொண்டேன். ஐயா! இனி என்னால் பேசமுடியவில்லை. என்னுடைய செய்தி இவ்வளவு தான்.” என்று கூறினாள். இதற்குள் அவளுக்கு மயக்கம் வந்துவிட்டபடியால் எதுவும் பேசமுடியவில்லை. நான் மயக்கத்தை சிறிது தெளியச்செய்து கிழவியிடத்தில் வைதேகி அவளை பார்க்கும்படி செய்வதாகக் கூறிவிட்டு நேரே சாரங்கபாணி இருப்பிடம் சென்றேன். மாஜிஸ்ட்ரேட் தமதிருப்பிடம் சென்றுவிட்டார். நான் சாரங்கபாணியை நோக்கி “முதலியாரே! நீர் சொல்லியபடி நான் கிழவியிடம்சென்று எல்லா விவரங்களையும் விசாரித்துக்கொண்டு வந்துவிட்டேன். அவள் இறக்கும் தருவாயிலிருக்கின்றபடியால் மாஜிஸ்ட்ரேட்டு முன்பாகவே வாக்குமூலம் வாங்கிவிட்டேன். நீர் இந்த பொருள் விளங்காத கடிதம் எதற்கு எழுதினீர்? நிற்க, ஜமீந்தாரை எந்தசமயம் கொலை செய்தீர்? அவர் பங்களாவிற்கு எப்படிப் போனீர்? அங்கு குமஸ்தாவாகவிருந்த மாணிக்கமுதலியார்மீது ரத்தம் எப்படி விழும்படிச் செய்தீர்? இவைகளை எல்லாம் கூறவேண்டும்” என்றேன். உடனே அவன்

சற்றும் நிதானிக்காமல் "ஐயா! நான் பணத்திற்கு அடிமையாகி எத்தனையோ அட்டூழியங்களை எல்லாம் செய்திருக்கிறேன். ஆனால் தர்மநியாயத்திற்கு அவைவிரோதமேயன்றிசட்ட நியாயத்திற்கு அவை விரோதமில்லாமையால் அவைகளில் நான் அகப்பட்டுக்கொள்ளவில்லை. இந்தக் கொலையில் மாத்திரம் நான் அகப்பட்டுக்கொள்வேனோ என்ற பயமுண்டு. ஆனால் பணத்தின் ஆசையால் துணிந்தேன். முதலில் அதைச்செய்ய எனக்கு இஷ்டமில்லாமையால்நான் இந்தக்கடிதத்தைக் கண்டாவது அவர்கள் ஊரைவிட்டுப் போய்விடட்டும் என்று, நான் எழுதியதாகத்தெரியக்கூடாதென்றநோக்கத்தோடுபொருள்விளங்காமல் இந்தக்கடிதத்தை அவருக்கு எழுதினேன் பொருள் விளங்கஎழுதினால் அது எளிதில் எல்லாருக்கும் தெரிந்துவிடும். இவ்விதம் எழுதினால் ஜமீந்தார் உன்னிப்பாய்ப் பார்த்து அவ்வாறே செய்வார் என்ற மூட எண்ணத்தினால் செய்துவிட்டேன். பிறகு கிழவியின் உபத்திரவத்தினாலும் பணத்தின் பேராசையினாலும் நான் அதைச் செய்யத் துணிந்து, அன்று இரவு எவருமறியாதபடி பின்பக்கமாக வந்து ஓரிடத்தில் ஒளிந்துகொண்டிருந்தேன். பதினொரு மணிக்குமேல் எல்லோரும் தூங்கிவிட்ட பிறகு ஜமீந்தார் படுக்கையறைக்கு மெல்லச் சென்றேன். அவர் கட்டிலில் சந்தடியின்றி படுத்திருந்தார். அவர் தூங்கிவிட்டதாக நான் எண்ணி அவரைக்கத்தியால் குத்த முயன்றேன். அவர் அப்போது மெல்ல உருண்டு கீழே விழுந்துவிட்டதாகத் தெரிந்தது. உடனே நான் அவரைப் பிடிக்கவெண்ணி கட்டிலுக்கு இப்பால் சந்தடி செய்யாமல் வந்தேன். விளக்கில்லாமலிருந்தபடியால் முற்றும் இருட்டாயிருந்தது. நான் கட்டிலுக்கு இப்பால் வந்து பார்ப்பதற்குள் அவர் உள்கதவைத் திறந்துகொண்டு வெளியிலிருந்து வந்ததாகத் தெரிந்தது. உடனே நான் கத்தியால்குத்திவிட்டேன். அவர் சத்தமொன்றும் போடாமல் அப்படியே விழுந்துவிட்டார். அவர் உயிர் உடனே போய்விட்டது. இந்தப் பழிக்கு இங்கு இருப்பவர்களையே ஆளாக்கிவிட வேண்டுமென யோசனை செய்து நான் என்னிடமிருந்த ஒரு காலி புட்டியில் அங்கு வெள்ளமாய் ஓடிய ரத்தத்தை வழித்து ஊற்றி வைத்துக்கொண்டு என் கைகால் முதலியவற்றைதுடைத்துக்கொண்டு நான் மெல்ல வெளியில் வந்து குமாஸ்தா படுத்திருந்த இடத்திற்குச்சென்று அதை அப்படியே அவர்மேல் எறிந்துவிட்டு நான் விசையாக நடந்து பின்புறமாய்ப் போய்விட்டேன். பிறகு எனக்கு இந்த கதி வந்துவிட்டது. ஐயா! நான் என் மனப்பூர்வமாய் பகைமையால் அவரைக் கொலை செய்யவில்லை. என் கஷ்டகாலக் கொடுமையாலும் பணத்தாசையினாலும் செய்துவிட்டேன். இந்தப் படம் தாங்கள் எப்படி பிடித்தீர்கள்?" என்று கேட்டான். நான் படமெடுத்த வரலாற்றைக்கூறிவிட்டு அவன் கூறியதெல்லாம் எழுதிக்கொண்டு வந்தேன்.

இது நிற்க, வெளியூரிலிருந்த கூட்டத்தாரைப்பிடித்தபோது அவர்களோடு இருந்தஒரு மனிதர் தமதுவரலாற்றையும் அவர்களிடம் சிக்கிக்கொண்டவிவரத்தையும் தாம் இன்னார் என்பதையும் கூறினார். அவரே கமலத்தின் புருஷர் என்பதை எல்லோரும் அறிந்த விஷயம். அவரை கமிஷனரிடம் கூறி வீட்டிற்கு அழைத்துவந்தேன். இதற்குள்ளாக வைதேகயின் மனமும் ராமாம்ருதத்தின் மனமும் தேனும் பாலும்போல ஒற்றிருப்பதை யறிந்து இந்த விவாகத்தை முடித்து வைப்பதில் ஜெமீந்தாருக்கு யாதொரு ஆக்ஷேபனையுமிராதென்று துணிந்துசெய்ய முன்வந்து அதற்குவேண்டிய ஏற்பாட்டையும் நடுவில் செய்துவந்தேன்" என்றார். இதற்குள் அங்கு குசமசஎன்று ஒரு குழப்பம் உண்டாயது. அதாவது நாடகக்கொட்டகை பெண் ஓர் ஜெமீந்தார் பெண் என்பதை யறிந்ததும் மேலே இவர் விரிவாக பேசிக்கொண்டே போகையில் இடையில் ஒருவரும் பேசமுடியாமல் போய்விட்டது. இவர் பேச்சு கொஞ்சம் முடிவடைந்ததும் அந்தப் பெண் எந்த ஜெமீந்தார் பெண் என்று பேசுவதை ஜாடையில் அறிந்த நாயுடு "அன்பர்காள்! அதையும் நான்கூறிவிடுகின்றேன். நீங்கள் சந்தேகப்படவேண்டாம். நான் கிழவி மூலமாய் அதை யறிந்ததும் வைதேகி கீரைக்கார காமாக்ஷி தெரிவித்த வரலாற்றை எனக்குக் கூறியிருந்தது நினைவிற்கு வந்தது. நான் அதை ஆராயும்பொருட்டு காமாக்ஷியின் ஊர் எது என்பதை விசாரித்துக்கொண்டு வேலையோடு வேலையாக நான் காமாக்ஷியின் கணவரைக் கண்டு பேசியும் அவர்கள் வீட்டார்களை எல்லாம் கண்டும் நாடகக்கொட்டகை பெண்ணையும் ஒட்டிப் பார்த்ததில் இவர்களுடைய குழந்தை காணமல் போய்விட்டதே. அவள்தான் தங்கவேணி என்று எண்ணி பின்னும் நான் கிழவியைக் கண்டு சந்தேகமற அதைத் தெரிந்துகொண்டேன. காமாக்ஷியம்மாளின் மகள் தான் தங்கவேணி என்றும் அவள் பெயர் இப்போது என்னவோ தெரியாதென்றும் அவள் கூறிவிட்டாள்." என்றதும் காமாக்ஷி அந்தப் பெண்ணைத் தழுவிக்கட்டியணைத்து முத்தமிட்டாள். இந்த காக்ஷியைக் கண்ட எல்லோரும் அன்று காலை முதல் வியப்பே வடிவாயிருந்து ஆநந்தமே மயமாயிருந்த தருணத்தில் இந்த நற்செய்தியையும் காக்ஷியையும் கண்டு கட்டிலடங்காமல் பூரித்து நாயுடுவை பலவாருய்ப் புகழ்ந்துப் பேசினார்கள். இதற்குள் நாடகக்காரர் எழுந்து நண்பர்காள்! அக்குழந்தையை அனாதைக் குழந்தையென்று எனக்குக் கிழவி விற்றதால் நான் வாங்கி நாடகத்திற்குப் பழக்கினேன். ஆயினும் அவள் குற்றமற்ற நல்ல சுத்தமானவள் என்பதை நான் உறுதியாய்க் கூறுகின்றேன். நாயுடுகாரு அவளைப் பெற்றோரிடம் சேர்த்ததற்கும், நமது கம்பெனியில் களவுபோன சொத்துக்களை திரும்ப நம்மிடம் சேர்த்ததற்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். மீண்டும் நாயுடுகாரு பேசத்தொடங்கி "நண்பர்களே! ராமாம்ருதத்திற்கு வேண்டியவர்கள்

பந்துக்கள் முதலிய எல்லோருக்கும் பரமசிவத்தின் மூலமாய் விலாசத்தைத் தெரிந்துகொண்டு கடிதமும், தந்தியும் அனுப்பிவிட்டேன். வைதேகியின் உறவினருக்கு அவ்விதம் செய்வதற்கு அனேக இடையூறுகள் இருந்தபடியால் அவர்களை அழைக்கமுடியாமல் போய்விட்டது. ராமாம்ருதத்திற்குக் கல்யாணம் என்று எழுதினது லகுவாய்விட்டது. வைதேகிக்குக் கல்யாணம் என்பதை எவ்விதம் தெரிவிப்பது. தாய் தந்தையர் இன்னார் என்று எழுதவோ கேஸ் விசாரணை ஆகவில்லை. அவர்கள் பந்துக்களெல்லாம் ஜெமீந்தார் கொலையுண்டு இறந்துவிட்டதாகவும், ஜெமீந்தாரினியம்மாள் காணாமல் போய் விட்டதாகவும் தெரிந்து விசனப்பட்டுக் கொண்டிருக்கையில் கேஸ் விசாரணைக்கு வராமல் விஷயங்கள் மர்மமாகவே இருப்பதனாலும் மேலும் ஜமீந்தாரின் சாவுக்காக ஜனங்களெல்லாம் பெரும்பாலோரும் வந்திருப்பதாலும் அவர்களுக்கு திடீரென்றுசெய்திதெரிந்தே ஆநந்தமடையட்டும்; அவர்களை வைத்துக்கொண்டே விவாகத்தை நடத்துவோம். மிச்சமுள்ளவர்களுக்கு இன்று காலையில்தந்தியடித்துவிட்டேன். அவர்கள் சோபனக் கலியாணத்திற்குள் வந்துவிடுவார்கள். நிற்க, கோர்ட்டில் மாணிக்க முதலியார்மீது குற்றம் சாட்டிய வழக்கு விசாரணைக்கு நேற்று எடுத்துக்கொள்வதாக விருந்தார்கள். இன்னொரு கேஸ் விசாரணை யாவதற்கு வெகுநேரமாய் விட்டபடியால் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நான் கூனற்கிழவியிடத்தில் மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் வாங்கிய வாக்குமூலத்தையும், சாரங்கபாணியிடத்தில் வாங்கிய வாக்குமூலத்தையும், புகைப்படத்தையும் நேரில் ஜெமீந்தாரையும் சாரங்கபாணியையும் கோர்ட்டிற்கு அழைத்துச்சென்று உண்மைக் குற்றவாளியை தகுந்த சாக்ஷியத்தோடு காண்பித்ததும் அவனே குற்றவாளி என்று ஒப்புக்கொண்டதன் மேலும், ஜெமீந்தார் கூறிய தமது வரலாற்றைக்கேட்டும் கேஸ் சீக்கிரம் பன்னிரண்டு மணிக்குள்ளாக விசாரணை ஆகி முடிவடைந்து மாணிக்க முதலியாரை விடுதலைசெய்து விட்டார்கள். நேற்று முடியாவிட்டால் இன்று ஒருமணிக்குள்ளாக கேஸ் முடிவடையும் என்பதைக் கருதியே நான் முகூர்த்தம் ஒரு மணிக்குமேல் வைத்துக் கொள்ளும்படி நாழிகைப் பார்க்கச் சொன்னேன். அப்படியே கேஸும் முடிந்தது; கல்யாணமும் முடிந்தது. அவரவர் மனிதர்களை அவரவர்கள் அடைந்தார்கள். கோர்ட்டிலிருந்து நேரே ஜமீந்தார் வீட்டிற்குச்சென்று அங்குள்ள அவர்கள் மனிதருக்கெல்லாம் இச்சந்தோஷ செய்தியைத் தெரிவித்து எல்லோரையும் அழைத்துக்கொண்டு வருவதற்கு எனக்கு அத்தனை நாழிகையாகி விட்டது. எனது அன்புமிக்க அறிவாளர்காள்! ஏதோ ஈசன் அருளாலும், பெரியோரின் ஆசீர்வாதத்தினாலும், காரியங்களை ஒருவாறு பூர்த்திசெய்து விடும்படிக்கு ஆக்ஞாபித்த ப்ரகாரம் நடந்தேறியது. இப்பொழுது மணி 7 ஆகின்றது. இனிமேல் கச்சேரி யாகவேண்டுமாகையாலும் எல்லா விஷயங்களையும்

விளக்கிக் கூறியாய் விட்டபடியாலும் இனிமேல் இந்தப் பிரஸங்கத்தை நிறுத்தி கச்சேரியை ஆரம்பிக்கச் செய்வோம். இடையில் ஏதேனும் சந்தேகமிருந்தால் கேட்கலாம்'' என்று வெகுமரியாதையோடு கூறினர்.

இந்த பெரிய அற்புதமான விஷயங்களை எல்லாம் கேட்ட சகலமான ஜனங்களும், இன்னதுதான் சொல்கிறோம்; இன்னதுதான் செய்கின்றோம் என்பதை அறியாமல் நாயுடுவை ஸ்தோத்திரம்செய்து பல மாதிரியாகப் புகழ்ந்துகூறி, பலஜாதி புஷ்பங்களினாலான மாலைகளை அவர் கழுத்தில் போட்டு, பல புஷ்பங்களை வாரி யவர்மீது புஷ்பமாரி போலப் பொழிந்துபாதத்தில் பூஜைசெய்து வணங்கி "ஆஹா! கலிகாலத்தில் பேசுந்தெய்வம் தாங்களன்றோ? கருணைக்குணம் நிறைந்த காருண்யமூர்த்தியே! எங்களுக்குத் தங்களை இன்னவிதம் தான் புகழ்ந்து கூறுவது என்பது தெரியவில்லையே! அதற்குக்கூட அருகமில்லாத இந்த மானிடரெனப் பெயர்வகித்த மரங்கள் இருந்து பலனென்ன? அடடா! என்ன அருமையான விஷயங்கள்! அதனைக் கேட்கும்போதே எங்களுடைய தேகம் மயிர் சிலிக்கின்றதே." என்று பலவாறாய்க் கூறினர்கள். அப்போது அந்தவிடம் இன்னவிடத்திற்குத் தான் ஒப்பு என்பதை உவமித்துக் கூறுவதற்கு இயலாத ஆநந்த மண்டபமும் அற்புதகாக்ஷியுமாகவே இருந்தது. பிறகு பாட்டுக்கச்சேரி நடைபெறலாயிற்று. தேவாமிருதத்தை அள்ளித் தெளிப்பது போலான குயிலினுமினிய குரலையுடைய ஓர் மாது சிரோன்மணி வாய்ப் பாட்டுபாடவும், அதற்கு ஜோடியாக பிடிலும் மிருதங்கமும சேர்ந்து வெகு நேர்த்தியான கச்சேரி அதிவிமரிசையாய் இரவு 10-மணிவரையில் நடைபெற்றது. அதற்குப் பின்னர், முதலியார் ஜாதிக்குண்டான சடங்குகளெல்லாம் நடந்து போஜனமும் முடிந்த பின்னர் தாம்பூலந் தரித்துக்கொண்டார்கள். அன்று ஒருவருடன் ஒருவர் என்ன பேசுவதென்பதையே மறந்து, யாரைப்பார்த்தாலும் அன்று நிகழ்ந்த விஷயங்களையே பேசிக்கொண்டிருந்தும், அவரவர் புதிதாக அடைந்து புனர்ஜென்மமெடுத்த மனிதர்களைக் கண்டுகளித்தும், மாணிக்க முதலியார் மீது வந்த அபாண்டமான குற்றம்விலகியதற்கு மகிழ்ந்தும் இருந்தார்கள்.

இது இங்ஙனமிருக்க, வைதேகி தன் மனத்திலிருந்த ஒரு முக்கியமான விஷயத்தை தனது தாய் தந்தையருடன் கூற எத்தனித்துக் கூட நாயுடுகாருவையும், தனது ப்ராணபதியையும் அவரது அன்னை, அக்காள் முதலிய எல்லோரையும் வைத்துக்கொண்டு "எனது உயிர்நிலையாகிய ஏனையோருக்கும் வந்தனம். நான்கள்ளர்வீட்டில்ஜன்னலிலிருந்து கீழே விழுந்து தப்பித்துக்கொண்டு வந்ததருணம் எனது இடரைத் தீர்க்க இடை வழியில் வீற்றிருந்த விநாயகக் கடவுளை நாம் மிகுந்த சந்தோஷமான இக்கோலத்தோடுசென்று தரிசித்துவரவேண்டும். அதைச் செய்தால்தான் என் மனம் நிம்மதியடையும். அன்று

அந்த ஆறுமுகன் பாலகனை தரிசித்து அவனடியில் தஞ்சமென்று சரணம் புகுந்ததற்கு உடனே அந்த ஆறுமுகன் பாலகனான ஆனைமுகத்தவன் எனக்கோர் ஆறுதலையுண்டாக்கினான். ஆதலால் அதை முதலில் செய்யவேண்டுமென்று வணக்கமாகக் கூறினாள். இதைக்கேட்ட அவளது "அன்னையும் மாமியும் அம்மா! உன்னிஷ்டப்படியே செய்வோம்; அதற்குத் தடையில்லை. நீ அந்த கணபதியை ஆறுமுகன் பாலகனே என்றுகூறுவது தப்பிதமன்றோ! அவன் ஆறுமுகனுக்கு மூத்த சகோதரனல்லவா? அவ்வாறு சொல்லாதேயம்மா" என்று வெகுவாஞ்சையோடு கூறினார்கள். இதைக்கேட்ட நாயுடு சிரித்துக்கொண்டே "அதற்குத் தகுந்த அர்த்தம் இருக்கின்றபடியால்தான் அதை அவ்வாறு கூறினாள். அதைக்கேட்டால் தெரியும்" என்றார். அதற்குள் வைதேகி பேசத்தொடங்கி, "அம்மா! அன்னவர் ஆறுமுகனுக்கு சகோதரன் தான்; அது தெரியாமல் சொல்லவில்லை. நான் சொல்லியதன் கருத்து வேறு. ஆறுமுகன் பாலகனே என்றால் ஆறுமுகனுடைய பிள்ளை என்று அது குறித்ததல்ல; நமது தாய்ப்பாஷையில் ப (Pa) என்றும் ப (Ba) என்றும் பதம்சப்தத்தில் மாறுகின்றதேயன்றி எழுத்தில் ஒன்றாயிருப்பது போல அந்த ஆறுமுகன் பாலகனே என்றதற்கு பொருள்:—வள்ளி நாயகியை ஆறுமுகக் கடவுள் மணம் புரிவதற்காக தமது அண்ணனாகிய விநாயகக் கடவுளின் உதவியைத் தானே நாடி காரியத்தை முடித்துக் கொண்டார். அந்த விநாயகர் யானையாக வந்து வள்ளியைப் பயமுறுத்தி ஆறுமுகனுக்கு அபயமளித்துக் காத்துப் பரிபாலித்ததனால்தானே வள்ளியம்மனை திருமணம் செய்துகொண்டார். அந்த சமயம் ஆறுமுகனை பாலிக்கவில்லையா விநாயகர்? ஆதலால் தான் ஆறுமுகன் பாலகனே! என்னையும் இத்தருணம் பாலிக்கமாட்டாயா? என்று நான் அன்று பிரார்த்தித்தேன். அதையே இங்கேயும் கூறினேன். இதில் தவறுதல் யாது? ஆறுமுகனுக்கு அவ்வமயம் அபயமளித்து பாலித்ததனால் அவர் ஆறுமுகன் பாலகனன்றோ? இதை வள்ளிநாயகி திருமணத்தைப் படித்து அல்லது கேட்டிருந்தால் சுலபத்தில் தெரியுமே. நான் அந்தக் கொள்கையை மனதில்கொண்டுதான் அவ்வாறு சொன்னேன்.

இரண்டாவது; உன் முகத்தைக் கண்டதும் எனது துயரத்தைப் போக்கி ஆறுதலையளித்த பிள்ளையாரே! பாலகனே! என்றும், மூன்றாவது "அவரது முகத்திலிருந்து நீண்டு தொங்கும் துதிக்கையானது நம்பரில் (6) போல நீண்டு நுனியில் சுருண்டுமிருப்பதால் அதைப் போன்ற நம்பரை முகத்திலிருந்து தொங்கவிட்டுக் கொண்டிருக்கின்ற பாலகனே என்பதற்கு ஆறுமுகன் பாலகனே என்றும், அந்த (6) ஆறு போலுள்ள துதிக்கையைக் கண்டதும் என் மனதிற்கு "ஏ! பெண்ணே என் முகத்திலுள்ள (6) ஆறைக்கண்டு ஆறு-ஆறுதலடை" என்று கூறுவதுபோல விருந்ததால் நான் உடனே ஆறுதலடைந்து

ஆறுமுகன் பாலகனே! என்று கூறினேன். இதில் என்ன தப்பிதம். நிற்க இன்னொரு அர்த்தமு மிருக்கின்றது.

அதாவது காளமேகப் புலவர் பாடியுள்ள செய்யுளில்

“ சங்கரற்கு மாறுதலை சண்முகற்கு மாறுதலை
ஐங்கரற்கு மாறுதலையானதே—சங்கைப்
பிடித்தோற்கு மாறுதலை பித்தாநின் பாதம்
படித்தோற்கு மாறுதலை பார்.”

என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் முதலடியில் ‘சங்கரற்கு மாறுதலை’ என்றதன் பொருள். சங்கரற்கு (6) ஆறுதலை என்று பொருள் குறித்ததல்ல. சங்கரர் சதா ஆற்றை (கங்கையை) தலைமேல் வைத்திருப்பதனால் ஆறுதலை என்று கூறியிருக்கிறார். ஆற்றை தலைமேல் வைத்திருப்பதனால் அது முகத்திற்கும் சேர்த்து குறித்ததல்லவா. முகம் என்பதற்கு தலை என்பது பொருள். இவ்வாறு அனேக இடங்களில் சந்தர்ப்பத்திற் கேற்ப பொருள் கூறுவது இயல்பாக இருக்கின்றது. ‘ஊர் அடங்கிற்று.’ என்பதில் ஊர் என்பது இடம் என்கிற அர்த்தத்தைக் கொடாமல் ஊரிலுள்ள ஜனங்கள் என்ற அர்த்தத்தைக் கொடுப்பதுபோல இதில் ஆற்றை தலையில் உடைய சிவனே என்பதற்கு ஆறுமுகனே எனவும் கூறலாம். சிரசிற்கு மூலாதாரம் முகமன்றோ? ஆற்றைத் தலைமேல் கொண்டுள்ளதால் முகத்திற்கும் அது பொருள் கொடுப்பதால் ஆறுமுகம் என்று சந்தர்ப்பப் பொருள் கூறலாமல்லவா? அத்தகைய ஆறுமுகனுக்கு மூத்த குமாரனுயுள்ள விநாயகரை ஏன் ஆறுமுகன் பாலகன் எனக்கூறலாகாது? மேலும் அவர் ஆறுமுகனைக் காப்பாற்றியதனால் ஆறுமுகன் பாலகனே என்று கூறினேன். அன்றியும் கிருஷ்ணனுக்கு கோபாலன், கோபாலகன் (பசுக்களைக்காப்பவன்) என்றும் அரசருக்கு பூபாலர், பூபாலகர் (பூமியைக் காப்பவர்) என்றும் பெயர்கள் வழங்கி வரவில்லையா? ஆதலின் பாலகன் என்பது காப்பவன் என்றும் பொருள்தருவதாலன்றோயான் அவ்விதம் கூறினேன்? அன்பீர்காள்! நான் என்னவோ கல்வியைக் கசடறக்கல்லாதபேதை. என்னவோ என்பொழுதுபோக்கிற்காக என்பாட்டி எனக்கு வாங்கிக்கொடுத்த புத்தகங்களை நான்படித்து வந்தேனுகையால் இந்த அர்த்தங்கள் எனது யூகையால் விளங்கின. அதை சமயத்திற்கும் சொல்லிவிட்டேன். அறிவிற்சிறந்த வீரசிங்கமாகிய நாயுடுகாருவும், அவரது நண்பர்களான எனது பிதாவும், பர்த்தாவும், இன்னுமிங்கிருக்கும் பெரியோரும், இதில் பிழைகளிருந்தால் மன்னிக்கவேண்டுமாய் சிரம் பணிந்து வேண்டுகின்றேன்.” என்று கூறி எல்லோரையும் வணங்கினாள். இதைக்கேட்ட எல்லோரும் சிரித்துக்கொண்டே “பேஷ்! பேஷ்! வைதேகி! நீ கூறிய அர்த்தம் ஆழ்ந்த கருத்தோடும், வேடிக்கையாகவும் இருக்கின்றது. ஆறுமுகனை வள்ளிநாயகி மணக்கும்பொருட்டு விநாயகர்வந்து காப்பாற்றி

யதற்காக, ஆறுமுகனை பாலித்தவனே என்கிற பொருளோடு ஆறுமுகன் பாலகனே என்றும், ஆற்றைத்தலையில் வைத்துள்ள சிவனின் குமாரனென்பதற்கு, ஆறுமுகன் பாலகனே என்றும் இவற்றை எல்லாம்விட வேடிக்கையானது துதிக்கை (6) போலவிருக்கும் முகத்தையுடைய பிள்ளையாரே! பாலகனே! என்பதற்கு, (6) ஆறுமுகன் பாலகனே என்று கூறியது வெகு அழகாயிருக்கின்றது. வைதேகி! நீ கேவலமான தாசி வீட்டில் வளர்ந்தும் நல்ல அறிவை நிகழ்த்தக்கூடிய புத்தகங்களை எல்லாம் படித்து புத்தி விசாலத்தோடு இருப்பது வெகு சந்தோஷமாயிருக்கின்றது" என்றார்கள். இதற்குள் வைதேகியினது தாய் தந்தையர்கள் "கண்மணி வைதேகி! உன்னிஷ்டம் போலவே நாளைக்கே சென்று அந்த ஆறுமுகன் பாலகனை தரிசித்து வருவோம். நீ கவலைப்படாதே" என்றுகூறி மறுநாள் வினாயகர் கோவிலுக்குப் போவதற்காக முடிவு செய்துகொண்டார்கள். பிறகு எல்லோரும் நித்திரைக்குச் சென்றார்கள்.

மறுநாள் கங்கணவிசர்ஜனமும் அன்று நடக்கவேண்டிய மற்ற சடங்குகளெல்லாம் நிறைவேறிய பின்னர் எல்லோரும் ஒன்றுகூடி மேளவாத்தியத்துடன் வினாயகர் கோயிலுக்குப் புறப்பட்டார்கள். வினாயகருக்குத் தங்க ஜரிகையிலான துப்பட்டாவையும், அபிஷேகங்களுக்குரிய திரவியங்களையும், நைவேதனப் பொருள்களையும், எடுத்துக்கொண்டு மணமகனையும் மணமகளையும் தனிவண்டியில் ஏற்றி முன்னால் வண்டியை விடச்செய்து மற்ற எல்லோரும் அனேகவித வண்டியில் ஏறிக்கொண்டு வினாயகர் கோவிலை நோக்கிப் புறப்பட்டார்கள்.

முதல் வண்டியில் தனிமையில் விடப்பட்ட காதலரிருவரும், "பிரிந்தவர் கூடினால் பேசவும் கூடுமோ" என்னும் பழமொழிக்கிணங்க இன்னது பேசுவதென்பதை யறியாது விழிக்கின்றார்கள். வைதேகி மனதில் ஆனந்தம்மீறி பொங்கி எழுந்து கண்ணீர்பெருக அவள் வண்டியிலிருந்தபடியே வண்டியருகில் யாருமில்லை என்பதையுமுணர்ந்தும் அவள் ஏறிச்செல்லும் வண்டி பெட்டி வண்டியாகவிருந்தபடியினாலும், அவள் எழுந்து தனது உயிர்நிலையாகிய ராமாம்ருதத்தின் சரணங்களில் பணிந்து பாதத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கண்ணில் ஒற்றிக்கொண்டு தனது கண்ணீரால் அந்த பாதத்தை சுத்தி செய்வதுபோல கண்ணீரை பாதத்தில் வழியவிட்டு, தாமரைமலரால் அர்ச்சிப்பது போல கண்ணாகிய தாமரை மலரால் பாதத்தை அர்ச்சித்து மெய்மறந்திருக்கும் சமயம் ராமாம்ருதம் சுற்றுமுற்றும் பார்த்து, "ஆ! ஹா! கண்மணி! உன்னை யடைந்த என்பாக்யமே பாக்யம். எழுந்திரு" என்று அவளை அன்பாக எடுத்துப் பக்கத்தில் உட்காரவைத்து "மாற்றிலாத் தங்கமே! அடடா! இந்த உலகத்தில் எல்லாப் பொருள்களுக்கும் ஓர்விலையுண்டு. உன்னைப் போன்ற கற்பை ஆபரணமாய்ப் பூண்டுள்ள மடமயிலுக்கு ஓர் விலையுமுண்டோ? அதனிலும் உன்னிடத்துள்ள ஓர் காருண்ய குணத்திற்

கும் அன்பின் அழகுக்கும் இந்த ஈரேழுபுவனங்களையும் வைத்தா லும் ஈடாகாதே. மங்கையர்கரசியே! மதிமுகத்துமாமணியே! அடடா! எல்லாவற்றையும்விட நீஎனது அம்ருதவல்லியின்தங்கையாகவிருக்கும் அதிசயத்தை எண்ண என்ஞல் இன்னதென்று கூறவே முடியவில்லை. நேற்றையதினம் நடந்த காக்ஷிகளை ஆயிரம் நாவையுடைய ஆதிசேஷ ஞலும் வர்ணிக்கமுடியாதே. கண்ணின் கருமணியே! என்ன பேசா திருக்கின்ருய்.?" என்று அன்பாய்க் கேட்டார். இதைக் கேட்ட வைதேகி "எனது இன்பநிலயம் போன்ற மன்ஞ! நான் எதைப் பேசு வதென்றே எனக்குத் தெரியவில்லை. தங்கள் பாதாரவிந்தத்தின் எழி லொன்றே என் மனத்தையும் கண்ணையும் கவர்ந்து செல்வதால் நான் அதனடிமை. அதுவே எனதுஉயிர். அதுவே எனது சாதகம் என்றே நான் எண்ணியிருக்கின்றேன். இன்னும் நம்முடைய மனதிலிருக்கும் ஆநந்தங்கள் சற்று நீங்கி, நாம் பேசுவதற்கு இன் னும் 10 தினமாகிலும் செல்லுமென்று நினைக்கின்றேன். நாதா! தங்களை யடைந்ததனுலுண்டான ஆநந்தத்தைவிட வேறு ஆநந்தங் கள் எனக்கு ஒரு பொருட்டாய்த் தோன்றவில்லை. ஆனல் என் தந்தையாரின் மரணம் நீங்கி, தாணியில் என்னை யடைந்தது அவருக்குச் சந்தோஷமாகவே இருக்கும். அந்தச் சந்தோஷத் திற்குக் காரணமும் நான் தங்களை யடைந்து மகிழ்வதற்குக் காரண மும் நான் அவர்கள் வயிற்றில் பிறந்ததே முதன்மையாகையால் அதை யும் இதற்குச் சமமாக எடுத்துக்கொள்கின்றேன்.

ராமாம்:—கட்டிக்கரும்பே! மணம் கமழ்ந்த மல்லிகையரும்பே! ஆஹா! நான் கிரைக்காரி வீட்டிலிருந்து திரும்பி வந்தபோது அடைந்த துக்கத்தை என்ஞல் விளக்கவே சாத்யமில்லை. என் மனம் அதை நினைக்க இப்போதும் நடுங்குகின்றது. ஈசன் அருள்பூர்ண மாயிருக்கின்றதென்பது இந்த சந்தர்ப்பத்தில்தான் நிதர்சனமாக தெரிகின்றது. கண்ணே! நீ எனக்கு முதல் நாள் காவில் மருந்து போட்டபோதே நீ அம்ருதவல்லிபோலத் தோன்றியது. அத ஞல்தான் அம்ருதவல்லியின் தங்கையாகவே வந்தாய்" என்ருர். இதற் குள் வண்டி கோயிலை சமீபித்து விட்டபடியாலும், வண்டி இனி அவ்விடம் செல்லாதாகையாலும், நடந்தே செல்லவேண்டி எல்லோ ரும் அந்தத் தோட்டத்தருகில் இறங்கி தோட்டத்தைக் கடந்து சென்று கோயிலை யடைந்தார்கள். அன்று காலையிலேயே நாயுடு 10 ஆள்களை யனுப்பி அங்கு நன்ருகப் பெருக்கி பந்தல்கள் போட்டு இடத்தை சுத்தி செய்யும்படி உத்திரவிட்டு அனுப்பியிருந்த படியால் அவர்கள் அவ்வாறே செய்திருந்தார்கள். மேள வாத்தியத் தோடு சென்ற எல்லோரும் விநயகரைத் தரிசித்தார்கள். இவர்க ளோடுகூட வந்திருந்த குருக்கள் அபிஷேக, நைவேதன ஹாரத்தி எடுத்துப் பூஜை முதலியன செய்து இவர்கள் கொண்டுவந்திருந்ததுப் பட்டாவை சாத்தி பலவித மாதுர்யமான அன்னங்களை எல்லாம்

விநாயகருக்கு நைவேதனம் செய்தார். வைதேகியும் ராமாம்ருதமும் பல வித ஸ்தோத்திரம் செய்து வணங்கி "அப்பனே! விநாயகக்கடவுளே! ஆறுமுகன் பாலகனே! எங்களை என்றும் பாலிக்கவேண்டுமப்பா! என்று வேண்டிக்கொண்டதும் வைதேகி முன்னாளைய இரவைப்போல எல்லோரையும் கண்டு, "அன்பீர்காள்! இந்தவிநாயகர் இனி இந்த இடிந்த கோயிலில் வீற்றிருக்க என்மனம் சகிக்கவில்லை. இன்று முதலே இங்கு பெரிய கோயில் கட்டி இதைச் சுற்றியுள்ள இடங்களில் வீடுகளையமர்த்தி, மனிதர்களைக் குடியேற்றி இதற்கு தர்ம கர்த்தராகவும் இந்த சிற்றூருக்கு முதலாளியாகவும் எனது நாதருடைய தோழரை (பரமசிவத்தை) நியமித்து தினந்தோறும் பூஜை, உற்சவம் முதலிய எல்லாம் நடத்தும்படிக்குக் குருக்களை ஏற்படுத்தி, இதற்கு மூலதனம் ஒருலக்ஷம் ரூபாய் வைத்து இதற்காகும் செலவை நாம் போட்டுச் செய்யவேண்டும். நீங்கள் எல்லோரும் என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று சொன்னாள். அதற்கு எல்லோரும் ஆமோதித்து, அவ்விதமே செய்வதாக அவளது தாய்தந்தையர் கூறினார்கள். பிறகு எல்லோரும் தரிசனத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்பினார்கள்.

கல்யாணமெல்லாம் வெகுவிமரிசையாக நடந்தேறியதும் சோபன முகூர்த்தம் நடந்தேறியது. பின்னர் ராஜாராம் நாயுடுவிற்கு லக்ஷக் கணக்காக பாத காணிக்கை சமர்ப்பித்து அனேக உபசார வார்த்தைகளைக்கூறி அவருக்குத் தமது மனப்பூர்வமான நன்றியறிதலைக் காட்டினார்கள். வைதேகியின் பெற்றோர்களும் ராமாம்ருதமும் கொடுத்த பரிசைப் பெறுவதற்கு நாயுடுகாரு எவ்வளவோ மறுத்தும் இவர்கள் அவரை எவ்விதமாகிலும் பெற்றுக்கொண்டால் தான் எங்கள் குலம் விளங்கும் என்றுகூறி அவரை எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளும்படிக்குச் செய்தார்கள். பிறகு கூனற்கிழவிகேட்டுக்கொண்டபடியே நாயுடுகாரு வைதேகியையும் ராமாம்ருதத்தையும், வைதேகியின் பெற்றோரும்கூட வருவதாகச் சொன்னதால் அவர்களையும், கூனற்கிழவி படுத்திருந்த ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்று கூனற்கிழவிக்கு வைதேகியையும் அவளது மணவாளனையும் ஜோடியாக நிற்க வைத்துக் காட்டினார். கூனற்கிழவி அப்போது வெகு பரிதாபகரமான நிலைமையில் படுத்திருந்தாளாதலால் அவளுடைய உயிர் வெகுநாள் தங்காத நிலைமையிலிருந்த படியாலும் அவளால் பேசவேமுடியவில்லை என்றாலும் வைதேகியைக் கண்டதும் அவளுக்கு வளர்த்த பாசம் தோன்றி கிழவியைப் பேசும்படிக்குச் செய்தது. கிழவியைக் கண்ட வைதேகி பெரிதும் விசனித்துஇளகிய மனத்தினளாய்வருத்தத்தோடு 'பாட்டி! எல்லாம் விதியின்பயனே யன்றி வேறொன்றுமில்லை. உம்; யார் விதி யாரைவிட்டது. நான் ஒருவித மனுபவித்தேன். நீங்கள் ஒரு வித மனுபவித்தீர்கள்.'' என்று கூறி தான் கிழவிக்கு மயக்கமருந்து கலந்த ஆகாரத்தைப் போட்டபிறகு நடந்த எல்லாவிஷயங்களையும் கூறி

முடிவில் "பாட்டி! நீங்கள் என்னை அன்போடு வளர்த்ததால் தானே என் பெற்றோருக்குப் பெண்ணானேன். தங்கவேணியை விற்றதுபோல என்னையும் விற்றிருந்தால் என் கதியின்னும் என்னவாகி யிருக்குமோ உம். பழைய கதையைப்பற்றி பேசிப் பயனென்ன? தங்களுக்குஉடம்பு எப்படி இருக்கின்றது?" என்றாள். இதைக்கேட்டகூனற்கிழவி கண்ணீர் பெருக, பேசமுடியாமல் திணரத்திணர "என் கண்ணே! வைதேகி! அன்று நீயுரைத்த புத்திமதிகளைக் கேட்காமல் போனதனால் இவ்வித துன்பமெல்லாம் அனுபவிக்கிறேன். உன்னைப் பிடித்த சனியனாகிய நான் துலைந்துவிடும் காலமும் நெருங்கிவிட்டது. இனி உன் பெற்றோருடனும் பிராணபதியுடனும் சுகமாகவாழ்வாயாக" என்றுகூறி பங்கஜவல்லியைக் கண்டு "அம்மணி! என்னுடைய துற்புத்தியினாலும் தீவினையினாலும் செய்த தவறுதலை நானே ஒப்புக்கொண்டேன். என்னை மன்னிக்கவும்" என்றாள். அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை அயர்ந்துவிட்டாள். உடனே வைதேகி தன்கையிலிருந்த ஒருஆயிரம்ரூபாய் நோட்டை கிழவியிடம் கொடுத்து "பாட்டீ! தாங்கள் செய்துள்ள பாபத்திற்கு சற்று பரிகாரமாக இந்த ரூபாயை தங்களிஷ்டப்படி தான தருமம் செய்து பின்னர் உயிரைத் துறவுங்கள்" என்று கூறி அவளிடம் கொடுக்க கிழவி சற்றுயோசித்து அதை வாங்கிக்கொண்டு இவர்களைப் பெரிதும் புகழ்ந்து கூறினாள். உடனே எல்லோரும் வீடு திரும்பினார்கள்.

பிறகு 7,8 நாள் வரையில் வந்தவர்களெல்லாம் விருந்துண்டு மகிழ்ந்து தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். விநாயகர் கோயிலை பெரிதாகக் கட்டுவதற்கு அன்றே ஆரம்பித்துவிட்டார்கள். வைதேகியின் பெற்றோரும் ராமாம்ருதத்தின் வீட்டாரும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலுக்கு தம்பதிகளை அழைத்து வந்து அன்று பிரம்மாண்டஉற்சவம் செய்துசுமார் ஒருலக்ஷ ரூபாய்வரையில் அன்று செலவழித்து அந்தக் கோவிலுள்ள சகல பெருமாள்களுக்கும் திருமஞ்சனம் நைவேதனம் செய்து, உயர்ந்த பீதாம்பரங்களும் ஆபரணங்களும் சமர்ப்பித்து, அன்று சுமார் ஆயிரம் பிராமணர்களுக்கு பெரிய ததியாராதனை நடத்தி, வேஷ்டி, புடவை முதலிய தானங்கள் கொடுத்து ஸ்ரீ ராமமூர்த்திக்கும் வைதேகிக்கும் வைரத்தினாலான ஆபரணங்களை சமர்ப்பித்து எல்லா பெருமாள்களையும் தரிசித்துக்கொண்டு வீடு திரும்பினார்கள். அப்படியே இன்னு மற்ற கோயில்களிலும் செய்தார்கள். ராமாம்ருதத்தின் வீட்டாரும் நாயுடுவின் வீட்டாரும் புருஷோத்தம ப்ரபுவின் பங்களாவிலேயே தினம் விருந்துண்டு மகிழ்ந்து நித்ய கல்யாண வைபோகத்திலிருக்கின்றார்கள்.

இதற்கு மத்தியில் கொள்ளைக் கூட்டத்தாருக்கு சட்டப்படி உள்ள தண்டனையை விதித்தார்கள். சாரங்கபாணி தான் வேண்டு

மென்று செய்யாமல் ஒருவரின் தூண்டுதலின் மேல் கொலை செய்திருக்கிறபடியால், அவனுக்கு மரணதண்டனை விதிக்காமல் ஆயிசு பரியந்தம் சிறைவாசம் விதிக்கப்பட்டது. கூனற்கிழவி இப்பவோ பின்னையோ என்ற மரண தருவாயிலிருந்தபடியால் அவளுக்கு தண்டனையே விதிக்கவில்லை. அவள் உடனே இறந்தும் விட்டாள். சாரங்கபாணியின் தந்தையான கிழவர் தன் மகனுக்கு ஏற்பட்ட துக்கத்தைத் தாங்காமல் வருந்தியே உயிர் துறந்துவிட்டார். ஜெமீந்தாருக்குப் பதிலாக மாண்ட வேலைக்காரனின் தந்தையாகிய முனியாண்டியின் பெண்டாட்டியிடம் நாயுடுகாரு சென்று உண்மையான வரலாற்றைத் தெரிவித்தார். அநியாயமாய்த் தன் கணவனிறந்ததற்காக அவளுக்கு ஜெமீந்தார் 5 ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, தேறுதல் கூறி அவர்களையே தமது வேலைக்கும் வைத்துக்கொண்டார். பிறகு நாயுடுகாரு காமாக்ஷியின் பூர்வீக ஊருக்குச் சென்று சகலமான உளவுகளையும் இவர்களைப்பற்றி விசாரித்து இவர்களை ஓட்டாண்டியாக்கி வீணாக பணத்தை எல்லாம் பறித்துக்கொண்டு நிலம்புலங்களை எல்லாம் ஏலத்தில்விடச்செய்த நண்பர்களில் சிலரைக் கண்டு பிடித்து மோசக் குற்றத்தில் அவர்களைத் தண்டித்து போனது போக மிகுதியுள்ள ஜெமீனை இவர்களுக்குப் பழையபடி வாங்கி வைத்தார். காமாக்ஷி புருஷனும் நல்புத்தி வந்து உலகத்தவரைப்போல ஒழுங்காக நடக்கத் தலைப்பட்டார். அவர்கள் முன்போல தமது சொந்த ஊருக்குச் சென்று ஜெமீந்தாராக ஆனார்கள். நாயுடுகாரு ஆராய்ந்த விஷயத்தில், காமாக்ஷி மாணிக்க முதலியாரின் தங்கை என்பதை பலவிதமான சாக்ஷிகளோடு கண்டுபிடித்துவிட்டார். பிறகு கூடிய சீக்கிரத்தில், காமாக்ஷியின் இளைய குமாரியான கௌரியை, பரமசிவத்திற்கு வைதேகியும் ராமாமிருதமும் சேர்ந்து விவாகஞ்செய்து முடித்தார்கள். முத்துகுமாரத்தி நாடகத்தில் ஆடினாள் என்ற வசைக்காக அவளை தமக்கு சமமதையாக அல்லாத ஒருதனிகர் மணந்தார். காமாக்ஷியின் பிள்ளைக்கும் மாணிக்க முதலியாரின் புத்திரியைக் கொடுத்து மணம்புரிவித்தார்கள். சில மாதத்திற்குள் விநயகர் கோயிலும் கட்டிமுடிந்தது. அந்தக் கோயிலைச்சுற்றி சிறிய கிராமமும் ஏற்படுத்தி பரமசிவத்தை அந்த சிற்றூருக்கு முதலாளியாக ஏற்படுத்திவிட்டார்கள். ஊரளந்தார், அடியளந்தார் ஆகிய இருவரும் புருஷோத்தமப் பிரபுவிற்கு சற்று பரிச்சயமாகையாலும் அவர்கள் ஜாதியில் பிராம்மணர்களாகையாலும் அவர்களை அந்த விநாயகர் கோயிலுக்கு பூஜைசெய்யவும் இன்னும் மற்ற காரியங்களை பார்க்கவும் நியமித்தார்கள்.

வைதேகி தன் ப்ராணபதியின் மனமும், பெற்றோர், மாமி நாத்தி முதலியோருடைய மனமும் சற்றும் கோணாமல், வெகு ஒழுக்கமாய் நடந்துகொண்டு அவர்களைக் களிப்பித்து ஆனந்த மடையச்செய்வதையே கண்ணும் கருத்துமாய் சதா தன் நாய

கனுடன் முகஉல்லாசமா யிருந்து எல்லோருக்கும் பரமானந்த சுகத்தை அள்ளி வீசிக்கொண்டே வருகின்றாள்.

"வினை விதைத்தவன் வினையறுக்கின்றான்; தினை விதைத்தவன் தினை யறுக்கிறான்" என்ற பழமொழியைப்போல இக்கதையில் தீமையையே எண்ணி செய்துகொண்டு வந்தவர்கள் இறுதியில் தீமையே அடைந்தார்கள். நன்மையேஎண்ணி சதாதெய்வம்தொழுது தனது கற்பையே தன்னுடைய உயிராகவும், வேசைஜாதிமாதெனவிருந்தும் அதனைக் கைவிடாது, கடைபிடித்து வந்த வைதேகியடைந்த பலனையும் இக்கதையினால் நன்கறிந்துக் கொள்ளலாம்.

வைதேகி 2, 3 வருஷத்திற்குப் பின்னர் ஓர் ஆண் குழந்தைக்குத் தாயானாள். தான் மனைக்குகந்த மங்கையர் திலகமாக நீடூழி செழித்து, மங்களகரமாய் என்றும் நித்யசுகத்தை யனுபவித்துக் கொண்டே செல்வராஜனைப் பெற்ற செல்வச் சீமாட்டியாக, கண்டோர் கொண்டாட, கணவன் களியுற, பெற்றோர் பூரிக்க, பணிமக்கள்போற்றிட, பூதலத்திற்கே புகழ் கொடியாகவும், கற்பிற்கு உறைவிடமாகவும் மற்றைய குணங்களுக்கெல்லாம் நிலையமாகவும், ஒழுக்கமற்ற ஜனங்களும் இவளைக்கண்டு நல்லொழுக்க நன்னடையில் தாமாகவே ஒழுகும்படியான வசீகரத் தன்மையோடும், தெய்வபக்தியில் சிறந்த சிரோன்மணியாகவும்,

"தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை"

என்றபடியே கணவன் மனம் கோணாமல் சகலவிதமான செல்வத்தையும் சம்பத்தையும் பெற்று நித்யகல்யாண வைபவத்துடன் சகலமானவர்களும் புடைசூழ வாழ்ந்து வருகின்றாள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வைதேகி

முற்றிற்று.

182829

Printed at the Noble Press, Triplicane, Madras. S.E.,

# "கிருஷிகன்"

## ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள்:—

**(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு**
பென்ஷண்ட் விவசாய டேப்டி டைரெக்டர்

(2) J. R. **ரங்கராஜு**

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

சௌமியஹூ சித்திரைமீ முதல் எட்டு வருஷ காலமாய் தேதி தவருமல் பிரதி தமிழ்மீ முதல் தேதிகளில் "கிருஷிகன்" வெளிவந்துலாவியதும், அப்போது நடநத "பெரும் ஐரோப்பிய சண்டையில்" யுத்தம் புரிந்து வந்த ராணுவ வீரருக்குக் காய் கரிகள் பயிரிட்டுக் கொடுப்பதற்காக சர்க்காராரின் வேண்டுகோளுக் கிணங்கி கிருஷிகன் பத்திரிகாசிரியாரான ஸ்ரீமான் J. R. ரங்கராஜா அவர்கள் மெஸபிடோமியாவுக்குப் போவதெனத் தீர்மானித்து சந்தாதாரருக்கு முன்கூட்டி அவ்விஷயத்தைத் தெரிவித்ததோடு சந்தாதாரருக்குப் பாக்கியன்னியில் பத்திரிகை அனுப்பி விட்டு பின் நிறுத்திய விஷயம் சந்தாநேயர்கள் அனைவரும் அறிந்ததே. அப்பால் பத்திரிகாசிரியருக்கு ஏற்பட்ட பல சங்கடங்களாலும், காகிதக் கிரைய உயர்வாலும் பத்திரிகை மறுபடியும் துவக்க வில்லை.

சென்னை விவசாய டிபார்ட்மெண்ட்டில் மிகக் கியாதியாய் 30 வருஷங்களுக்கு மேல் வேலை செய்து வந்ததற்காக கவர்ண்மெண்டாரால் ராவ்பஹதூர் பட்டம் அளிக்கப் பட்டவரும், தமிழ் ஜில்லாக்களிலுள்ள "கிருஷிகன்" நண்பர் என எல்லோராலும் மதிக்கப் படுபவருமான ஸ்ரீமான் ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜா அவர்களும் பத்திரிகாசிரியராய் இருப்பதாய் ஒத்துக்கொண்டதால் இவ்விரு பத்திரிகாசிரியர்களின் ஆதீனத்தின் கீழ் முன்னிலும் மேன்மைப் பட்டு விளங்குமென்பதில் சந்தேகமில்லை.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக் கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவேகிடையா தென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைச் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

"கிருஷிகன் அக்ஷயஹூ சித்திரைமீ முதல் தேதி முதல் வெளிவந்திருக்கிறது. வி. பி. மூலமாய் அனுப்பினுல் ரிஜிஸ்ட்ரேஷன் கூலி சேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

**மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,**
ஜெகந்நாதபாக் சைதாப்பேட்டை, சென்னை.

குறிப்பு:—சென்றமாத சஞ்சிகையில் 456-வது பக்கத்தில் ஸ்ரீமான் வடுவூர் கே. துரைஸாமி அய்யங்காரவர்கள் இந்த அதிகாரம் முதல் பார்வையிடவில்லை என்று நாம் தெரிவித்திருந்தோம். அவ்விதம் எழுதியது 15-வது அதிகாரம் முதல் பார்வையிடவில்லை என்று தோன்றுமெனத் தெரிந்ததால் 14-வது அதிகாரம் முதலும் இனிமேலும் அவர் பார்வையில்லை என்பதை நாம் இப்போது விளங்கக் கூறுகிறோம்.

கிரந்தகர்த்தா.

## Tamilian Residents of Calcutta!

We have pleasure in informing that

MR. R. VASUDEVAN

c/o. "CAPITAL" LTD.,

Post Box No. 14,

CALCUTTA.

has kindly consented to act as our Honorary Representative there. He is authorised to collect subscriptions and grant receipts on our behalf. This arrangement will save unnecessary postal expense to our intending subscribers. Copies of the journal can be had from him.

JEGANMOHINI OFFICE,

26, Car Street, Triplicane, Madras.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

**குறைந்த சந்தாவில் நடைபெறும் உயர்ந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை**

# எது?

**முன்னிலும் பெரிய அளவில் திருச்சியினின்று வெளியாகி வரும்**

## "நச்சினார்க்கினியன்" தான்.

நாவல், நாடகம், வியாசம், விநோதக்கூற்று, சிறுவர்க்காகும் கதைகள் விடுகதை, விடுவிப்பு வினாக்கள், வெளிவராத நூல்கள், ஒன்றையொன்றிகழாச் சமயக்கொள்கைகள், இந்துதேச சரித்திரக்கதைகள், சைவ வைணவ புராண இதிகாசக்கதைச் சுருக்கம், தமிழ் நூலாராய்ச்சி, சமாசாரக்கொத்து, பரீக்ஷை வினாக்கள், பிறமொழி, நூல்மொழிபெயர்ப்பு, இனிய செய்யுட்கள் முதலியன இதில் வெளிவரும்.

வருட சந்தா ரூ 2 தான். வெளிநாடுகளுக்கு ரூ. 2 8 0

விளம்பர விகிதம்:—பக்கத்திற்கு ரூ. 5 அரைப்பக்கத்திற்கு ரூ. 3 நீடித்த விளம்பரங்களுக்கு சகாய விகிதம்.

இப்பத்திரிகையின் சந்தாதார்க்குரிய நலங்களைப் பத்திரிகையிற் காண்க. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்புக.

**பண்டித: ம. கோபால கிருஷ்ணையர்,**
பத்திராதிபர், "நச்சினார்க்கினிய நிலயம்"
"தெப்பக்குளம் போஸ்ட்."

# காமதேனு.

**ஓர் உயர்தர மாதாந்திர தமிழ்ப்பத்திரிகை.**
பிரதி பௌர்ணமியிலும் வெளிவரும்.

இதில் கிராமமுன்னேற்றத்திற்குறிய முக்கிய விஷயங்கள் ஐக்கிய இயக்கம், கிராமபஞ்சாயத்துகள், விவசாயம், வியாபாரம், பிரதமகல்வி முதலிய எல்லாவிஷயத்தையும் கிராமவாசிகளுக்கு சொற்பசந்தாவில் தெரிந்துகொள்ளும்பொருட்டு இதை நடத்திவருவதால் எல்லாகிராமவாசிகளும் ஐக்கியஸ்தர்களும் இதை ஆதரிக்கவேண்டுகிறோம். சந்தா வருஷம் 1-க்கு ரூபாய் 1—8—0 முன்பணமாக கட்டவேண்டும். விளம்பர விகிதங்களுக்கு பத்திராதிபருக்கு எழுதித்தெரிந்துகொள்ளவும்.

R. ஆனந்தராவ், "காமதேனு" பத்திராதிபர்,
திருத்தங்கல், சிவகாசி மார்க்கம்.

# ஆனந்த போதினி.

தமிழ் நாட்டில் பழமையும் புதுமையும் வாய்ந்ததும், 20000-சந்தாதாரர்களுடையதுமான மாதப் பத்திரிகை இது ஒன்றே. இதற்கு 12-வது வருடம் இப்பொழுது நடக்கிறது. இதுவரையில் சந்தாதாரராய்ச் சேராதவர்கள் இப்பொழுதே சேருங்கள். பிரதிமாதமும் 48 - பக்கங்களுள்ள விஷயங்களுடன் இது வெளிவரும்.

வருடச்சந்தா இந்தியா பர்மா, சிலோன் முதலியவற்றிற்குத் தபாற் செலவு உள்பட ரூ. 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-4-0 மாதிரிக்காபி இனும்.

**ஆனந்த போதினி ஆபீஸ், மதறாஸ்.**

# அமிர்தாஞ்சனம்

அமிர்தாஞ்சனம்




சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரு. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே.
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
சகல நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

உடனே முந்துங்கள்.

மோஹினி தைலம்.
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் டிபோ,**
**7. தம்புச் செட்டி வீதி, சென்னை.**

சென்னை, நோபில் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.